

# ஞானச்சுடர்

மார்கழி

2011



ௐ

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள்வழி



**பணிவுடைய னின்சொல னாதல் ஒருவற்**
**கணியல்ல மற்றுப் பிற.**

பொருள் : ஒருவனுக்கு ஆபரணமாவது பெரியோரிடத்து வணக்கமும் எல்லாரிடத்தும் இனிய சொல்லும் உடையனாதல் இவையல்லாது உடம்பில் அணியும் வேறு ஆபரணங்கள் அணிகளாகமாட்டா.

(95)

**அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை**
**நாடி இனிய சொலின்.**

பொருள் : நன்மைதரும் சொற்களை ஆராய்ந்து ஒருவன் இனிமையாகச் சொல்லுவானாயின், பாவங்கள் கெட்டுத் தருமம் வளரும். (96)

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### தியானமாலை

#### கலிவிருத்தம்



அகரத்தி லுகர மகர மமரும்
உகரத்தி லகரம் மகர முறையும்
மகரத்தி லகர வுகரம் மயங்கும்
சிகரத்தில் கண்டு தெளிந்தவன் சித்தனே 1

ஆதார வாதேய முழுது மானவன்
மாதா நாதனாய் மன்னி நின்றவன்
பூதாதி ஐந்துமாய்ப் பொலிந்த புண்ணியன்
பாதார விந்தம் பரவிக்கண் டேனே 2

இன்றுளோர் நாளை யில்லாமை கண்டும்
பொன்று முடலைப் பொன்போற் போற்றி
நன்றுதீ தென்று நாட்டங் கொண்டோர்
என்று காண்பரோ ஈச னிணையடி 3

# ஞானச்சுடர்



வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை



# ஞானச்சுடர்



வெளியீடு - 2 சுடர் - 168

2011 மார்கழி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| வேலின் மகிமையும்..... | திருமதி ப. நடராஜா | 01 - 02 |
| வித்தகா! உன் ஆடல்..... | திருமதி பா. சிவனேஸ்வரி | 03- 05 |
| சிவ இரகசியங்கள் | இரா. செல்வவடிவேல் | 06- 10 |
| கந்தனே கலியுகத்..... | கே.வி. குணசேகரம் | 11- 13 |
| பிணங்கும் சமயங்கள்..... | இ. லம்போதரன் | 14- 17 |
| கீர்த்தித் திருவகவல் | சு. அருளம்பலவனார் | 18- 19 |
| பக்தி முத்திக்கு...... | சு. இலங்கநாயகம் | 20- 21 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 22- 24 |
| யார் இந்த பாபா..... | இரா. அருட்செல்வம் | 25- 26 |
| திறமைக்கு ஏற்ற..... | ஜக்கி வாசுதேவ் | 27 -28 |
| பரிபாடல் பகரும்..... | சிவ. சண்முகவடிவேல் | 29 -30 |
| குரு உபதேசம் | S.S. றஜீந்திரன் | 31 -32 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | - | 33 -35 |
| சிறுவர் கதைகள் | - | 36 -38 |
| பிரார்த்தனை தினமும்..... | ஐ.கோ. சந்திரசேகரம் | 39 -41 |
| படங்கள் தரும் பதிவுகள் | - | 42 -43 |
| திருவிளையாடல் | ஆறுமுகநாவலர் | 44 -45 |
| நித்திய அன்னப்பணி | - | 46 -47 |
| திருவாவடுதுறை ஆதீனம்..... | - | 48 -53 |
| இயற்கையுடன்..... | ஆறு. திருமுருகன் | 54 -56 |
| எது பண்பாடு? எது..... | செல்வி செ. ஜடா | 57 -59 |
| சைவ நற்சிந்தனை | கு. சோமசுந்தரம் | 60 -61 |
| அவிநாசி லிங்கேஸ்வரர்..... | T. ஸ்ரீரெங்கநாதன் | 62 -64 |


அன்பளிப்பு: மலர் ஒன்று 30/- ரூபா

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இலக்கம்: 0213219599

அச்சகம்- சந்நிதியான் ஆச்சிரமம்



# ஞானச்சுடர் கார்த்திகைமாத வெளியீடு

**வெளியீட்டுரை:-**

கார்த்திகைமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையை இளைப்பாறிய ஆசிரியர் திரு மா. ஞானலிங்கம் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில் ஆற்றங்கரையில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஆற்றங்கரையானின் அருளாட்சி நிறைந்திருக்கும் இவ்வாச்சிரமத்தின் பணிகள் யாவும் சிறப்பானதே. ஆச்சிரமத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் சகல பணிகளும் தூய்மையானதாகவும், ஏதோ ஒரு வகையில் மற்றவர்களும் பயன்பெற வேண்டும் என்ற அவாவுடன் செயலாற்றுவதனாற்தான் ஆச்சிரமமும், ஆச்சிரமத்தின் பணிகளும் மென்மேலும் வளர்ந்துகொண்டு போகின்றது என்பதனை சபையோருக்கு எடுத்துக்கூறி தனது வெளியீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.


**மதிப்பீட்டுரை:-**

கார்த்திகைமாத ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை அதிபர் திரு செ. பரமேஸ்வரன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

தொடர்ந்து தனது உரையில் சந்நிதி வேற்பெருமானின் திருவருள் நிறைந்திருக்கும் இம்மலரை நான் மதிப்பீடு செய்வதென்பது இயலாத காரியம். இருந்தும் ஒரு வரையறைக்குட்படுத்தி மதிப்பீடு செய்கின்றேன் என்றும், இம்மலரானது தொடர்ச்சியாக வெளிவருவதற்கு காரணம் வேற்பெருமானின் திருவருளே என்றும் வியந்து கூறினார்.

மேலும் இம்மலர் அழகான அட்டைப்படத்துடன் இன்றைய உலகிற்கு தேவையான சமயக் கருத்துக்கள் பொதிந்துள்ள கட்டுரைகள், கவிதைகள், பொன்மொழிகள், சுடர் தரும் தகவல் எனப் பல விடயங்களைத் தாங்கி எல்லோரும் பயன்பெறக்கூடிய வகையிலும், பாமர மக்களாலும் விளங்கக்கூடிய மொழிநடையிலும் வெளிவருகின்றது என்றும் கூறி, மலரில் இடம்பெற்ற ஆக்கங்கள் யாவற்றையும் சபையில் கூடியிருந்த அடியார்களுக்கு விளக்கிக்கூறி தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்



முன்னாள் இந்து கலாச்சார அமைச்சரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமாகிய தியாகராசா மகேஸ்வரன் அவர்கள் அமரத்துவமடைந்து, மூன்று வருடங்கள் நிறைவெய்திவிட்ட போதிலும், ஒவ்வொரு வருடமும் தைமாதம் 1ஆம் தேதி உணர்வுபூர்வமாக நினைவு கூரப்படும் மாமனிதராக உயர்ந்து நிற்கிறார். அவர் ஒரு சமயப் பற்றாளர். சமூகப்பணி புரிந்தவர். அவர் இந்து கலாச்சார அமைச்சராகப் பதவி வகித்தபோது, அனைத்து சைவக் கோயில்களுக்கும் தாமாகவே முன் வந்து முடிந்த அனைத்தையும் செய்தமையை- பயன்பெற்றவர்கள் மறக்க மாட்டார்கள். செல்வச்சந்நிதி ஆலயத்தின் புதிய சித்திரத்தேர் உருவாக்கத்தில் பெரும் பங்கு கொண்டதுடன், சந்நிதியான் வடக்குத் திருவீதியில் அமைந்துள்ள பூங்காவன மண்டபத்தினையும் அமைத்துக் கொடுத்தமையையும் அனைவரும் நன்கறிவர்.

பாதை தடைப்பட்டு போக்குவரத்து சிரமமாகியிருந்த வேளையில், அவரது கப்பல் மூலமாக (தேங்காய் எண்ணை முதலான) கோயில்களுக்குத் தேவையான பல்வேறு பொருட்களும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் இறக்கப்பட்டு, வடமராட்சியின் அனைத்துக் கோயில்களுக்கும் விநியோகிக்கப்பட்டமையும் மனம் கொள்ளத்தக்கது. இதைவிட சந்நிதியான் ஆச்சிரமத்தின் தேவையினை அறிந்து- புரிந்து உதவியமை எம்மை நெஞ்சம் நெகிழ வைக்கிறது.

அமரர் அவர்கள் தாம் வாழ்ந்த காலத்தில் சமயத்துக்கும், சமூகத்திற்கும் ஆற்றிய சேவையானது மிகவும் போற்றப்படக் கூடியதொன்றாகவே கருதப்படுகின்றது. அவரது சேவை மூலம் பயனடைந்தவர்கள் இன்றும் அவரைப் போற்றுகின்றார்கள். அந்த வகையிலும் ஆச்சிரமம் அவரது முதலாம் ஆண்டு தினத்தன்று புதிய வைத்தியசாலைக்குரிய கட்டடம் ஒன்றை அவரது நினைவாக அமைத்து அதன்மூலம் பலர் பயன்பெற வழி சமைத்துள்ளது.

நல்லதையே சிந்தித்து நல்லதையே செய்து சமயத்திற்கும்- சமூகத்திற்கும் சேவையாற்றி மறைந்த மகேஸ்வரன் அவர்களின் பணிகளைச் சந்நிதியான் ஆச்சிரமம் நன்றியோடு நினைவு கூருகிறது.

## வாசகர்களே!

## சந்நிதியான் ஆச்சிரம ஞானச்சுடர்

## 14. அகவை முருகனருளுடன் நடந்து வந்திருக்கிறது

### நொண்டிச் சிந்து

தன்னான தானனாத் தானா - தன்னாத
தனனானா தானனாத தந்தனா தானா - தன்னான
உலகத்தில் சந்நிதி முருகன் - அடியாரின்
உள்ளேயும் புறத்தேயும் ஒருவனாய் நின்றே
பலபல ஜீவனுயிர்க் கெல்லாம்- தானே
பண்பான தலைவனாய்ப் பதியாகி நிற்பான்
குன்றுதோ றாடுமெம் குமரன் - அந்தக்
குறிஞ்சிபோல் தொண்டைமா னாற்றில் விளங்கும்
வண்டோடு குயில்பாடுஞ் சோலை - கோயில்
மணிபாட மயிலேறி விளையாடி வருவான்
தண்டமிழ் பாடிடும் அடியார் - குழைந்து
தாளம்போட் டுப்பாட தான்கேட் டினிப்பான்
ஒண்சுடர் அர்ச்சித்துக் காட்டும் - ஐயரின்
ஒப்பில்பூ சைமகிழ்ந்து உயர் முறுவல் பூப்பான்
செந்தினை மாவிடியுந் தேனும் - சிறந்த
தேமதுர முக்கனிகள் படைத்திடும் அடியார்
நெஞ்சிலே கோயில்கொண் டிருப்பான் - அன்னார்
நிலமார கையார வணங்கவும் அருள்வான்
அருளாளன் சந்நிதி முருகன் - துணையால்
ஆச்சிரமச் சபையினர் அவன் வாக்குப் படியே
பொருளான மோகனதாஸ் ஊடே- அன்னமிடும்
பொன்னான பணிதன்னைப் பொறுமைகள் வைப்பான்
பனிக்கொரு குடைவைத்தாற் போல - உலகம்
பாராட்ட ஞானச்சுடர் பதினான்காம் ஆண்டாய்
அனைத்துலகும் சுற்றவெளி யிடுவார் - ஐயன்
அருள்ஞானக் கண்கொண்டு அன்புமழை பொழிவான்
-பெருவாழ்வு தரவேண்டும்.

முதுபெரும்புலவர் வை.க. சிற்றம்பலம்

# மார்கழி மாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

அ. தபேசன்
(இரசாயனவியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

மு. சுஸ்ருதன்
(சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்)

சி. மணிவண்ணன்
(ஆசிரியர், செட்டிக்குறிச்சி, பண்டத்தரிப்பு)

வே. சம்பந்தநாதன்
(கிராமசேவகர், புன்னாலைக்கட்டுவன்)

செ. சுப்பிரமணியம்
(இளை. அதிபர், சாவகச்சேரி)

ம. சிவானந்தன்
(ஆசிரியர், நீர்வேலி தெற்கு)

த. வயித்திலிங்கம்
(திருநெல்வேலி)

சங்கரப்பிள்ளை இரத்தினம்
(கிருஸ்ணா மில், சாரையடி)

செல்வி நற்குணம் விஜிதா
(கூவில், புலோலி தெற்கு)

செ. சின்னத்துரை
(ஆசிரியர், மகாத்மாலேன், நெல்லியடி)

சி. வீரசிங்கம்
(நீதிமன்ற பதிவாளர், கரவெட்டி)

செ. சுரேந்திரா
(சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், அல்வாய்)

சி. சந்திரசேகரம்
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)

K. ஸ்கந்தபாபு
(H.N.B. கிளை, நெல்லியடி)

க. நடராசா
(ஓட்டுமடம், யாழ்ப்பாணம்)

மா. மகாலிங்கம்
(பழைய பொலிஸ் ரேசன் வீதி, ஆனைக்கோட்டை)

சி. வேலாயுதம்
(கந்த உடையார் ஒழுங்கை, பருத்தித்துறை)

திருமதி புனிதவதி சிவசுப்பிரமணியம்
(சுழிபுரம் மேற்கு)
கிருபைநாதன் அஜந்தன்
(இணுவில் மேற்கு)
பரமநாதன் மயூரன்
(மயிலணி வீதி, சுண்ணாகம்)
கனேசராஜா நிர்மலராஜன்
(சண்டிலிப்பாய் மேற்கு, சண்டிலிப்பாய்)
திருமதி த. தவேந்திரன்
(ஆஸ்பத்திரி வீதி, சுண்டுக்குளி)
க. செல்லத்துரை
(விஷ்ணு ஹாட்வெயர்ஸ் ஸ்ரோர்ஸ்)
கு. கந்தருபன்
(கமலவாசம், இணுவில்)
சுவாமிநாத இராஜேந்திரக்குருக்கள்
(நீர்வேலி)
அ. பஞ்சாபகேசசர்மா
(ஆவரங்கால்)
A.T. சிவனேசபிள்ளை
(ஞானத்தில்லை, இடைக்காடு)
சிதம்பரி சிவபாதம்
(மூத்தநயினார் கோயிலடி, ஆனைக்கோட்டை)
இ. வசந்தகுமார்
(மானிப்பாய் வடக்கு)
ச. ஸ்ரீகுகன்
(மலையாளம் தோட்டம், கரணவாய்)
ச. சசிகரன்
(முருகமூர்த்தி வீதி, நெல்லியடி)
மு. மயில்வாகனம்
(அல்வாய் வடக்கு)
S. சுப்பிரமணியம்
(A.G.A. லேன், நெடியகாடு)
சி. சிவனேசன்
(கவிஞர் செல்லையா வீதி, அல்வாய்)
திருமதி சிவநாயகி கந்தசாமி
(வசந்தகம், இமையாணன்)
நா. விக்னேஸ்வரன்
(கோகுலம், சுதுமலை)
ஏரம்பமூர்த்தி சிவபாக்கியம்
(குப்பிளான் தெற்கு)

தி. சிவபாதசுந்தரம்
(உயரப்புலம், ஆனைக்கோட்டை)
ந. சிவராஜா
(குமரக்கோட்டம், கோண்டாவில்)
சு. ஸ்ரீஸ்கந்தராசா
(பலாலி வீதி, திருநெல்வேலி)
சி. இரத்தினசபாபதி
(கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம்)
ஸ்ரீரஜனி அமரசிங்கம்
(குட்டியப்புலம், வசாவிளான்)
S.R. சரவணபவன்
(பிள்ளையார் கோயிலடி, தாவடி)
க. வாமதேவன்
(பஜனைச்சபை, வழக்கம்பரை)
திருமதி ச. செல்வறஞ்சனா
(சுண்ணாகம் கிழக்கு)
S. மனோகரன்
(மாதா கோயிலடி, கோப்பாய்)
சு. இலங்கநாயகம்
(கைதடி தென்கிழக்கு, கைதடி)
நடராஜா சறோஜா
(குடும்பநலசேவை உத்தியோகத்தர், அச்சுவேலி)
த. சுகந்தன்
(நீர்வேலி வடக்கு, நீர்வேலி)
கந்தையா காங்கேசன்
(பலாலி வீதி, உரும்பராய்)
சி. சரவணப்பெருமாள்
(மாணிக்கவளவு, கரணவாய்)
வே. கிருஷ்ணபிள்ளை
(C.T.B., நெசவுசாலையடி, கரணவாய்)
S. நவரெட்ணம்
(கெருடாவில் வடக்கு, தொண்டைமானாறு)
S. சத்தியமூர்த்தி
(காட்டுவளவு, வல்வெட்டித்துறை)
சு. சிவலிங்கம்
(குகன்குடிசை, பொலிகண்டி)
பா. பாலச்சந்திரன்
(சண்முகபவனம், மயிலணி)
செ. சுந்தரேஸ்வரன்
(மாதகல்)
திருமதி க. வசந்தாதேவி
(தாதி உத்தியோகத்தர், இராசபாதைச் சந்தி)

செ. அரியானந்தம்
(வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு)
N. குணரெட்ணம்
(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)
V. சிவனேசன்
(கமலை, மானிப்பாய் வீதி)
செல்வி ச. சரவணமுத்து
(சந்தை வீதி, ஆவரங்கால்)
பத்மநாதன் மதுரா
(இராஜவீதி, அச்சுவேலி
க. முருகானந்தன்
(கட்டுடைச்சந்தி, மானிப்பாய்)
செ. உலகநாதபிள்ளை
(வியாபாரிமூலை, பருத்தித்துறை)
க. சிவலிங்கம்
(பத்மாலயம், உரும்பராய்)
தம்பன் இரத்தினசிங்கம்
(நாவற்காடு)
ச. கிருபைராசா
(வலவந்தோட்டம், கரணவாய்)
இ. கந்தசாமி
(பெரியமதகடி, துன்னாலை)
சு. பொன்னம்மா
(மணலாவத்தை, நெல்லியடி)
நமசிவாயம்பிள்ளை சிவனருட்காந்தி
(மானாங்கானை, வல்வெட்டித்துறை)
கந்தையா தம்பிராசா
(குணயாவளவு, ஈவினை)
இ. நடராசா
(தாவடிச்சந்தி, கொக்குவில்)
R. நந்தகோபால்
(K.K.S வீதி, யாழ்ப்பாணம்)
சி. சிவசுப்பிரமணியம்
(ஆனந்தநிலையம், கரவெட்டி)

**ஞானச்சுடர் வாசகர்களுக்கு எமது புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

# வேலின் மகிமையும் வேலனின் பெருமையும்

திருமதி ப. நடராஜா அவர்கள்

வெள்ளைக் கொம்பனே விநாயகனே
வெள்ளை மனம் கொண்ட பிள்ளை
உள்ளமதில் கண்ட காட்சியிதை
தெள்ளத் தெளிவாக உலகுக் குணர்த்திட
உள்ளத்தில் குடியிருந்தே உதவிடுவாயே

சைவமும் தமிழும் இந்துசமயத்தின் (எமது) இரு கண்கள். இரு கண்களும் ஓரிடம் நோக்கி நடுநிலை வகிப்பது நெற்றிக்கண். இந்த நெற்றிக் கண்ணினின்றும் தோன்றியதே திருமுருக அவதாரம். முருகன் என்றால் நெற்றிக்கண்ணினின்று தோன்றிய நடுவு நிலையுடைய இறைவன் என்பது பொருளாகும். இந்த நெற்றிக்கண்ணாகிய நடுநிலையைக் குறிப்பதே வேல். எதையும் இரு புறமும் ஆராய்ந்து நடுநிலை நின்று தீர்ப்பு வழங்குவதால் இது "செங்கோல்" எனப் பெயர்பெற்றது.



இத்தகைய தெய்வீக சக்தி பொருந்திய வேலை எடுத்தாள வல்ல அரசன் எல்லாம் வல்ல இறைவனாகிய முருகனே. இந்த முருகன் முப்பெரும் சக்திகொண்ட மும்மூர்த்திகளின் அம்சமானவன். முக்காலத்துக்கும் அருள்பவன். முக்கால அறிவையும் அளிப்பவன்.

"அன்பே சிவம்; அறிவே சக்தி; அதுவே நான்" எனக்கூறும் ஆற்றல் மிக்கவன். இவனது முப்பெரும் சக்தியில் முதலாவது இச்சா சக்தியான வள்ளியாகவும் இரண்டாவது கிரியா சக்தியாகிய தெய்வானையாகவும் மூன்றாவது ஞான சக்தியான வேலாகவும் கொள்ளப்படுகின்றதென்பதை யாவரும் அறிவர். இச்சா சக்தி என்பது இறைவனின் இச்சை அடியவர்களின் அன்பு. அவன் இச்சைப் படுவது அடியார்களின் அன்புக்கும் பக்திக்குமே. முருகனிடம் எந்தப் பிரதிபலனையும் கருதாது அவன் அன்புக்காக மட்டும் ஏங்கும் தூய ஆத்மாவே வ்ள்ளி. அந்தத் தூய ஆத்மாவாகிய பக்தருடன் இரண்டறக் கலத்தலாகிய அத்வைத நிலையே வள்ளிதிருமணம். ஆத்மா உருவம் கடந்தது. ஆதலால் வள்ளி திருமணம் இரகசியத் திருமணம் ஆகின்றது. இது ஆன்மாவை ஆட்கொண்டு இறை நிலைக்கு உயர்த்தும் உயரிய கருத்தின் வெளிப்பாடு.

கிரியாசக்தியாகிய தெய்வயானை திருமணம் இல்லறத்தில் ஈடுபடும் மனிதன் நற்கிரியைகளைச் செய்து இம்மைக்கும் மறுமைக்கும் உலக நன்மைக்காகச் செய்யும் கிரியைகளைக் குறிக்கும். கணவனும் மனைவியும் இசைந்து ஒருமனமாகக் கிரியைகளைச் செய்வதன்மூலமே கிரியைகளின் பூரண பலனைப் பெறலாம். இல்லற தர்மத்தை உணர்த்துவதே தெய்வயானை திருமணம்.

செய்யும் வினைகளுக்கேற்ற பலனை வழங்குவதே வேலின் வேலை. இத்தகைய இறை சக்தியை, பூரணமான இறைவனை இந்திரியங்களுக்கு எட்டாதவனை இழித்துப்பேசும் இந்துக்கள் "முருகன் இருதாரம் கொண்டான்" எனச் சிற்றின்ப உணர்வினைக் கொண்டு அறியாமையால் அரற்றும் ஆணவக்காரர்களின் அறியாமையை அகற்றி அவனது உண்மைத்

தன்மையை உயர்ந்த தெய்வீக தத்துவத்தை உலகுக்கு உணர்த்த வேண்டும் என்பதே முருகன் மேல் ஆராத அன்பு கொண்ட அடியேனின் விருப்பமாகும்.

ஆற்றங்கரை வேலவனே
ஆனைமுகன் சோதரனே
நெற்றிக்கண் சுடர் ஒளியே
நேயமுடன் காப்பவனே
நீற்றின் மகிமையினை நித்தியமாய்
நிலமிசை எடுத்தியம்ப
வெற்றிவேல் துணையிருந்து
வேதநெறியாய் முழங்கிடுமே
சுற்றமொடு சுகமாக நாம்
சுதந்திரமாய் வாழ்வதற்கு
ஆற்றங்கரை வேலவனே- உந்தன்
அருள் (ம)ழையைப் பொழிந்திடப்பா

வாழ்க வையகம்
வளர்க செந்தமிழ்
விளங்குக சைவநெறி

# எத்திசைக் காற்றும் சுடர்புகழ் மூசும்




திங்கள் தோறும் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும்
எங்கள் ஞானச்சுடரே
உன் வரவு காணத் துடிக்கும்
ஆன்மீக நெஞ்சங்கள் எத்தனை எத்தனை
கடல் கடந்து கடுகதியில் சென்று
புலம் பெயர்ந்து வாழும்
எங்கள் சைவ உள்ளங்களில்
நீ பக்திச் சுடரை ஏற்றிவைக்கின்றாய்
ஆற்றங்கரையானின் அருட் பெருமை
அலைகடல் கடந்து
அந்நிய தேசங்களிலும்
கொடி கட்டிப் பறக்கும் அற்புதம் என்னே!
புண்பட்டுப்போன எம் இதயங்களை
பண்படுத்தி பதப்படுத்தி
பக்திக் கனலை ஏற்றிவைக்கின்றாய்
எல்லாமே வேலன் திருவிளையாடலன்றி
வேறென்ன!
அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது
ஆறுமுகன் கடைக்கண் பார்வையின்றி
இங்கு எதுவும் இயங்காது
ஞானச்சுடர் மூலம் திங்கள் தோறும்
உன் திருமுகம் காண
நாம் என்ன தவம் செய்தோம்!
எதுவரினும் வரட்டும்
உன் வரவு மட்டும் தடையில்லாது நிகழட்டும்
ஆம்! எத்திசைக் காற்றும்
எங்கள் சுடர் புகழ் மூசும்.




—வதிரிவாசன்—

(தொடர்ச்சி...)



# வித்தகா! உன் ஆடல் ஆர் அறிவாரோ

**திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள்**

மறைதொழும் கலியுகவரதன், சிவனாரின் அன்பிற்குகந்த அழகுப் பாலகன், ஆறுமுகப் பெருங்கருணைக் கடவுள் "முருகம்மையார்" எனும் பக்தையின் வாழ்க்கையில் நடத்திய திருவிளையாடலைப் பார்ப்போம்.

சோழநாட்டில் உள்ள ஓர் ஊரில் முருகவேள் திருவடியையன்றி வேறெதையும் கருதாது அருளும் அன்பும் நிறைந்த தம்பதிகள் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு மகப்பேறு வாய்க்கப்பெறாமல் பெரிதும் வருத்தமுற்றனர். ஒருநாள் இவர்கள் வீட்டுக்கு சோதிடக்கலைகளில் வல்லவர் ஒருவர் வந்தார். இத்தம்பதியினர் அந்த அறிஞரை வரவேற்று விருந்தளித்து உபசரித்தனர். அந்த அறிஞர் அவர்களிடம் "நான் சோதிடக் கலையில் வல்லவன்; உங்களுக்கு என்னிடம் ஏதேனும் கேட்க வேண்டுமெனில் கேளுங்கள்" என்றார்.

அத்தம்பதிகள், "எங்களுக்குக் குழந்தைச் செல்வம் இல்லாமல் வருந்துகின்றோம். எங்களுக்கு அந்தப் பாக்கியம் உண்டாகுமா என்று அறிந்து சொல்லுங்கள்" எனப் பணிவுடன் கேட்டனர். அதற்கு அந்த அறிஞர் அத்தம்பதியினரிடம் முருகப்பெருமானின் அருள் உங்களுக்கு உள்ளது. அதனால் ஒரு பெண் குழந்தை பிறக்கும். அதற்கு நீங்கள் இருவரும் கார்த்திகை நட்சத்திரம் வரும்நாள், செவ்வாய்க்கிழமை ஆகிய தினங்களில் முருகன் கோயிலை வலம்வந்து, அடியார்களுக்கு அன்னதானம் செய்து, அதன்பின்பு நீங்கள் உணவருந்துங்கள். இவ்வாறு உண்மை அன்போடு செய்தால் இன்னும் பதினைந்து மாதங்களுக்குள் குழந்தைப்பேறு கிட்டும் என்று கூறி மறைந்தருளினார்.

அறிஞராய் வந்தவர் கூறியதுபோலவே அத்தம்பதியினர் முருகப்பெருமானை விரதமிருந்து வழிபட்டு, எம்பெருமான் அருளால் அவர்களுக்கு அழகிய பெண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு முருகம்மை எனப் பெயர்சூட்டிச் சீரோடும், சிறப்போடும் வளர்த்தனர். அக்குழந்தையும் கந்தவேளிடம் மாறாத அன்புகொண்டு எப்பொழுதும் "முருகா முருகா" என அவர் திருநாமத்தை உருப்போடுதலையே விரதமாகக் கொண்டது. இப்படி அக்குழந்தை வளர்ந்து வரும் நாளில் திருமணப் பருவம் அடைந்ததை உணர்ந்த பெற்றோர், நல்ல இடத்தில் திருமணம் பேசி முடித்து, சுபமுகூர்த்தத்தில் முருகம்மைக்குத் திருமணம் முடித்தனர்.

இல்லற வாழ்வில் ஈடுபட்ட முருகம்மையார் தன்னுடைய கடமைகளைச் சரிவரச் செய்து கணவனைக் கண்போலக் காத்துவந்தபோதும், எம்பெருமானை சதாசர்வகாலமும் சிந்தையில் நினைத்து "முருகா முருகா" என அவன் திவ்ய நாமத்தை ஓதிவரலானார். கந்தவேள் திருநாமத்தை இடைவிடாது செபிப்பதைக்கேட்ட சிலர் அம்மையார் மீது பொறாமைகொண்டு அத்தம்பதியினரின் இனிய இல்லற வாழ்க்கையில் குழப்பம் ஏற்பட சூழ்ச்சி செய்தனர். அவர்களது பக்கத்துவீட்டில் முருகன் என்று ஒருவர் இருந்தார். இந்த அம்மையார் அவனை "முருகா! முருகா!" என அழைப்பதாகவும் அவனோடு உறவு கொண்டதாகவும்

பொய்யுரைகளை அவர் கணவரிடத்தில்கூறி, இது உமக்குத் தெரியாதா? என்று கேட்டனர். இதனைக் கேட்ட கணவர் அம்மையாரைக் கோபித்து இனிமேல் "முருகா. முருகா" எனக் கூறுவதைவிட்டுவிடுமாறு கண்டித்தார். குழந்தைப் பருவத்திலிருந்தே "முருகா முருகா" எனச் செபித்த மந்திரமல்லவா! விட்டுவிட முடியுமா? "நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே" நாங்கள் இறைவனை மறந்தாலும் அவனது நாமத்தை உச்சரித்துப் பழக்கப்பட்ட "நா" மறவாது அவன் பெயரை உச்சரிக்கும் அம்மையாரும் சதாசர்வகாலமும் அவனது நாமத்தை உச்சரிக்கும் நற்பழக்கத்தைக் கொண்டவராகையினால் ஒருமுறை "முருகா முருகா" எனக் கூறியபோது, அவர் கணவன் சற்றும் சிந்தித்துப் பாராது, கடுங்கோபங்கொண்டு, அந்த முருகனே உன்னைக் காப்பான் என்று கூறி அம்மையாரின் கரத்தை வெட்டினான்.

பெரும் பெயர் முருகன், பிரணவ சொருபன், அரவணி சிவனார் அருள்தரும் பாலன் சும்மா இருப்பானா! அவன் நடத்தும் நாடகம்தானே இது.

"முருகா! என்றொரு பெயரை மறவா
மாதொருத்தி கையை அவள் கணவன் வெட்டும் கொடிய
தீந்தமைக்குடனே முன்னிருந்தபடி கைதழைக்கும்
திருவிளையாட்டினைச் செய்த சிறுவை நகர்க்குகனே!"

சிறுவாபுரி முருகன் திருவிளையாடல் புரிந்தான். "நெஞ்சில் ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும் முருகா என்று ஓதுவார் முன்". ஒருமுறை அழைத்தாலே காட்சிதரும் கந்தவேள் முருகம்மையார் மூன்றுமுறை "முருகா! காத்தருள்" என்று புலம்ப எம்பெருமான் மயில்மிசைதோன்றி வெட்டப்பட்ட கையை முன்போலாக்கி, முருகம்மையாரை தம் உலகிற்கு அழைத்துச்சென்று தம்முடைய தேவியர்க்கு "மலர்சூட்டும் பணிமகளாக இருக்கக் கடவாய்" என்றருளினார். முருகம்மையார் அளவிலா ஆனந்தம் பெற்றார்.

வெகுகோடி நாமங்கள் கொண்டவன் பன்னிருகை வேலன். அவற்றுள் மிகச்சிறந்தது முருகா எனும் திருநாமம். அத்திருநாமத்தினை உள்ளன்போடு ஓதினால் முருகம்மையாருக்கு காட்சி கொடுத்து அருள்புரிந்ததுபோல, "வருந்தி மகிழ்ந்து வரவழைத்தால் வாராதிருக்க வழக்குண்டோ" மயில் ஏறும் சேவகன், வள்ளி கணவன் அருட்காட்சி தருவான்.

"முருகா என ஓர் தரம் ஓதடியார்
முடிமேல் இணைதாள் அருள்வோனே" என அருணகிரிநாதர் போற்றிப் பாடுகின்றார்.

முருகா என்ற பெரும் பெயர் மந்திரத்தினால் மரணத் துன்பத்தையே வெல்லலாம். நம்முடைய காவற் தெய்வமே முருகன் அஞ்சுமுகம் தோன்றும் போதெல்லாம் ஆறுமுகன் தோன்றுவான்.

"முருகா என உனை ஓதும் தவத்தினர் மூதுலகில்
அருகாத செல்வம் அடைவர் வியாதி அடைந்து நையார்
ஒருகாலமும் துன்பம் எய்தார் பரகதி உற்றிடுவார்
பொருகாலன் நாடு புகார் சமராபுரிப் புண்ணியனே.

திருப்போரூர்ச் சந்நிதிமுறையிலே சிதம்பர சுவாமிகள் பாடி மகிழ்ந்திருக்கின்றார். பஞ்சாட்சர மந்திரம்போல் முருகன் நாமமும் மிகமிகச் சிறந்தது. சொல்லச் சொல்லத் தித்திக்குமே சுந்தரனின் நாமரசம்" அழகும், இளமையும், மணமும், தெய்வத்தன்மையும் நிரம்பிய கந்தப்பெருமானின் "முருகா" எனும் நாமத்தை ஓதி உய்வோமாக.

பழநிப்பதிவாழ் பாலகுமாரன், குன்றுதோறாடும் குமரவேள், பழநித்தல சரிதம் பகர்ந்த பாலசுப்பிரமணியர்க்கு அருள்புரிந்த திருவிளையாடலைப் பார்ப்போம். அழகும், பழமையும் சொல்லுதற்கரிய சிறப்புடைய தென்பழநித்தலத்தில் ஓதுவாராகத் திருத்தொண்டாற்றிய பெரியான்

கவிராயர் பிள்ளைச் செல்வம் வேண்டி விரதம் அனுட்டித்து வேண்டுதல் செய்ய, பழநிமலை வேலன் திருவருளால் அழகான ஆண் குழந்தை பிறந்தது. மகிழ்ச்சியுற்ற பெற்றோர் பாலசுப்பிரமணியன் எனப் பெயர் சூட்டினர். ஐந்துவயதாகும்போது குழந்தையின் கண்களும், செவிகளும் செயல்படாது இருப்பதை பெற்றோர் உணர்ந்து துன்புற்றனர். தந்தையார் மகனை முருகன் சந்நிதியில் படுக்கவைத்து, தாம் ஒருபுறமிருந்து தவம் இருந்தார். கருணைக் கடலான முருகப்பெருமான் கவிராயரின் நோன்பிற்கு மனமிரங்கி, சிவனடியார்போல எழுந்தருளிச் சிறுவன் உடலை வருடிக் கையில் ஒரு கடப்பமலரைக் கொடுத்து, "கண்களிலும், செவிகளிலும் இம்மலரால் ஒத்து" எனத் தந்தையாரிடம் கூறி சிவனடியார் கோலத்தில் வந்த எம்பெருமான் மறைந்தருளினார்.

கவிராயர் மிகுந்த மகிழ்ச்சிகொண்டு சிறுவன் கையிலிருந்த கடப்ப மலரை எடுத்து முருகப்பெருமான் கூறியவாறு கண்களிலும், செவிகளிலும் ஒற்றி எடுக்கச் சிறுவனின் கண்கள் ஒளி பெற்றன. காதுகள் கேட்கும் திறனைப் பெற்றன. சிறுவன் பாலசுப்பிரமணியர் கந்தவேளை வணங்கித் துதித்தார். பின்பு கல்வியாளர்களிடம் கல்விபயின்று தமிழ்மொழி, வடமொழி ஆகியவற்றில் வல்லவராகத் திகழ்ந்தார். பின்னர் முருகப்பெருமானுடைய திருத்தலங்களைத் தரிசித்து முத்தமிழ் மொழிக்கு அணியாய் சைவ சித்தாந்த தரிசனம், பாஞ்சராத்திர மதசபேடிகை, வேதாந்த சித்தாந்த சமரச தீபம், கூவிள நீப மான்மியம், அக்கதீபிகை போன்ற நூல்களை இயற்றினார். இவருக்கு தஞ்சை சமஸ்தானத்தில் "கவிராஜர்" எனும் சிறந்த பட்டம் சூட்டப்பெற்றது. "பழநிப்புராணம்" எனும் உயரியநூலை இயற்றி பழநிமுருகன் சந்நிதியில் கற்றோரும், மற்றோரும் போற்ற அரங்கேற்றினார். திருமாலடியார் என்பவருடன் வாதிட்டு வென்று "திராவிட வேதநிர்ணயம்" என்ற நூலை இயற்றினார்.

பாலசுப்பிரமணியர் பல ஊர்களுக்குச் சென்று சிவகுமாரனின் சமயமான கௌமார நெறியைப் பரப்பி மக்களை நல்வழிப்படுத்தினார். இவர்புகழ் உலகெங்கும் பரவிற்று. தெய்வ அருள் பெற்றவராய் ஆறுமுகன் திருவடிகளையே சிந்தித்து பலகாலம் பெரும்புகழோடு வாழ்ந்து, ஒரு திருநாளில் தேவர்கள் மலர்மாரி பொழிய முருகப்பெருமானின் திருவடி நீழலை அடைந்தார். முருகவேள் அடியார்களுக்கு அருளும் கருணைதான் என்னே!

"சேந்தனைக் கந்தனை செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல் விரித்தோனை விளங்கு வள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவாதவர்க் கொருதாழ்வில்லையே"

(முற்றும்)

## மௌனம்

***"மௌனம் என்பது ஞான வரம்பு" என்ற ஞானக்கிழவியின் திருவாக்கின்படி ஞானத்திற்கு எல்லையாக இருப்பது மௌனம். எல்லாவிதமான சாதனங்களும் முடிவில் மௌனத்தையே அடையச் செய்கின்றன.***

***இந்த மௌன நிலை எளிதில் கிடைக்கக் கூடியதன்று. பலகாலும் செய்த சிவபூசையினாலும், ஆலய வழிபாட்டாலும், சித்தசுத்தியாலுமே கிடைக்கக் கூடியது. அதனை ஆண்டவனிடம் யாசித்துப் பெறுவது மிக எளிய வழியாகும்.***

***-சைவ நற்சிந்தனை-***

# சிவ இரகசியங்கள்

இரா. செல்வவடிவேல் அவர்கள்

தோற்றம் அவதாரம், பிறப்பு போன்ற மாசு மலங்கள் இல்லாத தூய செம்பொருளாக இருப்பதால் பரமசிவம் "சித்து" எனப்படுகிறது. 'அம்பரம்' என்றால் ஆகாயம் என்று பொருள். எல்லாவற்றையும் கடந்து எல்லாமாக உள்ள பரிபூரண சித்து அம்பரமாக எழுந்தருளி இருக்கும் திருத்தலமே சிதம்பரம். (சித்து+அம்பரம்) சிதம்பரம் நகருக்கு கோயில்நகர் நாட்டியநகர் என்ற பெயர்களும் உண்டு. திருச்சிற்றம்பலம் என்ற பெயர், சிற்றம்பலமாக மருவி "சிதம்பரம்" என வழங்கப்படுகிறது என்றும் கூறுவார்கள்.

சிதம்பரத்திலுள்ள சிவ ஆலயம் உலகப் புகழ் பெற்றது. இது தில்லை மரங்கள் நிறைந்த காடாக முற்காலத்தில் இருந்ததால், "தில்லை" என்றும் "தில்லையம்பலம்" என்றும் அழைக்கப்பட்டது. சைவர்களின் முழுமுதற் கடவுளான சிவபெருமான் "நடராஜர்" என்ற பெயரில் வீற்றிருக்கும் ஆலயமும், வைணவர்களின் முக்கிய கடவுளான திருமால், கோவிந்தராசப் பெருமாள், புண்டரீகவல்லித் தாயாருடன் வீற்றிருக்கும் ஆலயமும் ஒருங்கே அமைந்துள்ளமை மேலும் சிறப்பாகும்.



பிறகோவில்களில் இலிங்க வடிவில் இருக்கும் சிவபெருமான் சிதம்பரம் கோவிலில் மட்டும் நடனமாடும் நிலையில் நடராஜராகக் காட்சி தருகிறார். நடனமாடும் நிலையில் இருப்பதால், பரதநாட்டியம் என்னும் நாட்டியக் கலைக்கு முதற்கடவுளாக நடராஜரை வணங்குகிறோம். 40 ஏக்கர் பரப்பளவில், நான்கு திசைக்குமாக நான்கு கோபுரங்களும், ஐந்து சபைகளும் உடையது சிதம்பரம் ஆலயம். இந்த ஆலயத்திலுள்ள கிழக்கு கோபுரத்தில் 108 பரதநாட்டிய நிலைகளில் உள்ள சிற்பங்களைக் காணமுடிகின்றது. இங்கு மூலவர்சிலை இருக்கும் இடம் "கனகசபை" என்று அழைக்கப்படுகிறது. இந்தச் சபை, பராந்தக சோழமன்னனால் பொற்கூரை வேயப்பட்டு கனகசபை என்ற பெயர் பெற்றதாகும்.

மனிதனின் உருவ அமைப்பிற்கும், சிதம்பரத்திலுள்ள நடராஜர் சந்நிதிக்கும் ஒற்றுமை இருக்கிறது. பொன்னம்பலத்தில் "நமசிவாய" மந்திரம் பொறிக்கப்பட்டு வேயப்பட்டுள்ள 21ஆயிரத்து 600 தங்க ஓடுகள் உள்ளன. மனிதன் ஒருநாளைக்கு விடும் சுவாசத்தின் எண்ணிக்கை (மூச்சுவிடுதல்) இதுவாகும். இங்கு அடிக்கப்பட்டுள்ள 72 ஆயிரம் ஆணிகள், மனிதனின் நாடி நரம்பின் எண்ணிக்கையை ஒத்திருக்கிறது. கோயில்களில் உள்ள ஒன்பது வாசல்கள் மனித உடலிலுள்ள ஒன்பது துவாரங்களைக் குறிக்கிறது. ஐந்தெழுத்து மந்திரமான 'சிவாயநம' என்பதன் அடிப்படையில் பொன்னம்பலத்தில் ஐந்து படிகள் உள்ளன.

64 கலைகளின் அடிப்படையில் 64 சாத்து மரங்கள் இருக்கின்றன. 96 தத்துவங்களைக் குறிக்கும் விதமாக 96 ஜன்னல்களும், நான்கு வேதங்கள், ஆறு சாஸ்திரங்கள், பஞ்ச பூதங்களின் அடிப்படையில் தூண்களும் அமைக்கப்பட்டுள்ளன.

பஞ்சபூதங்களில் ஒன்றான ஆகாயம் வடிவில் இங்கு சிவபெருமான் இருக்கிறார் என்பதை குறிப்பால் உணர்த்தும் வகையில் "சிதம்பரரகசியம்" அமைக்கப்பட்டுள்ளது. சிதம்பரத்தை

சித்து+அம்பரம் என்று பிரிக்கலாம் அல்லவா. சித்து- அறிவு, அம்பரம்- வெட்டவெளி. "மனிதா! உன்னிடம் ஒன்றுமே இல்லை" என்பதுதான் சிதம்பர ரகசியத்தின் பொருள். நடராஜர் சன்னதியின் வலது பக்கத்தில் ஒரு சிறுவாசல் உள்ளது. இதனுள் தங்கத்தினால் ஆன வில்வ மாலை தொங்கவிடப்பட்டுள்ளது. பூசையின்போது திரை விலக்கப்பட்டு ஆரத்தி காட்டப்படுகிறது. அங்கே என்ன இருக்கிறது? என்று குனிந்து பார்த்தால் ஆகாயம் தான் தெரியும். இறைவன் ஆகாயம்போல பரந்து விரிந்தவன். ஆகாயத்துக்கு ஆரம்பமும், முடிவும் கிடையாது. இறைவனும் முதலும் முடிவும் இல்லாதவன் என்பதை இது காட்டுகிறது. சிதம்பர ரகசிய ஸ்தானத்தில் அம்மனுக்குரிய ஸ்ரீ சக்கரத்தையும், சிவனுக்குரிய சிவ சக்கரத்தையும் இணைத்து பிரதிஷ்டை செய்துள்ளனர். இந்தச் சக்கரத்தில் நடராஜப் பெருமான் ஐக்கியமாகி, தன் ஆனந்த நடனத்தினால் உலகை இயக்கிக் கொண்டிருக்கிறார் எனும் தத்துவப் பொருளாக சிதம்பரம் நடராஜர் ஆலயம் அமையப் பெற்றுள்ளது.

பக்தி இலக்கியத்திலும், சங்க இலக்கியத்திலும் தில்லைச் சிவன் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. சோழ மன்னர்கள் பலர் இந்த ஆலயத்திற்கு திருப்பணி செய்துள்ளனர். சோழர்களுக்குப் பிறகு பாண்டிய மன்னர்களும், கிருஷ்ண தேவராயரும் இங்கு வழிபட்டதாகவும், திருப்பணிகள் பல புரிந்ததாகவும் இக் கோவில்களிலுள்ள கல்வெட்டுக்களில் ஆதாரங்கள் காணப்படுகின்றன.

வைணவக் கடவுளான திருமால் இங்கு திருச்சித்திரக்கூடம் என்ற சபையில், நடராஜரின் கனகசபைக்கு அருகில் இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தில் திருச்சித்திரக்கூடம் பற்றிய குறிப்பு உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இங்குள்ள ஆயிரங்கால் மண்டபம் எனும் ஆயிரம்தூண் கொண்ட மண்டபம் சிற்பக்கலைக்கும், கட்டிடக் கலைக்கும் சிறப்புப் பெற்றது.

தமிழ் மக்களுக்கு மார்கழிமாதம் சிறப்பானதாகும். மார்கழி மாதத்திற்கு 'தனுர்' மாதம் என்ற பெயரும் உண்டு. இந்த மாதத்தில் சூரியன் தனுசு ராசியில் பிரவேசிப்பதால் இந்தப் பெயர் ஏற்பட்டது. மார்கழிமாதம் தேவர்களுக்கு விடியல் காலம் என்பதால் இந்த மாதம் முழுவதும் இறைவழிபாடுகளில் ஈடுபடுவது சிறப்பு. திருப்பாற்கடலை தேவர்களும் அசுரர்களும் கடைந்ததும் ஓர் மார்கழி மாதம்தான். மார்கழி மாதத்தில்தான் மகா விஷ்ணுவை மகாலெட்சுமி மணந்து கொண்டார். சபரிமலை ஐயப்பன் அவதரித்ததும் மார்கழி மாதத்தில் வரும் உத்தரம் நட்சத்திரத்தன்றுதான். இம்மாதம் சைவ, வைணவ சமயம் சார்ந்தாருக்கு மிகவும் முக்கியமானதாகக் காணப்படுகிறது. சிதம்பரம் நடராஜப் பெருமான் ஐந்தொழில்களையும் புரிகின்றார். இந்த மாதத்தில் அங்கு நடைபெறும் ஆருத்திரா தரிசனமும், பூலோக வைகுண்டம் என்று போற்றப்படும் ஸ்ரீரங்கத்தில் நடைபெறும் வைகுண்ட ஏகாதசி விழாவும் சிறப்புப் பெற்றவை.

"திருவாசகத்திற்கு உருகார் ஒருவாசகத்திற்கும் உருகார்....." என்பார்கள். சிறப்பு மிக்க திருவெம்பாவைப் பாடல்கள் மார்கழி மாதத்தில் மிகச் சிறப்பாகப் பாடப்படுகிறது. மாணிக்கவாசகர் பிறந்தது மதுரை அருகே உள்ள திருவாதவூர். அவருக்கு பல சிவன் கோவில்களில் தனிச் சன்னதிகள் இருந்தாலும், சிதம்பரத்தில் அவர் தெய்வங்களுக்கே உரிய சின்முத்திரை தாங்கிய கோலத்தில் வீற்றிருப்பது சிறப்பானதாகக் கருதப்படுகிறது. இங்கு மட்டுமே மாணிக்கவாசகர் தெய்வத்திற்கு நிகராக கருதப்பட்டு வழிபாடு செய்யப்படுகிறார்.

சிதம்பரத்தில் மார்கழி மகோற்சவத்தில் 10 நாட்களும் மாணிக்கவாசகரை தனி மஞ்சத்தில் எழுந்தருளச் செய்கின்றனர். அதைத் தொடர்ந்து பொன்னம்பலத்திற்கு அடுத்த

கனகசபையின் வாசலில், நடராஜருக்கு எதிரே நிற்கச் செய்து, மிகச் சிறப்பான வழிபாடுகள் செய்யப்படுகின்றார்.

மாலைவேளை பூசை முடிந்தபிறகு, மாணிக்கவாசகருக்கு சிறப்பு ஆராதனை செய்யப்படுகிறது. அவருடைய திருவெம்பாவைப் பாடல்கள் மாலைப் பூசையில் பாடப்படுவதுடன் ஒவ்வொரு பாடல் முடிவிலும் சிறப்பு நிவேதனங்கள் கேழ்வரகுக்களி நைவேத்தியம் செய்யப்பட்டு, தீபாராதனை நடைபெறும். 21 தீபாராதனைகளோடு நடைபெறும் இக்காட்சி மாணிக்கவாசகர் தீபாராதனை என்று அழைக்கப்படுகிறது.

சிதம்பரம் அருகே உள்ள ஊரில் விறகுவெட்டி வியாபாரம் செய்து வாழ்ந்து வந்தவர் சேந்தனார். மிகச் சிறந்த சிவபக்தரான இவர் தினமும் ஒரு அடியவருக்கு உணவளித்த பிறகுதான் சாப்பிடுவார்.

ஒருநாள் அதிகமாக மழைபெய்து விறகுகள் எல்லாம் ஈரமாயின. அதனால் அன்று அவரால் விறகு விற்கமுடியவில்லை. விறகு வாங்க யாரும் வராததால் அவரது கையில் காசு இல்லை, தினமும் அரிசிச்சாதம் வடித்து சிவனடியாருக்கு அன்னமிடும் தனது சேவை எந்தச் சூழ்நிலையிலும் தடைப்பட்டு விடக்கூடாது என்று நினைத்தவர், கேழ்வரகில் களி செய்து சிவனடியாரை எதிர்பார்த்திருந்தார். ஆனால் யாரும் தென்படவில்லை.

மனம் நொந்த சேந்தனாரின் பக்தியை உலகத்திற்கு உணர்த்தவிரும்பிய சிவபெருமான் சிவனடியார் வேடத்தில் சேந்தனார் வீட்டிற்கு வந்தார். அவரைப் பார்த்த மாத்திரத்தில் சேந்தனாருக்கு மகிழ்ச்சி. தான் தயார் செய்து வைத்திருந்த களியை அவருக்குப் படைத்தார். சிவனடியார் களியை மிக விருப்பமுடன் உண்டது மட்டுமல்லாமல் எஞ்சியிருந்த களியையும் தனது அடுத்தவேளை உணவிற்குத் தருமாறு கூறி வாங்கிச் சென்றார். மறுநாள் காலையில் வழக்கம்போல் தில்லைவாழ் அந்தணர்கள் சிதம்பரம் நடராஜர் கோவில் கருவறையைத் திறந்தனர். அங்கே அவர்கள் கண்ட காட்சி ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. ஆம்..... முந்தைய தினம் அடியார் வீட்டில் சிவபெருமான் கேழ்வரகுக்களி வாங்கி உட்கொண்டார் அல்லவா? அந்தக் கேழ்வரகுக்களி நடராஜப்பெருமானின் திருமேனியைச் சுற்றிக் கிடந்தது.

இது பற்றிய தகவல் நாட்டை ஆளும் அரசருக்கு தெரிவிக்கப்பட்டது. இதையறிந்து மன்னன், முந்தைய நாள் தனது கனவில் வந்த காட்சியை மீண்டும் ஒருமுறை நினைத்துப் பார்த்தான். அதாவது முந்தைய தினம் இறைவன் சேந்தனாரின் வீட்டிற்குச் சென்று களி உண்ட காட்சி, மன்னனின் கனவிலும் பதிவாகி இருந்தது. அதனால் சிவபெருமான் யார் வீட்டில் களி உட்கொண்டார் என்பதை அறிய ஆர்வமானார். நிச்சயம் ஒரு சிவனடியார் தான் களி படைத்திருக்க வேண்டும். என்று கணித்தவன், சரியாக சேந்தனாரின் வீட்டைக் கண்டுபிடித்து விட்டான். அந்தச் சமயத்தில் தான் சிதம்பரத்தில் தேர்த்திருவிழா நடந்து கொண்டிருந்தது. அந்தத் திருவிழாவைக் காண சேந்தனார் சிதம்பரம் வந்திருந்தார்.

இறைவன் தேரில் அமர, மன்னன் உட்பட எல்லோரும் தேரை வடம்பிடித்து இழுத்தார்கள். ஓரிடத்தை தேர் அடைந்தபோது, மழை காரணமாக சேற்றில் சிக்கிக்கொண்டு சிறிதும் அசையாது நின்றது. மன்னர் மிகவும் மனம் வருந்தினார். அப்போது அசரீரியாக, "சேந்தா..... நீ பல்லாண்டு பாடு" என்று கேட்டது. சேந்தனாரோ "ஒன்றும் அறியாதயான் எப்படிப் பாடுவேன்" என்று நடராஜப் பெருமானை வேண்டினார். இறைவன் அருளால் "மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள் வஞ்சகர் போயகல" என்று தொடங்கி "...... பல்லாண்டு கூறுதுமே" என்று முடித்த 13 பாடல்களால் இறைவனை வாழ்த்திப் பாடினார். அந்த நிமிடமே தேர் நகர்ந்தது. மன்னன் சேந்தனார் பாதம் பணிந்து வணங்கினான். சேந்தனாரும் தன் வீட்டிற்குக் களி உண்ண நடராஜப் பெருமானே வந்தார் என்றதை அறிந்து மெய்

சிலிர்த்தார். இந்தச் சம்பவம் நடந்த நாள் ஒரு திருவாதிரைநாள். அதனால், அன்றைய தினம் நடராஜப் பெருமானுக்கு களி நைவேத்தியம் செய்து வழிபடப்படுகிறது. இவ்வாறுதான் திருவாதிரையில் களி பிறந்தது. இன்றும் சிதம்பரத்தில் திருவாதிரையில் களி நைவேத்திய மாக வைக்கப்படுகிறது.

சிதம்பரத்தில் மூலவர் நடராஜரின் கீழே இன்னொரு நடராஜர் வைக்கப்பட்டுள்ளது. இதற்கு ஒரு கதை சொல்லப்படுகிறது. ஒரு முறை பிரம்மா யாகம் ஒன்றை நடத்தினார். இதற்காக தில்லைவாழ் அந்தணர் மூவாயிரம் பேரையும் சத்தியலோகத்திற்கு அழைத்தார்.

சிதம்பரத்திலிருந்து நடராஜரின் திரு நடனத்தைக் காண்பதில் கிடைக்கும் இன்பத்தைவிட அந்த யாகத்தில் எங்களுக்கு என்னபயன் கிடைத்துவிடப்போகிறது? என அவர்கள் பிரமாவிடம் கேட்டார்கள். அப்போது நடராஜர் அந்தணர்களிடம், "நீங்கள் யாகத் திற்குச் செல்லுங்கள், யாகத்தின் முடிவில் அங்கேயே தோன்றுகிறேன்" என வாக்களித் தார். அவ்வாறு தோன்றிய கோலத்தை "இரத் தினசபாபதி" என்கின்றனர். இரத்தினசபாபதியின் சிலையே சிதம்பரம் நடராஜரின் சிலையின் கீழே உள்ளது. இவருக்குத் தினமும் காலை யில் 10-11 மணிக்குள் பூசை நடக்கிறது. இந்தச் சிலைக்கு முன்புறமும், பின்புறமும் தீபாராதனை செய்வது வழக்கமாக இருக் கிறது.

சிதம்பரத்திற்கு மார்கழித் திருவாதிரை தினத்தில் அதிகளவில் வெளிநாட்டவர் வருகை தருகின்றனர். பஞ்சரதபவனி, ஆருத்ரா தரிசனம் காண்பதற்காக வருபவர்களில் ஈழத்தவர்களும் பெருமளவில் காணப்படுகின்றனர். கடல் மார்க்க மாக மட்டும் பயணம் செய்யக்கூடிய அந்தக் காலத்திலேயே இலங்கையிலிருந்து தமிழ் மக்கள் சிதம்பர தரிசனத்திற்கு சென்றுள்ளனர். இன்றும் இடம்பெயர்ந்து வெளிநாடுகளிலுள்ள ஈழத்தவர்கள் அதிக எண்ணிக்கையில் வரு கிறார்கள். இவ்வாறு சிதம்பரத்திற்கும் யாழ்ப் பாணத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் சைவப்பிரகாச வித்தியாசாலை சிதம்பரம் "மேலைமாசி" வீதி யில் உள்ளது. யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் புண்ணிய நாச்சியம்மையார் தருமத் திற்குரிய "தங்குமிடம்" 28, மாலைகட்டித் தெருவில் (கோவிலுக்கு அருகில்) கம்பீரமாக வுள்ளது. மூன்றுமாடிகள் கொண்ட இக்கட்டிடத் தில், சிதம்பர தரிசனத்திற்கு வரும் ஈழத்த வர்கள் இலவசமாகத் தங்கமுடியும். அத்துடன் தரிசன காலத்தில் இலவசமாக உணவும் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். சிதம்பரத்தில் 21 யாழ்ப்பாணத்தவர்மடம் இருந் ததாகச் சொல்கிறார்கள். யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையுடன் தொடர்பு கொண்டால் சிதம்பரத்தில் சிறப்பான தரிசனம் காணமுடியும். சிதம்பரம் தில்லைவாழ் அந்தணர்கள் மூவாயிர வரில் (தற்போது 382 தீட்சிதர்கள் மட்டுமே உள்ளனர்.) சைவபரிபாலன சபையின் கட்ட ளைத் தீட்சகர் உள்ளார். அவர்மூலம் சிறப்பாக நடராஜரைத் தரிசனம் செய்யமுடியும்.

சிதம்பரம் நடராஜரின் தரிசனம்போன்று சிறப்புமிக்க தரிசனத்தை திருவாலங்காட்டிலும் காணலாம். சென்னையை அடுத்துள்ள திரு வள்ளுவர் மாவட்டம் திருவாலங்காட்டில், நட ராஜரின் பஞ்சசபைகளில் ஒன்றான இரத்தின சபை உள்ளது. சிதம்பரரகசியம்போல, ஆலங் காட்டிலும் ஒரு ரகசியம் புதைந்து கிடக்கிறது. காரைக்கால் அம்மையார் சிவனைத் தரிசிக்கக் கயிலாயத்திற்கு தலைகீழாக நடந்து சென்ற போது, சிவன் அவரை அம்மா! என்றழைத்து என்ன வரம் வேண்டும்? எனக் கேட்டார். அவர், "பிறவாமை வேண்டும். பிறந்தாலும் உன் நாட்டிய தரிசனம் காணும் பாக்கியம் வேண்டும்! என்றார். சிவன் அந்த வரத்தை அருளவே, ஆலங்காடு வந்த அம்மையார் திருவாலங்காடு மூத்த திருப்பதிகம் பாடினார். இவ்வேளையில் மன்னன் ஒருவனின் கனவில் தோன்றிய சிவன், தனக்குப் பின்புறம் காரைக்காலம்மையாருக்கு சன்னதி எழுப்பும்படி கூறினார். அதன்படி

மன்னன், நடராஜருக்கு பின்புறம் சன்னதி எழுப்பினான். இதில், காரைக்காலம்மையார் ஐக்கியமானார். இவர் சிவனின் தாண்டவத்தை தரிசித்துக் கொண்டிருப்பதாக ஐதீகம். இதை ஆலங்காட்டு ரகசியம் என்கின்றனர்.

பெருமாள் கோவில்களில் தீர்த்தம் தருவது வழக்கம். சிவாலயமான திருவாலங்காடு நடராஜர் சன்னதியில் தீர்த்தம் தருகின்றனர். நடராஜர் ஊர்த்துவ தாண்டவம் ஆடிய போது, அவரது உக்கிரம் தாங்காது தேவர்கள் மயக்கநிலைக்குச் சென்றனர். சுவாமி தன் தலையிலிருந்த கங்கையைத் தெளித்து அவர்களை எழுப்பினார். இதனடிப்படையில் இங்கு தீர்த்தம் தரப்படுகிறது.

நடராஜரின் துணைவியை சிவகாமி என்பர். ஆனால், திருவாலங்காட்டு அம்மாளுக்கு 'சமிசீனாம்பிகை' என்று பெயர். நடராஜரின் நடனத்திற்கு ஈடுகொடுத்து, காளி ஆடிய போது 'ஒரு பெண்ணால் இப்படியும் ஆட முடியுமா'? என இந்த அம்பாள் ஆச்சரியமடைந்தாள். இதனால், இவளுக்கு 'சீனாம்பிகை' என்ற பெயர் ஏற்பட்டது. சீனம் என்றால் 'ஆச்சரியம்'. இவள் இடதுகை நடுவிரலை மடக்கி, கன்னத்தில் கை வைக்கப்போகும் நிலை ஆச்சர்யப்படும் பாவனையுடன் முகத்தை வைத்திருக்கிறாள். இந்தச்சிலை அமைப்பு காண்போரை ஆச்சரியப் பட வைக்கிறது.

நடனக் கலையின் தந்தையான சிவ பெருமானின் நடனமாடும் தோற்றம் "நடராஜ ராஜன்" எனப்படுகிறது. இதுவே மருவி "நடராஜர்" என்று அழைக்கப்படுகிறது. தில்லைச் சிதம்பரத்திலும், திருவாலங்காட்டிலும் நடராஜரின் நடனம் காண்பதற்கு தவம் செய்திருக்க வேண்டும். சிதம்பரத்தில் ஒவ்வொரு வருடமும் நாட்டியாஞ்சலி என்ற நாட்டிய விழா சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. உலகில் பல்வேறு இடங்களில் நாட்டியம் பயிலும் கலைஞர்கள், தங்களுடைய நாட்டியத்தை இங்கு அர்ப்பணிக்கின்றனர்.

"இறவாத இன்ப அன்பு வேண்டும்"

## சந்நிதிக் கந்தன் கழற்கோர் கவிமாலை - 26

**பல்லவி**


நின்றழு மெனக்கிரங்கி நீடருள் நல்காயோ?
என்றனை யாளவுன இணையடி துணையென்றே

**அநுபல்லவி**

பன்மன இருளகற்றும் பானுவே கௌரிமைந்தா!
பன்னிரு விழிமலர்ந்தே பரிவுடன் பார்த்தி டென்று

**சரணம்**

பொன்பொருள் இச்சையினால் பூதலத்தே யுழன்று
கொன்றையும் கடம்புமணி குமரனுனை மறந்தேன்
கன்றிய பவம்நீங்கி கடையவன் நானுந்தன்
பொன்னடி பெறுமாறு பூங்கழலிணை வேண்டி
தன்னகக் கமலமுள சந்நிதி வீதிதோறும்
சென்னியா றுடையஐயா! சேவடி துணையென்றே
அன்பினாற் பிணிப்புண்டு ஆடியும் பாடியும்
தன்னிலை மறந்தழுவார்க் கருள்வேள் உன்முன்னே (நின்றழு)



-இராசையா குகதாசன்-

(தொடர்ச்சி...

# கந்தனே கலியுகத் தெய்வம்



**திரு கே.வி. குணசேகரம் அவர்கள்**

"பரித்ராணாய ஸாதூனாம் விநாசாய சதுஷ்க்கு தாம்
தர்மஸம்ஸ்தாப நார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே".

என்று பகவத்கீதை இறைவனின் தோற்றம் பற்றிக் கூறுகின்றது. நல்லவர்களைப் பாதுகாக்கவும், தீயவர்களை அடக்கவும், தர்மத்தை நிலைநாட்டவும் கடவுள் அவ்வப்போது அவதாரம் எடுக்கிறார் என்றும் பகவத்கீதையில் மஹா விஷ்ணு முருகனாக அவதாரம் எடுத்துத்தான் அசுரர்களைத் தான் அழித்ததாக விபூதியோகத்தில் கூறுகிறார். இதன்படி கந்தபுராணம் கூறும் சேனாதிபதியான முருகன் மஹா விஷ்ணுவின் அம்சம். கந்தபுராண யுத்தத்தின் பின் அசுரர்கள் தோன்றுவதில்லை. அசுரத்தனமான மனிதர்களால் அரக்கத்தனம் செய்யப்படுகிறது. அதை அழிக்க முருகன் ஒருவனால்த்தான் முடியும் என்று கச்சியப்பர் கூறுவதையே பாலன் தேவராஜன் தனது கந்தசஷ்டிக் கவசத்தில் கூறுகிறார். அதை சங்ககாலத்தில் நக்கீரர் கூறியிருந்தார். கந்தரலங்காரப் பாடல் ஒன்று முருகனைப்பற்றி இவ்வாறு கூறுகிறது.

"பக்தித் திருமுக மாறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கு மமுதுகண்டேன் செயன் மாண்டடங்கப்
புத்திக்கமலத் துருகிப் பெருகிப் புவனமெற்றித்
தத்திக் கரைபுரளும் பரமானந்த சாகரத்தே"

எங்கும் ஏக உருவாய் விளங்கும் பூரணத்துவமுடைய சிவனிடத்திலிருந்து ஓர் இனிமையான அமிழ்தம். இந்த அருமையான அமிழ்தம்தான் ஆறுமுகங்களும் பன்னிரு தோள்களுமாய்த் திகழும் ஆறுமுகப்பரம்பொருள். இந்த அமிழ்தத்திற்கு எண்ணற்ற திருப்பெயர்கள் உண்டு. இந்த அமிழ்தத்தைக் கண்டால் கண்கள் பரவசமாகும். உடல் சிலிர்க்கும். முருகன் என்ற பெயரைச் சொன்னாலும், கேட்டாலும் நினைத்தாலும் வேண்டியவை கிடைக்கும். எண்ணற்ற இன்பங்கள் கிடைக்கும். இந்த அமிழ்தத்தை சரிவரப்புரிந்தோர் முத்தியின்பம் பெறுவர். இந்த இன்பத்தைப்பற்றி குமரகுருபர சுவாமிகள் கந்தர் கலிவெண்பாவில் பின்வருமாறு கூறுகிறார்.

"பச்சை மயில் வாகனமும் பன்னிரண்டு திண்டோளும்
அச்சம் அகற்றும் அயில் வேலும்- கச்சைத்
திருவரையும் சீறடியுஞ் செங்கையும் ஈராறு
அருள் விழியும் மாமுகங்கள் ஆறும் -விரிகிரணம்
சிந்தப் புனைந்த திருமுடிகள் ஓராறும்
எந்தத்திசைகள் எதிர்தோன்ற - வந்த இடுக்கண்
எல்லாம் பொடிபடுத்தி எவ்வரமும் தந்து புகுந்து
உல்லாசமாக உள்ளத்திலிருந்து அருள்வான்"என்கிறார்.

இந்து சமயத்தை ஆறாக வகுத்த ஆதிசங்கராச்சாரிய சுவாமிகள் ஸ்ரீ சுப்பிரமணிய

புஜங்க ஸ்தோத்திரத்தில் முருகனின் பெருமையை வியந்து கூறுகிறார். ஆறுமுகப் பெருமானான முருகனே மனதில் உண்டாகும் துன்பங்களை நீக்குபவன். துன்பப்படுவோர் உமாதேவியின் புதல்வனான கந்தனை ஒருமுறை மனமுருகி அழைத்தால் உடன் வந்து உண்டான துன்பங்களைப் போக்குவான். மக்கள் ஆறுமுகப்பரம்பொருளான முருகனை எந்நேரமும் தியானம் செய்யவேண்டும் என்றும் கூறுகிறார்.

"அஹம் ஸர்விதா துக்க பாராவ ஸந்தோ
பாவாந் தீநபந்து; ஸ்த்வதந்யம்ந யாசே
பவத் பிக்து ரோதம் ஸதர க்லுப் தபாதம்
மாமதிம் த்ருதம் நாசயோமா ஸுதத்வம்"

என்று சங்கரர் சுப்பிரமணிய புஜங்கஸ் தோத்திரத்தில் கூறுவதை நாம் நினைத்துப் பார்த்தல் வேண்டும்.

பாம்பன் சுவாமிகள் ஒரு முருகபக்தர். அவரின்மீது குதிரைவண்டி ஏறியதால் அவரது கால் எலும்பு முறிந்துவிட்டது. சுவாமிகள் தனது ஆகாரத்தில் உப்பைச் சேர்ப்பதில்லை. சிகிச்சை செய்த வைத்தியர் உணவில் உப்புச் சேர்த்தால்தான் முறிந்த காலின் பகுதி பொருந்தும் என்று கூறினார். சுவாமிகள் உப்பைச் சேர்க்காது "முருகன் குணப்படுத்துவான்" என்றுகூறிவிட்டுப் படுத்த படுக்கையாகவே இருந்தார். ஒருநாள் அவரின் படுக்கை அருகே வந்த மயில்கள் இரண்டு தமது தோகையால் பாம்பன் சுவாமிகளின் காலை வருடின. அப்போது சுவாமியின் கண்களுக்குமுன் வேல் தோன்றியது. குழந்தை ஒன்று அவரைத் தழுவியது. சுவாமிகள் சண்முக கவசம் என்ற நூலைப் பாடினார். சுவாமிகளது கால் பொருந்தியது. இன்றும் நோயுற்ற மனிதர்கள் சண்முக கவசத்தை 48 தினங்கள் பாடி நோய் குணமடைகிறார்கள். "எந்தக் கடவுளும் என்கோன்போல் கந்தக் கடவுளை மிஞ்சாதே" என்பது பாம்பன் சுவாமிகளின் அமுதவாக்கு.

திருப்போரூரில் வாழ்ந்த சிதம்பர சுவாமிகள் கந்தன்மீது அளவற்ற பக்தி கொண்டவர். அவர் திருப்போரூரில் பாழடைந்திருந்த முருகதலம் ஒன்றைப் புணருத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் செய்வித்தவர். முருகப்பெருமான்மீது "திருப்போரூர்ச் சந்நிதிமுறை" என்னும் பதிகத்தை நெஞ்சுருகப் பாடியவர். இப்பாடல்கள் மிகவும் இனிமையானவை. முருகனின் மனதைக் குளிரப் பண்ணுபவை. குழந்தையின் அழுகுரலைக் கேட்ட தாய் பதைபதைத்து ஓடோடி வந்து குழந்தையை எடுத்து அணைத்துப் பாலூட்டி மகிழ்விப்பதைப்போல முருகப்பெருமான் தனது பக்தர்கள் துன்பப்பட்டு அழுதழுது அழைக்கும்போது பெருவிருப்போடு ஓடோடி வந்து தனது பன்னிரு கரங்களாலும் அழுவோரின் துயரைத் துடைத்து இன்பம் தருவான் என்று சிதம்பர சுவாமிகள் தனது பாடலில் குறிப்பிடுகிறார்.

"குழவிய பூதகுரல் கேட்ட தாய் வந்
தழுத கண்ணீ மாற்றி அமுதூட்டுங்- கொழுதகைபோல்
நாயேன் இடர்களைந்து நல்லருளூட்டும் போரூர்ச்
சேயே நம் தாயாருந்தோ" என்பது சிதம்பர சுவாமிகளின் பாடல்.

ஆறுமுகப்பெருமானின் சேவற்கொடியையும், அழகே உருவான மயிலையும், திருக்கரத்தில் இருந்து அடியார்களின் அவலங்களைப் போக்கும் வேலையும் போற்றித் துதிப்போரை எந்தவிதமான துன்பங்களும் அணுக அஞ்சும் என்றும் சிதம்பர சுவாமிகள் கூறுகிறார்.

“கோழிப் பதாகையுஞ் சீரோலமயில் வாகனமும்
ஆழிப்பெருக் குறிஞ்சியார் வேலும்- வாழியெனத்
தோத்திரஞ்செய்; போரூரிற் சுந்தரனார் பேரருளோ
மாத்திரையில் நெஞ்சே வரும்”

அருணகிரிநாதர் தனது திருப்புகழில் முருகன்தான் ஆறு சமயங்களினதும் தலைவன் எனப் பாடுகிறார்.

“அறு சமய சாத்திரப் பொருளோனே
அறிவுளறிவார்க் குணம் கடலோனே”

என்று குறிப்பிடுவதும் கவனிக்கத்தக்கது. அத்துடன்,

“அறு சமயக்கடவுள் வேறு வேறின்றி யான் ஒருவனே யங்கங் கிருத்
தன்பர்க்கு முத்திதரு வித்தென்று யாவர்க்கும் அறிவித்த வதனமணியே”

என்று சிதம்பர சுவாமிகளின் திருப்போரூர் சந்நிதிமுறை'யும் குறிப்பிடுகிறது.

ஆறுமுகப்பெருமானை தலைவனாகக் கொண்டு சமரசசன்மார்க்க சங்கம் நிறுவி உலகிற்குச் சகோதர ஒற்றுமையைப்பற்றி உபதேசித்தவர் இராமலிங்க சுவாமிகள். இவரது பாடல்கள் முருகனை உலகின் தலைவன் என்றும், அவனை வணங்கினால் சகல பேறுகளையும் பெறலாமென்றும் கூறுகிறது.


ஆறுமுகப் பெருமானை ஒவ்வொருவரும் தமது தெய்வமாகக் கொண்டு வழிபடவேண்டும் என்றும், அப்படி வழிபட்டால் உலகில் கிடைத்தற்கரிய பேறுகள் யாவும் கிடைக்கும் என்றும் கூறுகிறார். அவர் அருளிய ஸ்ரீ சுப்பிரமணிய புஜங்கத்தின் 28ஆவது பாடல் மேலே சொன்னவற்றைக் கூறுகிறது.

வேதகாலத்திலிருந்து நாம அர்ச்சனை செய்யும்முறை இருந்து வருகிறது. முருகனுக்கு இலச்சத்து எட்டு நாமங்கள் உள்ளன. அவற்றைப் பக்தர்கள் உச்சரிக்கும்போது முருகன் மிகவும் மகிழ்ச்சியடைவதாக அருணகிரிநாதர் சொல்கிறார். முருகன், கந்தன், குமரன், மயில்வாகனன், காங்கேயன், சுவாமிநாதன், சரவணபவன், வள்ளிமணாளன், விசாகன், தேவசேனாதிபதி, சூரசங்காரன் போன்ற பல நாமங்கள் உள்ளன. ஆறுமுகப்பெருமானது நாமத்தைச் சொன்னால் இன்பம் வந்து சேரும், வினைகள் தொலைந்துபோகும், மலைபோல உள்ள துன்பங்கள் மடுபோலாகும். அதனால் முருகனது நாமத்தை எப்பொழுதும் சொல்லப்பழகுல் வேண்டும்.

(தொடரும்...

## சந்நிதிக்கு அரசு

அரிதிரு மருகோனே – சந்நிதிக்
கரசென அமர் வோனே
தெரிதரு தமிழ்பாடி உந்தன்
திருவருள் பெற வந்தேன்
உடலுறு பிணி தீர்த்தே – உள்ளத்தே
நல் உணர்வினை தருவாயே
விரிசுடர் வேலுடையாய் – எந்தன்
வேதனை அறியாயோ.



*-கா. கார்த்திகேசு-*

# பிணங்கும் சமயங்கள்; இணங்கும் சைவம்

திரு இ. லம்போதரன் அவர்கள்

புறச்சமய நெறிநின்றும் அகச்சமய ம்புக்கும்
புகல்மிருதி வழிஉழன்றும் புகலும்ஆச் சிரம
அறத்துறைகள் அவை அடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பலதெரிந்தும் ஆரணங்கள் படித்தும்
சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேத
சிரப்பொருளை மிகத்தெளிந்தும் சென்றால் சைவத்
திறத்தடைவர் இதில்சரியை கிரியா யோகம்
செலுத்தியபின் ஞானத்தால் சிவன் அடியைச் சேர்வர்.

-சிவஞானசித்தியார் 263ஆம் பாடல்-

இங்கு புறச்சமயங்கள் என்றது கடவுள் இல்லை என்று கூறும் உலகாயுதம், பௌத்தம், சமணம் ஆகிய மதங்களாம். இன்றும் சைவ சமயத்தில் இருந்தாலும் கடவுள் என்று ஒருவர் இல்லை; இந்த வாழ்க்கை குறுகியது; இதற்குள் இளமை போவதற்குள் அனுபவிப்பதை எல்லாம் அனுபவித்து விட வேண்டும் என்று துடிப்புடன் ஓடியோடி அனுபவிக்கத் துடிப்பவர்கள் எல்லாம் உலகாயுதர்களே.

கடவுள் என்று ஒன்று இல்லை; நாம் நல்லதைச் செய்தால் நல்லதே நடக்கும்; தீயதைச் செய்தால் தீமையே விளையும் என்று கடவுளை ஏற்றுக்கொள்ளாமல் கர்மாவை ஏற்றுக்கொண்டுள்ள பலர் எம்மிடையே உள்ளார்கள். இவ்வாறு முடிந்தவரை மற்றவர்களுக்குத் தீங்கு செய்யாமல் இயலுமாயின் நன்மை செய்து வாழ முயலும் சைவர்கள் எல்லாம் பெயரளவிலே சைவர்களாக உள்ள சமணர்களும் பௌத்தர்களுமே. தமது சுய முயற்சியால் அல்லது எத்தனிப்பால் தமது உள்ளத்தை தூய்மைப்படுத்தி ஆணவத்தை அடக்கி ஆன்ம விடுதலை பெறமுடியும் என்று கூறுகின்ற சைவர்களும் உண்மையில் பௌத்தர்களே.

சகல மதங்களையும் உள்வாங்கி ஏற்றுக்கொண்டு தனது அங்கங்களாகக் கொண்டுள்ள சைவம் கடவுளை ஏற்றுக்கொள்ளாத இவர்களை எல்லாம் தனது வெளிவட்டத்தில் உள்ள புறப்புறச் சமயங்கள் என்று இனங் காணுகின்றது.

கடவுள் என்று ஒருவர் உள்ளார் என்று ஏற்றுக்கொண்டுள்ள மதங்கள் எல்லாம் இதற்கு உள்ளாக உள்ள வட்டத்தில் வருகின்றன. இவ்வாறு கடவுள் உள்ளதை உணர்ந்து ஏற்றுக்கொள்ளுதல் பல பிறவிகளுக்கூடாகவும் வரலாம்; ஒரே பிறவியிலேயே இப்படி முறைகளினூடாக வரலாம்.

தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி- என்று மாணிக்கவாசகர் இதைக் கூறுகின்றார். இங்கு கடவுளை ஏற்றுக்கொண்டு வேதங்களை ஏற்றுக்கொண்ட சமார்த்தம் வைணவம் முதலான இந்து மதப்பிரிவுகள் அடங்குகின்றன. இந்துமத வேதங்களையோ அல்லது அவை கூறும் கர்மா மற்றும் மறு பிறப்புக் கொள்கைகளையோ ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் தெய்வம் உள்ளது என்று ஏற்றுக்கொண்டு தத்தமக்கு என்று புறம்பான வேத நூல்களைக் கொண்டுள்ள கிறிஸ்தவம், இஸ்லாம், யூத மதம்போன்ற மதங்கள் கூட இப்பிரிவில்தான் அடங்குகின்றன.

கடவுள் என்று ஒருவர் இருக்கின்றார்;

ஏற்றுக்கொள்கின்றேன். ஆயினும் நான் செய்யும் நல்லதும் கெட்டதும்தான் எனது வாழ்க்கையைத் தீர்மானிக்கின்றது. இதிலே கடவுள் தலையிட்டுச் செய்வதற்கு ஒன்றுமில்லை. அல்லது அவரால் அவ்வாறு தலையிட்டு என்னை மீட்கவோ அல்லது தண்டிக்கவோ முடியாது என்று கடவுளைவிட நாம் செய்யும் நல்வினை தீவினை ஆகிய கர்மாக்கள் பலமானவை என்று கூறும் சைவர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் சைவர் என்ற பெயரில் உள்ள மீமாம்சகர்கள். அவர்கள் நாம் செய்யும் கர்மாக்களினால் கடவுளையே எமது கட்டுக்குள் கொண்டுவரலாம் என்று நம்புபவர்கள்.

இதேபோல எமது சுயமுயற்சியினால் எமது உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி, எமது ஆணவத்தை அடக்கியே ஆன்ம விடுதலை கிட்டும் என்று எமது முயற்சியிலேயே தங்கி இருப்பவர்களும் மீமாம்சகர்களே. பௌத்தர்களும் இவ்வாறு தமது சுய முயற்சியினால் பஞ்சசீலங்களை மேற்கொண்டு அட்டாங்க யோகம் வழி ஒழுகிவர ஆன்ம விடுதலை கிடைக்கும் என்று கூறுகிறார்கள். ஆனாலும் அவர்கள் கடவுள் என்று ஒன்று உள்ளதாக ஏற்றுக்கொள்வதில்லை.

இவ்வாறு பல கலைகளையும் புராணங்களையும் வேதங்களையும் அறிந்து தவநெறிகளை மேற்கொண்டு ஒழுகி இவற்றின் உச்சமாக உள்ள உபநிடதங்களின் வேதாந்த கருத்துக்களை உணர்ந்து தெளிந்து அத்துவிதம், துவிதம், விசிட்டாத்துவிதம் ஆகியவற்றுள் ஒன்றை தமது வேதாந்தமாக உணர்ந்து ஒழுகும் சைவர்கள் உண்மையில் சமார்த்தர்களே.

மெய்யியலின் நுணுக்கமான பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மைகளைக் கூறும் ஆகமங்களை ஏற்றுக்கொண்டுள்ளவர்கள் சகல மதங்களையும் உள்வாங்கி உலகளாவியுள்ள சைவத்தின் உள்ளக வட்டத்தில் வருகின்ற அகச் சமயிகளாம். பாடாணவாத சைவம், பேதவாதசைவம், சிவசமவாதசைவம், சிவசங்கிராந்தவாத சைவம், ஈசுவரவிகாரவாத சைவம், சிவாத்துவித சைவம் என்கின்ற ஆறு சமயங்களும் வேதங்களைப் பொதுநூலாகவும், ஆகமங்களை சிறப்பு நூல்களாகவும் ஏற்றுக்கொண்டு அவை கூறும் பதி, பசு, ஆணவம், கன்மம், சுத்தமாயை, அசுத்தமாயை என்கின்ற ஆறு இருப்புக்களையும் ஏற்றுக்கொள்வதால் சைவத்துக்கு மிக அணித்தாக மையநோக்க வட்டத்திலே மையத்துக்கு அணுக்கமாக உள்ள அகச்சமயங்கள் ஆறாகக் கொள்ளப்படுகின்றன. இவை முத்திநிலை பற்றிய கருத்திலே தமக்குள்ளும், சைவத்திலிருந்தும் வேறுபடுகின்றன.

"அறுவகைச் சமயத்தோர்க்கு அவ்வவர் பொருளாய்" என்று சிவஞான சித்தியார் இவ்வாறு ஆறு ஆறாக நாம் காணுகின்ற இச்சமயங்களுக்கு அவ்வவற்றின் பொருளாயும் முடிபாயும் இருப்பது சிவனே என்று கூறுகின்றது.

ஆறு ஆறாக வகுக்கப்பட்டுள்ள இந்த சமய வட்டத்தில் மையமாக சைவம் காட்டப்பட்டுள்ளது. அந்தந்த மதங்களில் உள்ளவர்கள், அந்தந்த ஆசாரங்களைக் கடைப்பிடித்து ஒழுகி, அந்தந்த மதங்கள் கூறும் சுவர்க்கம் போன்ற போகங்களையும், பத முத்திநிலைகளையும் அனுபவித்து, அவற்றின் நற்பயனால் இறுதியில் சைவ நெறியின்படி ஒழுகி, பரமுத்தி நிலையாகிய மீளாத இறையின்பம் பெற்றுய்வர் எனச் சைவ நூல்கள் கூறும்.

தீதார் புறமாஞ் சமயங்கள் சென்று முன்னர்ச் செய்வினையால்
வேதாகமத்துட் புறநெறிக்கண் மேவி அகத்து விரவிப் பின்
மீதாஞ் சைவசித்தாந்த மெய்த் தேசிகன் அருள்பெறும்

-யாழ்ப்பாணம் வடகோவை சபாபதி நாவலர் பாடிய திருவிடைமருதூர் பதிற்றுப் பத்தந்தாதி பாடல் 64-

அருசம யத்திற் கடந்தசை வத்தின் அன்றிவீ டிலதெனத் தெளிந்து
-கந்தபுராணம் பாடல் 83-

உலகின் கடந்தகால, நிகழ்கால, எதிர்காலத்துச் சமயங்கள் எல்லாம் இவ்வாறு இறைவனை அடைய உதவும் படிமுறைகளே; இப்படி இறைவனை அடைய உதவும் சைவத்தின் ஏணிப்படிகளே என சைவம் கூறுகின்றது. இந்தப் படிமுறை நெறியை சோபான மார்க்கம் எனக்கூறுவர்.

முத்தியை முற்ற வைத்தார் முறைமுறை நெறிகள் வைத்தார்
-திருநாவுக்கரசர் தேவாரம், திருவையாற்றுப்பதிகம்-

பேணித் தொழுமவர் பொன்னுலகு ஆளப் பிறங்கருளால்
ஏணிப் படிநெறி யிட்டுக் கொடுத்து
-திருநாவுக்கரசர் தேவாரம், திருவையாற்றுப்பதிகம் (4-92-16)

இவ்வாறு நாத்திக வாதம் உட்பட உலகின் எல்லா மதங்களையும் உள்வாங்க சைவத்தின் மெய்யியல் இடம் தருகின்றது. ஆனால் ஏனைய மதங்களில் ஒன்றுகூட இவ் வாறு பிற மதங்களில் ஒன்றையோ, தமது உட்பிரிவு மதங்களைக்கூட ஏற்று உள்வாங்க அவற்றின் மெய்யியல் கொள்கைகள் இடம் கொடுப்பதில்லை. சைவம் எல்லா மதங்களை யும் ஏற்றுக்கொள்வதுபோல அவற்றால் ஒரு புற மதத்தைக்கூட ஏற்றுக்கொள்ள முடி வதில்லை. அவ்வாறு ஏற்றுக்கொள்ளும்போது ஒன்றில் அவர்களின் சமய மெய்யியலில் இருந்து வழுவுகின்றார்கள்; அல்லது சைவம் கூறும் ஏணிப்படி வழியில் மேலேறி சைவத்தின் உள் வட்டத்துக்குள் வருகின்றார்கள். இவ்வாறு உலக மதங்களுக்கு எல்லாம் புறம்பாக இல் லாமல் மையமாக இருப்பதால்தான் "மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்" என்று கந்தபுராணமும் "ராசாங்கத்தில் அமர்ந்து வைதிக சைவம்" என்று தாயுமானவர் பாடலும் கூறுகின்றன. இவை ஒன்றும் வெற்றுத் தம்பட் டம் அல்ல. சைவம் விளங்கினால் உலகின் எல்லா மதங்களும் விளங்கும். அவ்வச் சமயத்தவர்கள் அவ்வச் சமய வழிப்படி ஒழுகி வாழ வழிகாட்டும் உலக சமயமே சைவம். எந்தச் சமயத்தில் இருந்தாலும் இந்தச் சைவத்தை பெயர் உணர்ந்தோ உணராமலோ ஏற்றுக்கொண்டால் ஒழிய மதங்களினால் உலக சமாதானமும், மனிதகுல ஐக்கியமும் சாத்தியமில்லை.

இவ்வாறு உலகின் கடந்தகால, நிகழ்கால? எதிர்கால சமயக்கொள்கைகளை எல்லாம் ஏற்றுக்கொண்டு அவற்றை எல்லாம் ஒன்றையும்கூடப் புறந்தள்ளாது உள்வாங்கி தனது அங்கங்களாக்கியும் எல்லா மதங்களும் ஒன்றுதான்; ஒரே இலக்கையே அடைய உதவு கின்றன. என்ற மேலோட்டமான ஆன்மீக வாதங் களால் தனது தனித்துவத்தை இழக்காமலும் உள்ளது சைவம். சைவம் மற்ற மதங்களை ஏற்றுக்கொண்டு அவற்றுக்கு அங்கீகாரம் அளிக்கும் அதேசமயம், அவற்றுக்கும் சைவத் துக்கும் உள்ள வேறுபாடுகளையும் எடுத் துரைக்கின்றது. பிறமதக் கருத்துக்களை அவ்வாறே தமது நூல்களில் எடுத்துச்சொல்லி அவற்றுக்கும் சைவத்துக்கும் இடையே உள்ள பேதங்களை விளக்கும் வழமை உலக சமயங் களிலேயே சைவத்துக்குத்தான் உள்ளது. வேறு எந்த சமயமும் இன்னொரு சமயத்தைப் பற்றி தமது தத்துவ நூல்களிலே விளக்குவ தில்லை. இந்த ஆரோக்கியமான அணுகு முறை சைவத்தின் தனித்துவம். எதிர்ச்சமயங் களை மட்டுமல்ல அவர்களது கலாச்சாரத்தை யும், மக்களையுமே சுவடுகள் இன்றிப் புத்தி யாலும், கத்தியாலும், வேரறுத்து உலக சமாதானமும் ஐக்கியமும் காணமுயலும் இன் றைய தலைமுறையினர் சிந்திக்க வேண்டும்.

ஓது சமயங்கள் பொருள் உணரு நூல்கள்
ஒன்றோடு ஒன்று ஒவ்வாமல் உள பலவும், இவற்றுள்
யாது சமயம்? பொருள் நூல் யாதிஉ இங்கு? என்னின்,
இதுவாகும், அது அல்லது, எனும் பிணக்கது இன்றி
நீதியினால் இவை எல்லாம் ஓரிடத்தே காண
நின்றது யாது ஒரு சமயம்? அதுசமயம், பொருள் நூல்,
ஆதலினான் இவை எல்லாம் அருமறை ஆகமத்தே
அடங்கியிடும், இவை இரண்டும் அரனடிக் கீழ் அடங்கும்

-சிவஞான சித்தியார்- சுபக்கம்- பாடல் 265-

# சமயங்களில் சிறந்த சைவம்

சைவசமயமானது அன்பினை நெறிப்படுத்தி, அன்பை முதன்மைப்படுத்தும் ஒரு சிறந்த சமயமாகத் திகழ்கின்றது. இதையே திருமூலர் "அன்பே சிவம்" என்று சைவத்தின், சிவத்தின் அன்புநெறியை வெளிப்படுத்தி உள்ளார். சைவ சமயமானது, பிறசமயங்களைப்போலவே மனப்பரிபக்குவத்தை விளக்குகின்றது. மனத்தினை அறிவு அனுபவம், தெய்வீகம் போன்ற மூவகை நிலைகளில் பக்குவப்படுத்தலாம்.

இங்கு அறிவு என்பது யோகம் எனப்படும். இவ்வாறான யோகநிலையால் அறிவியல் முதிர்ச்சியால் மனம் தெளிவடைவதைக் காணலாம். இதனால் மனம் பரிபக்குவமடையும். இவ்வாறு மனப்பரிபக்குவம் ஏற்படுவது அறிவியற்பாற்பட்டது. அடுத்தது அனுபவம், அனுபவமானது புராண, இதிகாசம் பாற்பட்டது. அதாவது முன்னர் நடந்ததை பகுத்துணர்ந்து தெளிந்து உண்மையை அறிந்து மனத்தூய்மை பேணப்படும். இதனால் மனம் பரிபக்குவமடையும். இறுதியாக தெய்வீக உணர்வு. தெய்வீக உணர்வு என்பது மிகவும் எளியது. அறிவிற்கும் அனுபவத்திற்கும் தேடல், கடும் முயற்சி அவசியம். ஆயினும் சைவசமய நெறி வகுப்புபடி ஒழுகுதல்மூலம் மனம் தூய்மை பெறும். சாத்வீக குணம் மேலோங்கி, மனந்தூய்மை பெறும்.

ஒருநிலைப்படுத்தலால் இறைவணக்கம் என்பன செலுத்தி எமது சிந்தனைகளை கட்டுக்கோப்புக்குள் வைத்திருந்து, பிற விடயங்களில் எமது புலன் திருப்பத்தை குறைப்பதனூடே மனப் பரிபக்குவத்திற்கு வழி ஏற்படுகின்றது. பாமரனும் இறை வழிபாட்டால் உண்மையாகிய பரம்பொருளை அறியலாம். அவ்வாறான சிறந்த உண்மை நெறியை அடைய சைவாகமமும், சைவ சித்தாந்தமும் வழிவகைகளை எடுத்துக்கூறுகின்றன. அன்பின் வழி இயங்கி, மனத்தினை ஒருநிலைப்படுத்தி, நாம் நம்மைப்பற்றி தேடலில் ஈடுபட்டு உண்மையை தெளியவேண்டும். இந்த வகையில் பிறசமயங்களினின்று வேறுபட்டு உயர் தத்துவவியல் ஒழுக்கங்களை, விழுமியக் கருத்துக்களை சைவம் போதிக்கின்றது. ஜீவகாருணியம், தானம், தர்மம், அன்னமளித்தல், சரியைமுறை, நலிவுற்றோர், ஏழைகளிற்கு உதவுதல் என ஒரு விழுமியச் சிறப்பை விளக்குவதைக் காணலாம்.

எறும்பிற்கு உணவளிக்க உதவும் கோலம் முதல் உயிர் காக்கும் உதவி வரை பல்வேறு படிநிலையில் வாழ்வின் வரம்புகளை நிர்ணயிக்கவும், திறம்பட வாழ்வை நடாத்தவும் சைவசமயம் தூர நோக்கில் நடைபயின்று வருகின்றது. இவ்வாறு எம் வாழ்வினை நிர்ணயிக்கும், சிறந்த விழுமிய எண்ணக்கரு சைவத்தில் மிகச்சிறப்புற இழையோடி இருக்கின்றது. எனவே நாமும் சைவத்தின் சிறப்பை, அதன் கட்டுக்கோப்பை மதித்து, அதன்வழி இல்வாழ்வை நல்வாழ்வாக மாற்றி சிவத்துவத்தை அடைவோமாக.

திருமதி ப. மனோன்மணி.



தொடர்ச்சி...

# கீர்த்தித் திருவகவல்

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்
யாழ்ப்பாணம்- காரைநகர்

அந்தமில் பெருமை யழலுருக் கரந்து
சுந்தரவேடத் தொருமுத லுருவுகொண்டு
இந்திர ஞாலம் போலவந்த ருளி
எவ்வெவர் தன்மையுந் தன்வயிற் படுத்துத்
தானே யாகிய தயாபர னெம்மிறை
சந்திர தீபத்துச் சாத்திர னாகி
அந்தரத் திழிந்துவந் தழகமர் பாலையுட்
சுந்தரத் தன்மையொடு துதைந்திருந் தருளிய

**பொழிப்புரை:**

அந்தம் இல் பெருமை அழல் உரு கரந்து-முடிவில்லாத பெருமையினையுடைய தீப்பிழம்பின் வடிவத்தை மறைத்து, சுந்தர வேடத்து ஒரு முதல் உருவு கொண்டு- அழகிய கோலத்தினையுடைய ஒப்பற்ற ஞானாசாரிய முதல்வராய் வடிவங்கொண்டு, இந்திர ஞாலம் போல வந்தருளி- இந்திரசாலவித்தைபோல வந்தவழி அறியப்படாமற் றோன்றி, எவ் எவர் தன்மையும் தன் வயின் படுத்து- எந்த எந்தத் தேவர்களது தன்மைகளையும் தன்னிடத்தே அடங்க வைத்து, தானே ஆகிய தயாபரன் எம் இறை- தான் ஒருவனே முழுமுதற் கடவுளாகிய அருளினால் மேம்பட்ட எமது தலைவன், சந்திரதீபத்து சாத்திரன் ஆகி- சந்திரதீபம் என்னும் திருப்பதியிலே கலைவல்லோனாய் உருவுகொண்டு, அந்தரத்து இழிந்து வந்து- ஆகாயத்தினின்றும் இறங்கிவந்து, அழகு அமர் பாலையுள்- அழகு பொருந்திய பாலை என்னும் தலத்தின்கண், சுந்தர தன்மையொடு துதைந்து இருந்தருளியும்- அழகிய இயல்போடு நெருங்கியிருந்தருளியும்.

அந்தம்- முடிவு. அழலுரு வென்றது இறைவனுடைய தீப்பிழம்பு போன்ற ஒளிவடிவத்தை. "அழறிகற் மேனி" ஒளி கொண் மேனியுடையாய்" (ஞான 261:4; 197:6) எனத் தேவாரத்து வருவனவும் காண்க. சுந்தரவேடம் என்றது வட்டவடிவமாய் ஒவ்வொரு பொன்மணியைக் கொண்ட ஆறு ஆறாகிய காதணிகளை. அவை ஞானாசாரியர்களால் அணியப்படுவன.

எவ்வெவர் தன்மையுந் தன்வயிற் படுத்து என்றது எவ்வெச் சமயிகள் எவ்வெத் தெய்வங்களை வணங்குகின்றார்களோ அவ்வத் தெய்வங்களின் தன்மைகளைத் தன்தெய்வத் தன்மையில் அடங்கவைத்து என்றவாறு. இதனை,

"யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாகனார்தாம் வருவார்" (சூத் 2 செய் 25)

எனச் சிவஞானசித்தியாரிலும்,

"எவ்வெவர் தம்மை யேனும் யாவரே யெனினும் போற்றின்
அவ்வவ ரிடமாக் கொண்டே யவர்க்கருள் தருவாய் போற்றி" (கந்தவிரதப் 65)

எனக் கந்தபுராணத்தும் வருவனவற்றாலுமறிக.

எல்லாவுயிர்களின் இயல்புகளையும் தன்னகப்படுத்து தான் அவற்றோடு ஒன்றாய் நிற்பினும் இறையியல்பு அவ்வுயிரியல்புகளின் வேறாய் முதன்மையுற்று நிற்குமென்றற்குத் 'தானேயாகிய' என்றும், மேலோனாகிய இறைவன் வந்தருள்வது உயிர்களின்மேற் கொண்ட கருணையால் என்பது தோன்றத் 'தயாபரன்' என்றும் அருளிச் செய்தனர். "அந்தமில் பெருமையழலுருக் கரந்து" (92) என்பதுமுதல் 'தானே யாகிய தயாபரன்' (96) என்பதுவரை இறைவன் ஞானாசாரியனாக வந்தமையைக் குறிப்பதாகும்.

சந்திரதீபம்- சந்திரதீவு. சாத்திரன்- கலைவல்லோன்; ஆசிரியன் என்றவாறு. அந்தரம்- ஆகாயம். "அந்தரக் கொட்பினர் வந்துடன் காண" (174) என்னும் திருமுருகாற்றுப்படையினும் இப்பொருட்டாதல் காண்க. அமர்- பொருந்திய. பாலை என்பது சந்திரதீபத்துள்ள தலம். இது திருக்கழிப்பாலை என்னும் தலமோ என எண்ண இடமுண்டு.

(தொடரும்...

**# மனநிலை சரியில்லாதவர்களுக்கு அமாவாசை, மற்றும் பௌர்ணமி நாட்களில் பாதிப்பு அதிகமாக இருக்கும் என்பது உண்மையா?**

*சந்திரன் உலகத்தின் கண்களுக்குப் புலப்படாத வேளை அமாவாசை. முழு வளர்ச்சியில் கண்ணுக்குப் புலப்படும் வேளை பௌர்ணமி. இந்த இரண்டுக்கும் மனித மனத்துக்கும் தொடர்புண்டு. மனநோயால் பாதிக்கப்பட்டவர்களை இவை அதிகமாகத் தாக்கும்.*

*பரம்பொருளின் மனதிலிருந்து தோன்றியவன் சந்திரன் என்ற விளக்கம் வேதத்திலுண்டு. மனதுக்கும் சந்திரனுக்கும் தொடர்பு உண்டு. என்று கூறும் ஜோதிடம், தேய்ந்தும்..... வளர்ந்தும் தென்படும் சந்திரனது செயற்பாடு மனதுக்குப் பொருந்தும் என்றும் கூறுகிறது. அதன் மாறுபாடு, மனநிலையைப் பாதிக்கும்.*

*முழு நிலவைப் பார்த்து கடல் ஆர்ப்பரிக்கிறது. உடல் உறுப்புக்கள் முற்றிலும் தளர்ந்துவிட்ட முதியோனுக்கும் முழுநிலவைப் பார்த்தால் மனம் குதூகலிக்கும். அந்த நிலவைப் பார்க்கும் சிறு குழந்தையும் ஆச்சரியத்தில் ஆழ்ந்துவிடுகின்றது. அதைப் பார்த்தவாறே தன்னையும் அறியாமல் அன்னை ஊட்டும் உணவை குழந்தை உட்கொள்கிறது. துன்பமும்- இன்பமும் மனதின் உணர்வு.*

*முழு நிலவு நோயுற்றவனுக்கு துயரத்தையும், மற்றவர்களுக்குக் களிப்பையும் அளிப்பது கண்கூடு. சுற்றுப்புறச் சூழ்நிலைகளில் ஏற்படும் மழை, வெயில், பனி போன்ற மாறுதல்களும் நம்மைப் பாதிக்கின்றன. அதுபோலவே, அமாவாசை மற்றும் பௌர்ணமி நாளில் நம் மனமும் கவரப்படுகிறது. எனவே, இத்தகைய சந்தர்ப்பங்களில் மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நோயின் பாதிப்பு சற்றுத் தூக்கலாக இருப்பது உண்மையே!.*

# பக்தி முத்திக்கு வழி

திரு சு. இலங்கநாயகம் அவர்கள்

இப்பிரபஞ்சம் முழுவதும் ஒரு இயற்கை நியதி அல்லது விதியின்படி இயங்கிக்கொண்டு இருக்கிறது. பல்லாயிரக்கணக்கான கோள்கள் இந்த அண்டவெளியில் சுழன்றுகொண்டு இருக்கின்றன. ஒவ்வொரு காரியத்திற்கும் ஒரு காரணம் உண்டு. பௌதீக விஞ்ஞானமும் இந்தக் காரண-விளைவு (காரியம்) பற்றிய விதிகளைக் குறித்ததேயாகும். இந்தக் கோள்கள் யாவும் ஒரு ஒழுங்குப்பாட்டில் சுழல்வது ஒரு நிகழ்வு அல்லது விளைவு எனப்படும். இவை எப்படிச் சுழல்கின்றன. அதற்கான காரணம் யாது என்று சிந்திக்கும்போது ஏதோ ஒரு மகாசக்தி இவற்றை இயக்குகின்றது. அதுவே இந்த சுழலும் விளைவுக்குக் காரணமாக இருக்கிறது. இந்த மகா சக்தியை நாம் இறைசக்தி-கடவுள் என்கிறோம். பிரபல்ய விஞ்ஞானியான **(Einstein)** "ஐன்ஸ்டீன்" கூட ஒரு குறிப்பிட்ட நிலை வரைக்கும்தான் நான் சிந்தித்தேன். அதற்குப் பிறகு என் சிந்தனை எங்கேயோ தாவுகிறது. பல உண்மைகளை உணர்ந்தாலும் அதற்கு அப்பாலும் பல உண்மைகளை உணர முடியவில்லை" என்கிறார். எனவே, மனித உள்ளம் கடந்த ஒரு சக்தி உண்டு என்று அவரே விளக்குகிறார். இந்த உள்ளம் கடந்த வஸ்து, மகாசக்தி அதுதான் (கட+வுள்) கடவுள் என்று ஒப்புக்கொண்டு விளக்குகிறார்.

இந்த இயற்கை விளைவுடன் (சக்தி) தொடர்புபட்டதுதான் மனிதசக்தி. நாமும் இந்தக் காரண-காரிய (விளைவு) விதிக்கு உட்பட்டே செயற்படுகின்றோம். எமது மனம் எப்போதும் ஏதோ ஒன்றுடன் தொடர்புபட்டுக் கொண்டே இருக்கும். எனவே, எமது சிந்தனையானது நல்லதையும், கெட்டதையும் நினைக்கத்தான் செய்யும். நாம் நல்லதைப் புண்ணியம் என்றும், கெட்டதைப் பாவம் என்றும் சொல்கின்றோம். எமது சிந்தனைக்கேற்ப எமது செயல்களும் (விளைவு) நடைபெறும். எனவே, நாம் செய்யும் நற்செயல்களுக்கு ஏற்ற நல்ல பலனையும், தீய செயல்களுக்கு ஏற்ப கெட்ட பலனையும் அனுபவிக்க நேரிடும்.

நம்மில் பெரும்பாலானவர்கள் நமது கஸ்டங்கள், கவலைகள் தீரும் பொருட்டே கடவுளை வழிபாடு செய்கின்றோம். ஆனால் எமது கர்மத்திற்கான- செயலுக்கான பலனை நாம் அனுபவித்தே தீரவேண்டும் எனவே, எமது கஷ்டங்களைக் கடவுளிடம் நாம் சொல்லும்போது எமது கஸ்டங்கள் அவருக்குத் தெரியாது என்று நாம் நினைப்பதாக ஆகிறது. இறைவன் எல்லாம் அறிபவன். தாய் ஒரு குழந்தைக்கு எது தேவையோ, குழந்தையைக் கேளாது தானாகவே அதற்கு வேண்டியவற்றைத் தாய் செய்கிறாள். மணிவாசகரும் "தாயிற் சிறந்த தயவான தத்துவன்" என்றும், "தாயினும் சாலப் பரிவு உடையவன்" என்று கூறுகிறார். எனவே, நாம் கேட்டுத்தான் நமக்கு அவன் செய்கிறான் என்றால் அவனது பெருங் கருணைத் தத்துவத்திற்கு குறை உண்டாக்கி விடுவதாக முடிகிறது.

நாம் நன்மை தீமைகளை மூன்று வழிகளால் செய்கின்றோம். மனம், வாக்குக், காயம் ஆகிய மூன்றாலும் நாம் பாவ புண்ணிய காரியங்களைச் செய்கின்றோம். "உள்ளத்தால்

உள்ளலும் தீதே பிறன் பொருளைக் கள்ளத் தால் கள்வோம் எனல்" என்கிறார் வள்ளுவர். ஒருவருடைய பொருளை களவு எடுப்போம் என்று மனதால் சிந்திப்பதும் பாவமாகும். வாய் சொல் மூலமும் மற்றவர்களின் மனதைப் புண்படுத்தக்கூடாது. அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் ஆகியன தர்மத் திற்கு முரணானவை. நாவினால் சுட்டபுண் ஆறாது என்கிறார் வள்ளுவர். மனம், வாக்கு, காயம் (உடம்பு) ஆகிய மூன்று கருவிகளா லும் நாம் மற்ற உயிர்களுக்கு கெடுதி செய் யக்கூடாது. மூன்று கருவிகளாலும் நல்ல தையே செய்ய வேண்டும். இதனைத் திரிகரண சுத்தி என்பர். மூன்று கருவிகளும் நல்லதையே செய்ய வேண்டும்.

மக்களிடம் கிரிகைகள் மட்டும் செய் தால் அது பக்தி ஆகிவிடும் என்று ஒரு தவறான எண்ணம் இருக்கிறது. வழிபாட்டை யும் ஒரு கிரிகையாகவே மேற்கொள்கின்றனர். "கையொன்று செய்ய, விழி ஒன்று நாடக், கருத்தொன்று எண்ண, வஞ்சக நாவொன்று பேச, புலால் கமழும் மெய் ஒன்று சார யான் செய்யும் பூசை எவ்வாறு கொள்வாய் பராபரமே என்கிறார் பட்டினத்தடிகள். ஆகவே பக்தி என்பது இறைவனிடம் உளப்பூர்வமாக, மனம் நெக்குருகிச் செலுத்தும் அன்பாகும். அன்பின் வழியது உயிர்நிலை. பக்திவேசம் ஆகிவிடக்கூடாது. மற்றவர்களின் புகழ்ச்சிக்காக நான் பக்திமான் என்று காட்டிக் கொள்ளக் கூடாது. ஒழுக்கம் பக்திக்கு உதவியாகிறது. ஒழுக்கம் உயிரினுமோம்பப்படும். நாம் இறை வனை பூரணமான நம்பிக்கையுடன் வழிபட வேண்டும். "என் செயலால் ஆவது ஒன்று இல்லை. எல்லாம் உன் செயலே" என்று நம்பிப் பூரண சரணாகதி அடைவதே பக்தி யாகும். தனக்கு என்று எதுவுமே இல்லாவிடின் மனசில் அழுக்கு நீங்கிக் கண்ணாடிபோல் சுத்தமாக இருப்பதோடு, மனம் நிறைவாகவும் இருக்கும்.

எனவே, பேரானந்தப் பரம்பொருளைச் சரண் அடைந்து, இடையறா அன்புடன் பக்தி செய்து முத்தி அடையலாம். பல காரணங் களுக்காகப் பக்தி செய்தாலும், முத்தி வேண்டிப் பக்தி செய்வதே எல்லாவற்றிலும் சிறந்ததாகும். முத்தி என்பது விடுபடுவது என் றால் இந்த உலகியல் பந்தபாசங்களிலிருந்து விடுபடுவதாகும். விடுபடுவதையே நாம் "வீடு" என்கிறோம். மீண்டும் பிறந்து இறப்பது என்ற நிலை இல்லாது நித்திய ஆனந்தமான சத்திய நிலையை அடைவதுதான் முத்தி ஆகும். இதனையே மோட்சம் என்றும், வீடுபேறு என் றும் கூறுகிறோம். எனவே உண்மையான பக்தி முத்திக்கு வழிவகுக்கும். காரைக்கால் அம்மை யாரும் பிறவாமை வேண்டும், மீண்டும் பிறப்பு உண்டாகில் உன்னை என்றும் மறவாது இருக்கவேண்டும் என்று கேட்கிறார்.

## ஞானம் புகட்டும்!

கதிர்காமத்தில் வள்ளி மணாள
னாம் முருகன் அவன்
பிதிர்க்கடன் ஏற்க்கும் மாவைக்
கந்தனாய் தீர்த்த மாடுவான்
அதிர்கின்ற நாதம் முழங்கும்
நல்லைக் கந்தனு மவனே
முதிர் பூவரச நிழலில் ஞானம்
புகட்டும் செல்வச் சந்நிதியானே!



-இராம ஜெயபாலன்-

(தொடர்ச்சி...

# அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி

-வாரியார் சுவாமிகள் உரையுடன்-

10. கார்மாமிசை காலன் வரிற்கலபத்
தேர்மாமிசை வந்தெதிரப் படுவாய்
தார்மார்ப வலாரிதலாரி யெனும்
சூர்மா மடியத் தொடு வேலவனே.

**பதவுரை**

தார் மார்ப- மலர்மாலையணிந்த திருமார்பினரே! வலாரி தலாரி எனும்- வலன் என்ற அசுரனையழித்த இந்திரனுடைய நகரமாம் பொன்னுலகையழித்தவனாகிய, சூர் மா மடியதொடு- சூரனாகிய மாமரம் அழிவுபடும்படி செலுத்திய, வேலவனே- வேலாயுதரே! கார் மா மிசை- கரிய எருமையின்மீது, காலன் வரில்- காலன் என்பவன் வருகின்றபோது: கலபத்து ஏர்மா மிசை வந்து- தோகையுடைய அழகிய மயில் வாகனத்தில் எழுந்தருளி வந்து, எதிரப் படுவாய்- அடியேன் எதிரே தரிசனந் தந்தருளுவீராக.

**பொழிப்புரை**

மலர்மாலையணிந்த திருமார்பினரே! வலாசுரனையழித்த இந்திரனுடைய தவத்தையழித்த சூரனாகிய மாமரத்தை யழியுமாறு தொடுத்த வேலாயுதத்தை உடையவரே! அடியேனுடைய உயிரைப் பிரிக்கும் பொருட்டு, கரிய எருமையின்மீது காலன் வரும்போது, தேவரீர் தோகை அழகுடைய மயில்வாகனத்தின்மீது எழுந்தருளி வந்து அடியேன் எதிரில் காட்சி தந்து அருள்புரிவீராக.

**விரிவுரை**

***கார் மாமிசை காலன் வரில்:-***

மனிதனுக்குப்பெரிய பயம் யுமபயமாகும். மரணம் தவிர்க்க முடியாதது. ஆனால் அடியார்க்கு மரணமில்லா பெருவாழ்வு சித்திக்கும். சிறந்த முருகனுடைய அடியார்க்குக் காலபயம் நேராது.

இயமனுடைய வாகனம் கரிய பெரிய எருமை. அது ஆலகாலவிடம் போன்ற கொம்பும், பார்வையில் கொளுத்தும் கொடிய கடிய கண்களும் உடையது.

காலன்- இயமனுடைய அமைச்சன். அறக்கடவுளின் பிரதிநிதி இயமன்.

"........ தருமராசர்க்காய் வந்த
கூற்றினைக் குமைப்பர்போலும் குறுக்கை வீரட்டனாரே"

-அப்பர்

வரில் என்ற சொல்லால் வராது என்பது பொருள். ஒருகால் இயமன் வழி தவறி என்பால் வருவானானால் முருகா! நீ மயிலின்மீது வந்தருள வேணும் என்று முறையிடுகின்றார் அடிகளார்.

***கலபத் தேர் மாமிசை வந்தெதிரப்படுவாய்:-***

கலபத்து ஏர்மாமிசை. கலபமாகிய தோகையினால், ஏர்- அழகுடைய மா- புரவி போன்ற மயில். கலபத் தேர் என்றேயும் பொருள் கொள்ளலாம். கலபத் தேராகிய, மா- மயில்.

"நீலக்ரீவ கலாபத் தேர் விடு நீபச் சேவக"- (சேமக்) -திருப்புகழ்

"அன்னத் தேர் ஏறி அயன் வலப்பால்.... போத"

-கைலாய ஞானவுலா

"அன்னத் தேர் அயன்முடிசேர் அடிகள் போலும்" -அப்பர்.

கூற்றுவன் வரும்போது குமரவேல் மயிலின்மீது ஆட்கொள்ளுமாறு அடிகளார் திருப்புகழிலும் வேண்டுதல் புரிகின்றார்.

"..........பகடது முதுகினில் யமராஜன்
அஞ்சவே வரும் அவதர மதிலொரு
தஞ்சமாகிய வழிவழி யருள்பெறும்
அன்பினாலுன தடிபுகழ் அடிமையென் எதிரேநீ
அண்டகோளகை வெடிபட இடிபட
எண்டி சாமுக மடமட நடமிடும்
அந்தமோகர மயிலினில் இயலுடன் வரவேணும்"

-(பஞ்சபாதக) திருப்புகழ்

"கூற்றுவன் பாசத்தினால்
பிடிக்கும் பொழுது வந்தஞ்சலென்பாய்,"

-கந்தரலங்காரம் (50)

"மாகத்தை முட்டி வருநெடுங் கூற்றன் வந்தால் என்முன்னே
தோகைப் புரவியில் தோன்றி நிற்பாய்"

-கந்தரலங்காரம் (80)

காலம் அறிந்து வருவதனால் காலன் எனப்பட்டான்.

***தார்மார்ப:-***

கடப்பமலர், வெட்சிமலர் முதலிய மலர் மாலைகள் முருகப்பெருமானுக்கு உகந்தவை.

***வளாரி:-***

வலன் என்ற அசுரன் பேராற்றல் படைத்தவன். இவன் சிவபூசை செய்து, தான் இறந்தால் தன்னுடல் நவமணிகள் ஆகவேண்டும் என்று வரம் பெற்றான்.

இந்திரன் இவனுடன் போர்புரிந்து தோல்வி அடைந்தான். வலனைப் பார்த்து இந்திரன், "உனக்கு வரந்தருகின்றேன் கேள்" என்றான்.

வலன் சிரித்து, "தோல்வியுற்ற நீ எனக்கு வரந்தருவதா? உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்- நான் தருகிறேன்" என்றான்.

இந்திரன் யாகப் பசுவாகுமாறு வரம் இரந்தான். அதுபடியே வலன் யாகப் பசுவாக வந்தான். அவனை இந்திரன் கொன்றான். முன்பு பெற்றிருந்த வரத்தின்படி வலாசுரனுடைய உடல் விலையுயர்ந்த நவரத்தினங்கள் ஆயின.

உதிரம் -மாணிக்கமாயிற்று
பற்கள் -முத்துக்கள் ஆயின
மயிர்கள் -வைடூரியம் ஆயின
எலும்புகள் -வைரம் ஆயின
பித்தம் -மரகதம் ஆயிற்று
நிணம் -கோமேதகம் ஆயிற்று
தசைகள் -பவளம் ஆயின
கண்கள் -நீலம் ஆயின
கபம் -புஷ்பராகம் ஆயிற்று.

அத்தகைய ஆவின் சோரி மாணிக்க மாம்பல் முத்தம்
பித்தவை டூரியம் என்பு வச்சிரம் பித்தம் பச்சை
நெய்த்த வெண் நிணங்கோ மேதகம் தசைதுகிர் நெடுங்கண் நீலம்
எய்த்தவை புருட ராகம் இவைநவ மணியின் தோற்றம்

-திருவிளையாடற் புராணம்

***தகாரி:-***

வலனையழித்த இந்திரனுடைய தலமாகிய பொன்னுலகைப் பானுகோபனை ஏவி அழித்தவன் சூரபன்மன். வலாரி தலாரி என்ற சொற்றிறம் அழகியது. இரண்டும் வடமொழி தீர்க்க சந்தி.

***சூர்மா மடியத் தொடு வேலவனே:-***

சூரபன்மன் உறுதி குலைந்து இறுதியில் கடல் நடுவே ஆயிரத்தெட்டண்டங்களிலும் நிழல் படுமாறு இரும்புமயமான மாமரமாய் நின்று உலகங்களைத் துன்புறுத்தினான்.

முருகவேள் வேலாயுதத்தால் அம் மாமரத்தைப் பிளந்து எறிந்தார்.

விடம்பிடித் தமலன் செங்கண் வெங்கனல் உறுத்திப் பாணி
இடம்பிடித் திட்ட தீயில் தோய்த்துமுன் இயற்றி யன்ன
உடம்பிடித் தெய்வம் இவ்வா றுருகெழு செலவின் ஏகி
மடம்பிடித் திட்ட வெஞ்சூர் மாமுதல் தடிந்த தன்றே.

-கந்தபுராணம்.

ஆயிரத்தெட்டு அண்டங்களையும் ஆண்ட சூரனை அழித்த முருகா! அந்த இயமனையடக்கி என்னை ஆட்கொள் என்பது குறிப்பு.

***கருத்துரை***

சூரபன்மனை வென்ற வேலவரே! காலன் வரும் காலம், கோலமயிலின்மீது வந்து காத்தருள்.

(தொடரும்....

## தை, மாசி மாத குருபூசை தினங்கள் 2012

| | | | |
|---|---|---|---|
| 18.01.2012 | தை04 | புதன் | தாயுமானவ சுவாமிகள் குருபூசை |
| 22.01.2012 | தை 08 | ஞாயிறு | நயினாதீவு முத்துக்குமாரசாமி குருபூசை |
| 10.02.2012 | தை 27 | வெள்ளி | சண்டேசுவரர் குருபூசை |

# யார் இந்த பாபா சாமியார்?

இரா. அருட்செல்வம் அவர்கள்

பருத்த உறுதியான உடற்கட்டமைப்பு. பகவான் சாயிபாபா போன்ற அடர்ந்த சடை. அதிகமாக சாரம், சிலசமயங்களில் வேட்டி அணிந்துகொண்டு தனக்காக வாழாமல் ஆத்மீகத் தொண்டுகளில் குறிப்பாக சந்நிதியான் ஆச்சிரமத்தில் அன்னப்பணியோடு சமயப்பணிக்காகவும் அருந்தொண்டு ஆற்றிவரும் இந்த பாபா சாமியாரை அறியாதவர்கள் யாழ்ப்பாண மண்ணில் எவரும் இருக்கமுடியாது. இந்த பாபா சாமியாரைப்பற்றி அவர் பிறந்து வளர்ந்த ஊரில் வசிப்பவன் என்ற வகையிலும் சிறுபராயத்திலிருந்து அவரோடு சேர்ந்து பழகியவன் என்ற வகையிலும் இன்றுவரை அவரோடு சேர்ந்து நெருக்கமான ஆத்மீகப் பற்றுக்கொண்ட அடியேன் அவரது நாமத்தையே கொண்டிருக்கின்றேன். இந்த பாபா சாமியார் இணுவை மண்ணில் பொன்னுத்துரை அசுவது அம்மையாரின் இளைய புத்திரன் ஆவார். சிறுவயதிலிருந்தே விளையாடும்போதுகூட கோயில் கட்டுவது, தேரிழுப்பது, மகோற்சவங்கள் நடாத்துவது போன்றவற்றை விளையாட்டாக ஏனைய சிறுவர்களோடு சேர்ந்து நடத்துவது போன்ற ஆத்மீகப் பற்றை இளவயதிலேயே கொண்டிருந்ததை நான் அறிவேன். அவர் பாடசாலையில் படித்த காலங்களில்கூட இணுவில் கிழுவைக்கட்டை வைரவர் தேவஸ்தானத்தில் பற்றுக்கொண்டு வைரவருக்கு நீர் அபிஷேகம் செய்வது பூசை செய்வது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடத்தொடங்கி பின்னர் தனது பணியை மலர்மாலை சேகரிப்பது, பூக்கள் சேகரிப்பது போன்ற செயலை செய்துவருங்கால் சந்நிதியான் ஆச்சிரமத்தோடு தொடர்பு கொண்டார். அதன்பின்னர் அவரது பணி வளரத் தொடங்கியது. இணுவில் அயலூர் அடியவர்களிடம் பூக்கள், மாலைகள் சேகரித்து சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு அனுப்புவார். அன்னதானப்பணிக்குப் பொருட்கள் சேகரித்து வாகனங்களில் கொண்டுபோய் கொடுப்பது என சந்நிதியான் ஆச்சிரமப் பணிக்குத் தானும் ஒரு அடியவனாகப் பணிபுரிந்தார். அத்தோடு அடியவர்களின் மனக்குறைகளைக் கேட்டு அதற்குப் பரிகாரங்கள் செய்வது ஆலய வழிபாடுகளை ஊக்குவிப்பது போன்ற பணிகள் இன்றுவரை இவரால் செய்யப்படும் கடமைகள் ஆகும்.




ஆடம்பரங்களை விரும்பாத தோற்றம், பற்றில்லாத வாழ்க்கைமுறை, பழமையான துவிச்சக்கர வண்டியில் பூக்கள், மாலைகள் கைகளில் தொங்க காலைவேளையில் வீதியால் செல்லும் காட்சி ஆகியவை நடமாடும் ஒரு சித்தரைப் போல இவரை எல்லோரும் நோக்கும் நிலையை ஏற்படுத்தியது. திடீரென ஏற்படும் கோபமும் உடனடியாக ஏற்படும் சாந்த குணமும் இவரது ஆத்மீகநிலையின் ஆரம்பத்தை எடுத்துரைப்பதாக உள்ளது. "முத்தத்து

மல்லிகை மூக்கிற்கு மணப்பதில்லை" என்பதுபோல் எமது இணுவை மண்ணில் பாபா சாமியாரைப் பற்றி அறியாத பலர் இருந்தாலும் அயலூர்களிலும் தூர இடங்களிலிருந்தும் அவரைத் தேடி வருபவர்களைப் பார்க்கும் போது அவரது ஆத்மீகப் பணி எவ்வாறு பரிணமித்துள்ளது என்பது புலனாகும். இன்றும் கிழுவைக்கட்டை வைரவர் தேவஸ்தானத்தில் மூன்றுகாலப் பூசையை மேற்கொண்டு தனது பணியை செய்வதோடு வெள்ளிதோறும் மற்றும் விஷேட தினங்களிலும் சந்நிதியானைத் தரிசித்து ஆச்சிரமப் பணியில் ஈடுபடுவதை நிறுத்துவதுமில்லை.

இவரது பணி இன்று தொடர்ந்து கொண்டு இருப்பதை நாம் காண்கின்றோம்.

---



ச
தான தருமங்கள் நித்தமும் சுரக்கும்
ஆன சந்நிதியே அறமென்றறி.

ந்
நீளவே நினைந்து, நேரிய வெற்றி பெற
நாளைய சந்ததிக்கு நல்லதோர் சந்நிதி.

நி
வேளையறிந்து நீ வேலைத் தொழுது வரின்,
நாளை வரமாவாய் சந்நிதியில்.

தி
உன்னை நீ உணர்ந்து செயற்படுவாயானால்
தன்னையே தருவான் சந்நிதியான்.

யே
அச்சமென்று ஒன்றுஇன்றி அமைதியோடு வாழ
உச்சமோடுனைக் காப்பான் சந்நிதியான்.

அ
வல்லவொரு அறிஞனாக வர நீ விரும்பினால்
வந்து சந்நிதியில் விழுந்து கும்பிடு.

ற
பட்டங்களும் வேண்டாம், பதவியும் வேண்டாம்
பெட்டகமாய் சந்நிதி இருக்கையில்!

மெ
மக்களுக்காகவே தரப்பட்டது உலகம் – அதை
மாண்புற உரைவைப்பது சந்நிதியே.

ன்
எதேச்சாதிகாரமும், முகாமையும் இறைவனுக்கில்லை

ற
அதையே சந்நிதியும் தருகிறது.
ஆடம்பரம், அழகு, ஆபரணம் அத்தனையும்

றி
நாடாத நல்லபதி சந்நிதி.

தே.எஸ். சிவஞானராஜா

# திறமைக்கு ஏற்ற உயரம்....

**சத்குரு ஜக்கி வாசுதேவ்** அவர்கள்

இந்தச் சமூகத்தில் நீங்கள் எப்படி வளர்ந்தீர்கள்? பெற்றோர், ஆசிரியர்கள், நண்பர்கள், உறவினர்கள் எல்லோரும் உங்களுக்கு நல்லது செய்வதாக நினைத்து என்ன செய்தார்கள்?

சுற்றியுள்ளவர்கள் யாருடனாவது ஒப்பிட்டு உங்களை எப்போதுமே குறைத்து மதிப்பிட்டே வந்திருக்கிறார்கள். ஏன்? இன்னொருத்தரைவிடத் தாழ்வாக உணர்ந்தால்தான் உங்களுக்குள் ஓர் உந்து சக்தி பிறக்கும் என்றும், அது வெற்றியைநோக்கி உங்களை விரட்டிச் செலுத்தும் என்றும் அவர்கள் கருதினார்கள்.



உங்களைச் சிறப்பாகப் பரிமளிக்கச் செய்ய, வேறு வழிமுறைகளை அவர்கள் அறிந்திருக்கவில்லை. ஒரு கட்டத்தில் அப்படி ஒப்பிடுவதை அவர்கள் நிறுத்தி விடுகிறார்கள். ஆனால், மற்றவருடன் ஒப்பிட்டுக்கொண்டு உங்களை விரட்டிச் செல்லும் பழக்கத்தை உங்களால் தவிர்க்க முடியாமல் சிக்கிக் கொண்டீர்கள்.

ஒரு தடவை சங்கரன்பிள்ளை, தன் மனைவியிடம் பெரிதாகச் சண்டை போட்டார். முடிவில் கோபித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறிவிட்டார். மூன்று நாட்களுக்கு இங்கும் அங்குமாக அலைந்தார். நான்காவது நாள் காலையில் ஒரு உணவு விடுதிக்குள் நுழைந்தார். சப்ளையரை அழைத்தார்.

"கல்லுப்போன்ற சூடில்லாத இட்லி, வாயில் வைக்கமுடியாத சாம்பார், தண்ணீர்ப் பாலில் பழைய டிகாக்ஷன் போட்டு ஆறிப்போன காபி" என்று ஆர் கொடுத்தார். "என்ன கேவலமான ஆர் இது?"

"நண்பரே, நான் பசியால் இங்கு வரவில்லை. எனக்கு வீட்டு ஞாபகம் வந்துவிட்டது" என்றார் சங்கரன்பிள்ளை.


இப்படித்தான் பழைய பழக்கத்தைச் சுலபத்தில் விடமுடியாமல் நீங்களும் அவதிப்படுகின்றீர்கள். மற்றவரை உயர்வாக நினைத்து அவரையே இலக்காகத் தீர்மானித்துக் கொள்கிறீர்கள். உங்களுக்குள் சவால் விட்டுக்கொள்கிறீர்கள். இல்லாத சிறகுகளைக் கட்டிக்கொண்டு படபடக்கிறீர்கள்.

அவரைவிட உயர்ந்த இடத்தை அடைய போராடிப்போராடி சென்றடைவீர்கள். அதற்குள் வேறொருத்தர் இன்னும் முன்னே போய்நின்று, அங்கிருந்து பழிப்புக் காட்டுவர். உங்களை அங்கே விரட்டிச் செல்ல அடுத்த சாட்டையைக் கையில் எடுத்துக்கொள்வீர்கள். இது எப்படியிருக்கிறது தெரியுமா?

ஒரு இலாஸ்டிக் பட்டையை இருபுறமும் இழுத்துப்பிடித்தால், அந்த டென்ஷன் தாங்காமல்

இருமுனைகளும் ஒன்றையொன்று எட்டிவிடவேண்டும் என்று துடிக்கும். கையை எடுத்ததும் முனைகள் உந்தப்பட்டு ஒன்றுடன் ஒன்று மோதும். அப்புறம்?

இருமுனைகளும் செயலற்றுக்கிடக்கும். மறுபடி இழுத்துப்பிடித்தால்த்தான் அதில் துடிப்பான இயக்கத்தைக் காண முடியும். இப்படி வெளிச்சக்தியால் உந்தப்பட்டு இலக்கில் போய் விழுந்தால், அடுத்து என்ன செய்வது என்று புரியாமல் விழிப்பீர்கள். அடுத்த இலக்கைக்காட்டி உங்களை உசிப்பினால்தான் மீண்டும் இயங்கு வீர்கள்.



இழுக்கப்பட்ட இலாஸ்டிக் எத்தனை நாளைக்குத் தாக்குப்பிடிக்கும், ஒரு கட்டத்தில் தலை தொய்ந்து அதன் தன்மையை இழக்கும். பிறகு, லேசாக இழுத்ததுமே பொட்டென்று அறுந்தே போகும். உறுதியில்லாத சிலர் இப்படித் தான் டென்ஷன் தாங்காமல், தங்கள் இலக்கை எட்டுவதற்குப் பதிலாக, இதயத்தைப் பிடித்துக் கொண்டு மருத்துவமனையில் போய் விழு கிறார்கள்.

வாழ்க்கைபூராகவும் உங்களை ஏன் வேறு யாரோ செலுத்த வேண்டும்? அடுத்தவரிடம் அதிகாரத்தை நீங்கள் ஏன் ஒப்படைக்கவேண்டும்? உங்களுக்கு மலையேற வேண்டும் என்று ஆசை இருந்தால், மலையேறும் திறமையை வளர்த்துக்கொள்ளவேண்டும். போதிய சக்தியை கால்களுக்குக் கொண்டுவர வேண்டும். அதைவிடுத்து இன்னொருத்தரைக் காட்டி சும்மா மனதை விரட்டிக்கொண்டிருந்தால் போதுமா? அதுவே உங்களை மலை உச்சியில் கொண்டுபோய் விட்டுவிடுமா?

உங்களால் எப்போது சிறப்பாகச் செயலாற்றமுடியும்? மற்றவருடன் ஒப்பிட்டுப்பார்த்து ஓடிக்கொண்டே இருக்கும்போதா? விழிப்புணர்வுடன் அமர்ந்து திட்டமிடும்போதா? அமைதியாக, விழிப்புணர்வுடன் செயல்படுவது என்பது உங்கள் ஆசைக்கு குறுக்கே எழுப்பப்படும் வேகத்தடை அல்ல. உங்கள் வளர்ச்சிக்கு எதிராக விதிக்கப்படும் தடை உத்தரவும் அல்ல. அது உங்களை விடுவித்து விரும்பிய திசையில் சுதந்திரமாகச் செயற்பட அனுமதிக்கும் சக்தி.

ஆனந்தமாக இருப்பதுதான் உங்கள் அடிப்படை இயல்பு என்பதை மறவாதிருங்கள். யாராலும் விரட்டப்படாமல் அமைதியாக இருங்கள். தேர்ந்தெடுத்த செயலில் விழிப்புணர்வுடன் தீவிரமாயிருங்கள். முழு ஈடுபாட்டுடன் செயலாற்றுங்கள்.

அப்போதுதான், வளர்ச்சியை நோக்கி அழைத்துச் செல்லும் உள் சக்தியை உங்களுக்குள்ளேயே அடையாளம் காண்பீர்கள். அந்த உள்சக்தி மட்டுமே உங்களைச் செலுத்தும் சக்தியாக இருக்கட்டும்.

இன்னொருவர் சென்று சேர்ந்த அதே உச்சியை நீங்கள் அடையமுடியாமல் போகலாம். ஆனால், உங்கள் திறமைக்கு ஏற்ற உயரத்தை அடைந்திருப்பீர்கள். அது உங்களுக்கு உண்மையான மகிழ்ச்சி தரும்.

தொடர்ச்சி...

# பரிபாடல் பகரும் பழுத்த பத்திப் பிரார்த்தனை-7

திரு சிவ. சண்முகவடிவேல் அவர்கள்

பரிபாடல் நாலாம் பாடல் திருமாலைப் பாடுவது. அது கடவுள் வாழ்த்து. பாடியவர் கடுவனிளவெயினார். இசை: பெட்டனாகனார். பண்ணுப் பாலையாழ்.

"செவி முதலிய ஐம்பொறிகளால் உண்டாகும் மயக்க இருளைக் களைந்து உள்ளத்தை மைத்திரி முதலிய நான்கின் பயிற்சியால் தூய்மை செய்து தம்மைச் சமாதி நெறியில் செலுத்திய நின்னுடைய அன்பர் நின்னைத் தொழுது போற்றி நின்னுடைய புகழைப் புகன்றார். அப்புகழ் நினக்கு இயல்பானது. அல்லது வியக்கப்படுவன அல்லாமையை எளியேங்கள் நன்கு அறிந்துளேம். அறிந்தும் உரைக்கும் தகுதி இல்லாத யாங்களும் இங்கும் உங்குமாகச் சிலவற்றைக் கூறக் கருதுதல் எமது அறியாமை கண்டு நீ சற்றுச் சிரித்தலும் கூடும். அந்நகைப்பைப் பெறுவதும் எமக்கு ஒரு தகுதியேயாகும். ஆதலால் எளியேங்கள் நாணத்தினால் நின்னைப் புகழ்வதை மறவோம்.

"நீல மணியும் கடலும் சூழ் முகிலும் போலும் திருமேனி உடையாய்! கருமைக்கு மாறுபட்ட பொன்னாடை புனைவாய்! பகைவர் உயிர்க்கு எதிரான நேமியை உடையாய்! செங்கண்ணினாய்! பிரகலாதன் நினைப் புகழ அது பொறாது புகைந்த நெஞ்சோடும் புலர்ந்த சாந்தோடும் இரணியன் அப்பிரகலாதனைப் பிணித்தபோது அப் பிணிப்பால் துன்புற்று நடுங்கும் புகழுடைய பிரகலாதன் தன்னை இகழ்வோன் தன் தந்தையாதலின் தான் இகழாது நின்றான்.

"நீ அவ்விரணியனை இகழ்ந்து நின்னிடத்தில் அன்பு செய்யும் பிரகலாதன் வருந்தாமல் அவன் நன்னெஞ்சில் உறைந்து வரங்கொண்ட இரணியனுடைய மலை நிகர்த்த மார்பில் பாய்ந்தாய்!

"இரணியனுடைய இடியொத்த முரசு இடிக்க தூணின் பிளப்பிலிருந்து வெளிப்பட்டாய்!

"நின்னால் பிளக்கப்பட்ட இரணியனுடைய தசைகள் சிதறி விழுந்தன. வகிர் வாய்த்த நகத்தினை உடையாய்!!

"முன்னாளில் இப்பூமி வெள்ளத்தில் அழுந்தியவேளை நீ பன்றியாகிப் பழுவில் தாங்கினாய். இவ்வுலகத்தை கொணர்ந்து வைத்தசெயல் நிலத்தின் நடுவே நின்று அதனைத் தாங்கிய செய்கை உயர்ந்த பலராலும் உரைக்கப்படும் மேருவின் செயல் ஒக்கும்.

"புருவத்துக் கருவில் கந்தத்தால்
தாங்கியிவ் வுலகந் தந்தடிப் படுத்ததை நடுவன்
ஓங்கிய பார்புகழ் குன்றினொ டொக்கும்"

-பாட்டெண் வரி- 22-24-

"நின்னுடைய அழிப்பும் விளக்கமும் ஆதித்த மண்டிலத்துள-. அருளும் மென்மையும் சந்திர மண்டிலத்துள- திருவருட் பெருக்கும் கொடையும் முகலிடத்துள! தரித்தலும் பொறுத்தலும் நிலத்துள! மணமும் ஒளியும் காயம் பூவிடத்துள! வெளிப்பாடும் பெருமையும் கடலில் காணலாம். உருவமும் மொழியும் விண்ணில் வெளிச்சம் பிறப்பும் மறைவும் காற்றில் காணலாம்.

"ஆதலின் சுட்டிறந்து நின்ற ஏனைப் பொருள்களும் எல்லாம் நின்னிடத்திருந்து பின்னும் நின்னையே தழுவி உள்ளன.

"நின் வெம்மையும் விளக்கமு ஞாயிற்றுள
நின் தண்மையும் சாயலும் திங்களுள
நின் கரத்தலும் வண்மையு மாரியுள
நின் புரத்தலு நோன்மையு ஞாலத்துள
நின்நாற்றமு மொண்மைற பூவையுள
நின் தோற்றமும் அகலமு நீரினுள
நின் உருவமும் ஒலியும் ஆகாயத்துள
நின் வருதலும் ஒடுக்கமு மருத்தினுள
அதனால், இவ்வு முவ்வு மவ்வும் பிறவும்
ஏமமார்ந்த நிற்பிரிந்து
மேவல் சான்றன வெல்லாம்.

(பாட்டு வரி எண்- 25-35)

"கருடச் சேவல் உயர்த்த கொடியுடையோனே! சேவல் கொடியுடை நினது உயர்ந்த கொடியினுள் ஒன்று பனைக்கொடி! ஒன்று கலப்பைக் கொடி! ஒன்று யானைக்கொடி! உனக்கு கொடிபல உளவேனும் சிறப்பாக உயர்ந்த கொடியை ஏனைக்கொடி ஒத்ததில்லை.

"அது எதனால் எனின் அச்சிறப்புக்கொடி நஞ்சுடை பாம்பின் உடலையும் உயிரையும் உண்ணும் கருடனாதலினால்!!

"அக்கருடன் வயிற்றின் மேல் கட்டப்பட்ட பட்டிகையும் அரவம்! கையில் அணிந்த தொடியும் அரவம்! திருவடிமேற் சுற்றப்பட்ட கண்ணிகளும் பாம்புகள். அணிகலன்கள் எல்லாம் அரவங்கள். தலையில்மேல் அணியப்படும் சூட்டும் பாம்பு. சிறகிடத்து அணிவதும் பாம்பு.

"பகைவலி கொடுத்தோனே! பொன்னிற முடையோய்! கொடியிலிருந்து கருடன் எறிந்து எடுக்கும் இரையும் பாம்பு.

"சேவலோங் குயர்கொடி யோயே
சேவலோங் குயர்கொடி
"நின்னொன் றுயர்கொடி பனை
நின்னொன் றுயர்கொடி நாஞ்சில்
நின்றொன் றுயர்கொடி யானை
நின் ஒன்றா உயர்கொடி ஒன்றின்று
விடமுடை யரவினுடல் உயிருருங் குவணம்
அவன், முடிமேல் வலந்தது பாம்பு
பாம்பு தொடி பாம்பு முடிமேலன
பாம்பு பூண் பாம்பு தலை மேலது
பாம்பு சிறை தலையன
பாம்பு படிமதஞ் சாய்த்தோய் பசும் பூணவை
கொடிமே லிருந்தவன் தாக்கிரை யதுபாம்பு

(பாட்டுவரி எண்- 36-48)

(வளரும்....

# குரு உபதேசம்

S.S. ரவீந்திரன் அவர்கள்

ஒவ்வொருவருடைய வாழ்விலும் உபதேசம் என்பது இல்லாததொன்றல்ல. கடவுள், நாயன்மார்கள், முனிவர்கள், ரிஷிகள், ஞானிகள், யோகிகள், தாய், தந்தை, ஆசான், அயலவர், வயோதிபர், உறவினர், மூத்தவர், சிறியவர்கள், பிள்ளைகள் என எல்லோருக்கும் குருவாக அமர்ந்து உபதேசித்தவர்களாவர். தந்தை சிவனாருக்கு மகன் முருகப்பெருமான் குரு. முனிவர் அகத்தியருக்கும், ஔவைப் பிராட்டியாருக்கும் சிறுவன் முருகப்பெருமான் குரு. நாயனார் மாணிக்கவாசகருக்கு சிவனார் குரு. சனகாதி முனிவர்களுக்கு சிவனார் குரு. கதிர்காமருக்கு கதிர்வேலவர் குரு. தம்பி திருநாவுக்கரசருக்கு அக்கா திலகவதியார் குரு என்று கூறிக்கொண்டே போகலாம். ஆகவே குரு என்பவர் எவ்வாறாயினும் அமையலாம். எறும்புகளின் சேமிப்புத் தன்மையும், சுறுசுறுப்புத் தன்மையும், காகத்தின் சேர்ந்து உண்ணும் ஒற்றுமையும், பசுக்களில் ஈகைத் தன்மையும் பல்வகைப் பயன்தரும் மரங்களின் தன்நலமற்ற தன்மையும் மனித வாழ்வினைப் பக்குவப்படுத்துவதால் அவைகள் எமக்குக் குருவாக அமைகின்றன. ஆகவே குரு என்பவர் முறையாக சாஸ்திர நூல்களைக் கற்றறிந்து சிறந்த பண்டிதராக மகானாக இருக்கவேண்டும் என்பதில்லை. ஒருவருடைய வாழ்க்கையில் திருப்புமுனையை ஏற்படுத்தி அவரை நல்வழிப் படுத்தி இறையருள் பெறக்காரணமாயிருக்கும் எவரதும் உபதேசம் "குரு உபதேசம்" ஆகிறது. அவரே குருவாகவும் அமைகிறார்.

பட்டினத்தடிகளின் வாழ்வில் சிவனார் மகனாகப் பிறந்து உபதேசம் செய்தார். அவர் செய்த உபதேசம் "காதற்ற ஊசியும் கடை வழிக்கு வாராது". இந்த ஒரு வார்த்தையின் மதிப்புத்தான் என்னே?

காவிரிப்பூம் பட்டினத்திலே மிகப்பெரிய கோடீஸ்வரராக வாழ்ந்தவர் பட்டினத்தடிகள். அவர் உண்பதற்கு தங்கத்தட்டு, வீடோ பெரிய மாடமாளிகை, அவருக்குப் பணிவிடை செய்ய பல உதவியாட்கள் என்று அளவில்லாத கோடீஸ்வரராக வாழ்ந்தார். அவ்வூர் அரசனைக் காட்டிலும் சொத்துக்களை உடையவர். மகனாக உதித்த சிவனார் "காதற்ற ஊசி" என்னும் பதத்தால் பக்குவமடைந்ததால் அக்கணமே தனது சொத்துக்கள் யாவற்றையும் துறந்து துறவியாகி இறை தியானம் செய்வதற்காக கோயிலுக்கு சென்றுவிட்டார். உபதேசம் என்பதன் சக்திதான் எவ்வளவு?

தொடர்ந்து அவர் இறைதியானத்திலே நாட்கணக்கில் மூழ்கியிருப்பார். தியானம் நிறைவடைந்ததும் வீடு வீடாகச் சென்று பிச்சை எடுத்து உண்பார். பிச்சை எடுப்பது முனிவர்கள், துறவிகள் தர்மம் ஆகும். மற்றவர்களிடம் நாம் ஒரு பொருளை இரக்கும் போது கூனிக்குறுகி நிற்கிறோம். அடிகளோ கோடீஸ்வரர். அவர் ஒருவேளை உணவிற்காக வீடு வீடாக இரப்பது எவ்வளவு உன்னதமான விடயம். அவருடைய அகந்தை, பற்றுக்கள் யாவும் அழிவுற்ற நிலையையே எமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

இவ்வாறு ஒருநாள் பட்டினத்தடிகள் தியானம் விட்டெழும்போது இரவாகிவிட்டது. அவருக்குப் பசி. இரவு நேரத்தில் யார்தான் விழித்திருப்பார்கள்? அவர் தெருவழியே செல்லும்போது ஒரு மூர்க்கன் வீட்டின் முன் நின்று உணவு கேட்டார். அக்கயவன் சுவாமிகளின் அருமையை உணராதவனாய், தடி கொண்டு சுவாமிகளை நையப்புடைத்து

விட்டான். அக்கயவன்மூலம் அவருக்கு ஒரு உபதேசம் கிடைத்தது. அன்றுமுதல் "இனி மேல் பசித்தாலும் வீடு சென்று பிச்சை கேட்கேன். இருக்கும் இடம் வந்தால் மட்டும் உண்பேன்" என்று சபதம் ஏற்றார் சுவாமிகள்.

மேலும் ஒருநாள், பட்டினத்தடிகள் ஒரு வயலில் வெறும் நிலத்தில் வரப்பில் தலை வைத்துப் படுத்திருந்தார். அவ்வழியால் நீர் எடுக்கச் சென்ற இரு பெண்களில் ஒருத்தி மற்றவளிடம் சொன்னாள் "பார்த்தாயா, எவ்வளவு பெரிய துறவி, எல்லாவற்றையும் துறந்து நிலத்தில் படுத்திருக்கிறார்" என்று. அதற்கு மற்றவள் எல்லாவற்றையும் துறந்து விட்டார். ஆனால் தலையணையைத் துறக்க வில்லை" என்றாள். அதைக்கேட்ட அடிகளார் தான் முழுமையாகத் துறவறத்தை மேற்கொள்ளவில்லை என்று கவலையடைந்து சமநிலத்தில் படுத்திருந்தார். நீர் எடுத்துக் கொண்டு வந்த அப்பெண்கள் மீண்டும் தம்முள்ளே உரையாடினார்கள். "பார்த்தாயா, இப்போது அவர் தலையணையைத் துறந்து விட்டார், அவர் சிறந்த துறவிதானே" என்றாள். அதற்கு முன்னவள் "இல்லை, அவர் பிறரின் கதைகளுக்கு காது கொடுப்பதை இன்னும் விடவில்லை" என்றாள். பட்டினத்தடிகள் பெரிதும் துக்கமடைந்தார். பின் கலைமகளே இப்பெண்கள் உருவில் வந்து தமக்கு உபதேசித்தார் என்று உவகை அடைந்து அன்று முதல் மிக உன்னதமான துறவை மேற்கொண்டு சிவசமாதி அடைந்தார்.

இவ்வாறே ஒவ்வொரு நாயன்மார்களும், முனிவர்களும், அடியார்களும் யார் மூலம் என்று நோக்காமல் உபதேசத்தை மட்டும் மனதில் நிறுத்தி இறையருள் பெற்றார்கள்.

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்ற திருக்குறளிலிருந்து நல்ல உபதேசங்களை எமது மனதில் நிலைநிறுத்தி இறைவழி தொடர சந்நிதி முருகனை வேண்டுகின்றேன்.

## சந்நிதி வேலனே துணைபுரி

அன்னப் பணியுடன் அறநெறிப் பணிகளும்
அத்துடன் சிறந்த மருத்துவப் பணியும்
இன்னும் எத்தனை அறப்பணி என்று
இனிதே நடத்தும் மோகன சுவாமிகள்
என்ன மனிதர் இவர்தான் பாரும்
எண்ணுதற் அரியவர் என்றே கூறும்
சொன்ன பணிகள் சொல்லாப் பணிகள்
தொடரச் சந்நிதி வேலவனே துணைபுரி

-கவிஞர் வ. யோகானந்தசிவம்-


# ஸ்ரீ ரமண நினைவலைகள்

தொடர்ச்சி...

## 3. கருணை ரமணன்

கல்லூரியில் மாணவனாக இருந்த இளம் பருவத்திலேயே பகவானைத் தஞ்சமடைந்தவர் விசுவநாதசுவாமி. புகலிடம் அளித்ததுடன் அவருடைய ஆன்மீக முன்னேற்றத்தின் பொறுப்பையும் பகவான் ஏற்றுக்கொண்டார். இத்தகைய அருள் வேறு யாருக்கேனும் கிட்டியதா என்பது தெரியவில்லை.

ஸ்ரீமத் ரமண வைபவத்தில் விசுவநாத சுவாமிக்கு ஒரு சிறந்த இடமுண்டு. இள வயதிலேயே திண்டுக்கல்லில் பெற்றோர் உற்றாரிடமிருந்து ஓடிவந்துவிட்ட அன்று முதலே பகவானின் அன்பும் பாதுகாப்பும் அருளும் பெற்ற பாக்கியசாலி இவர். இன்ன இடத்தில் இன்ன நேரத்தில் குறிப்பிட்ட சாதனை செய்யவேண்டும் என்று பகவான் இவரிடம் சொல்வார். சில சமயம் அங்கு சென்று சோதிப்பது போல் அவரைச் சாதனையில் ஊக்குவிப்பதும் உண்டு. சிக்கலற்ற இந்த வாழ்க்கை முறையை எனக்குக் காண்பித்ததற்காகவும், அதில் சேர்த்து விட்டதற்காகவும் பகவானுக்கு நன்றி செலுத்த நான் என்றும் கடமைப்பட்டுள்ளேன் என்று விசுவநாத சுவாமி என்னிடம் ஒரு சமயம் குறிப்பிட்டார். பகவானிடம் தன்னை முழுவதுமாக ஒப்படைத்த அவர், அதன் பலனாக தெய்வீக அன்பைப் பெற்றார். தன் தெளிந்த எழுத்துக்களால் “Talks With Sri Ramana Maharshi” என்ற நூலை “ஸ்ரீ பகவத் வசனாம்ருதம்” என்று தமிழில் மொழி பெயர்த்தும், சாதகர்களுக்கு வழி காண்பித்தும் இன்னும் அநேக விதங்களில் பகவானின் போதனைகளைப் பரவச் செய்தார்.



விசுவநாத சுவாமியிடம் அனேக் வருடங்கள் நெருங்கிப் பழகும் அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதிலும் “மௌண்டன் பாத்” பத்திரிகையின் ஆசிரியராக அவர் பொறுப்பேற்ற பின்பு அவருடன் பழக்கம் மேலும் நெருக்கமாகியது. எனக்கு உபயோகமாக இருக்கும் என்று தனது உள்ளாழ்ந்த கீழ்க்கண்ட அத்வைத அனுபவத்தை என்னுடன் அவர் பகிர்ந்துகொள்ள விரும்பினார்.

“உலகில் நிலவும் குழப்பம், கொந்தளிப்பு எல்லாமே மனத்தை (அகந்தையைச்) சார்ந்தவையே. அது தன்னையே அறியாமையினால் இரட்டைகள் (நன்மை, தீமை) முப்புடிகள் (நான், நீ, அவன்- செய்பவன், செயல், செய்ப்படுபொருள்) என்று பிரித்துக்கொண்டு தவிக்கிறது. வாழ்வின் அனுபவங்களெல்லாம் நுகர்பவனையே (அகந்தையை) சார்ந்தவை. அவன் உண்மையில் இருப்பு என்பது இல்லாதவன்; நிழல் மாத்திரமேயவன். ஒவ்வொருவர் அகத்துள்ளும் உண்மையாக ஒளிரும், தானாக சுத்த சத்துவமாக இலங்கும் பரிபூரண உணர்வு ஒன்றே ஸத்வஸ்துவாகும். அதில் இரட்டைகள், முப்புடிகள் ஒன்றுமில்லை. அகம்பாவத்தினையும், அதன் அனுபவங்களையும் நிழலென ஒதுக்கித் தள்ளினால் எப்போதுமுள்ள சத்தியவஸ்து தானாக ஒளிரும். இந்த

எளிமையைப் பின்தொடர்ந்து மகிழ்ச்சி வருகிறது.

உண்மையை அறிவுபூர்வமாகப் புரிந்து கொண்டால்கூட சாந்தியும், பற்றின்மையும் நிலவும்.

"முடிவுற்று சுழன்று விரைந்தோடும் எண்ணற்ற அனுபவங்களினூடே சில நிமிடங் களாவது விலகி நின்று நாம் நம் உண்மை நிலையை அனுபவித்துப் பார்க்க முயல வேண்டும். வரையற்றதும், நிரஞ்சன நிர்விகார மும், வர்ணனைக்கெட்டாததுமான அந்த நிலை தூய, பரிபூர்ண உணர்வு மாத்திரமாக நிற்பது. உள்ளது அது ஒன்றே புத்தரும், சங்கரரும், தமது பகவானும் என்றும் விளக் கங்களாக ஒளி பாய்ச்சுகிறார்கள். இந்த சத் திய சொரூபிகளின் நினைவு நம்மை உள்ளே இழுத்து சொல்லொணாச் சாந்தியில் நம்மைச் சேர்த்துவிடும்.

இந்தக் குறுகிய மனதை அர்ப் பணித்து, எல்லையற்ற சத்திய சொருபத்தில் கரைந்து விடவேண்டும்."

இப்படி சொல்லிவிட்டு விசுவநாத சுவாமி, அருணாசலப் பஞ்சரத்னத்தின் கடைசி செய்யுளை மேற்கோள் காட்டினார்.

உன்னிடத்தில் ஒப்புவித்த உள்ளத்தால் எப்பொழுதும்
உன்னைக் கண்டெல்லாமும் உன்னுருவாய் - அன்னியமில்
அன்பு செயுமன்னோன் அருணாசலா வெல்கும்
இன்புருவாம் உன்னிலாழ்ந் தே.

("ஓ அருணாசலா! எவன் உன்னிடத்தில் ஒப்புவித்துவிட்ட உள்ளத்தால் எப்பொழுதும் உன்னையே கண்டு, எல்லாமே உன் உருவாக உணர்ந்து, அந்நியமில்லாத அன்பு செய்கிறானோ, அவன் வெற்றியடைகிறான்".)

ஆச்ரமத்தில் ரமண ஜயந்தி, மஹா பூஜை முதலிய முக்கிய உற்சவங்களுக்காக சமையற்காரர்களை அழைத்து வரும் பொறுப்பு காரைக்குடி நாகசுந்தரம் ஐயரிடம் ஒப்படைக் கப்பட்டிருந்தது. தேவராஜ முதலியார் போன்ற நிரந்தர ஆச்ரமவாசிகள்கூட அவரைத் தலைமை சமையற்காரர் என்றெண்ணும் அள விற்கு அவர் மற்ற சமையற்காரர்களுடன் சேர்ந்து கலந்து உழைத்தார். ஒரு ஜெயந்தி யின்போது, நாகசுந்தரம் ஐயர், இரவு முழு வதும் உழைத்த களைப்பில் சமயற்கூடத் திற்கு வெளியே திறந்தவெளியில் அயர்ந்து தூங்கிவிட்டார். வழக்கமான துண்டுவிரிப்போ போர்வையோ இல்லை. டிசம்பர் மாத பனி கொட்டும் குளிரில் வெற்றுடம்புடன் அயர்ந்து உறங்கும் அவரை அதிகாலை மூன்று மணிக்கு அங்கு வந்த பகவான் கவனித்தார். கருணையால் உருகிய பகவான், அருகில் நின்ற பணியாளரிடம் தன் கம்பளிப் போர் வையை எடுத்துவரச் சொல்லி, அதை அவருக் குப் போர்த்திவிட்டு, "பாவம் நாகசுந்தரம்! இரவு, பகல் பாராமல், ஓய்வு ஒழிச்சலின்றி கடுமை யாக உழைத்த களைப்பில் படுத்துக்கிடக்கும் இவருக்கு கொட்டும் கடும்பனி கூடத் தெரிய வில்லை" என்று நெகிழ்ந்தார்.

1940களின் இறுதியில் ஆச்ரமத்தில் வடநாட்டைச் சேர்ந்த பக்தர் ஒருவர் தங்கி யிருந்தார். அவர் பகவானின் தீவிர பக்தராயிருந் தாலும், வட்டிக்குப் பணம் கொடுப்பதை தொழிலாகக் கொண்டிருந்தார். இந்தக் காரணத்தினால் ஆச்ரமத்தின் உள்ளேயும், வெளியேயும் யாருக்கும் அவரைப் பிடிக்காது. பிற்காலத்தில் அவர் செல்வம் அனைத்தையும் இழந்தாலும் ஆச்ரமத்து அருகிலேயே தங்கி வந்தார். அவருடைய ஒரே மகள் புத்திசுவா தீனம் இழந்து வேறுவழியின்றி அவருடனே தங்குவதற்கு வந்தாள். இதைக் கண்டு அவர் மனம் உடைந்துபோனார். 1950இல் பகவான் உடல்நிலை கவலைக்கிடமாக இருந்த நேரம். யாரும் பகவானைத் தொடவோ, எதுவும் அவருக்குத் தரவோ கடுமையான தடை இருந்தது. தரிசனத்திற்காக வரிசையில்

நகா்ந்து வந்த அவா், பகவான் எதிரில் நின்று சிறு துண்டுக் காகிதத்தை பகவானின் பக்கத்தில் வைத்துவிட்டு அந்த இடத்தை விட்டு அகன்றாா். பகவான் அதை எடுத்துப் பாா்த்து விட்டு தலையணைக்கடியில் வைத்துக்கொண்டாா். சிறிதுநேரம் கழித்து ஒரு பணியாள் வந்து அவரைக் கூட்டிச் சென்றாா். அங்கிருந்த அனைவரும் தடையை மீறியதற்காக தண்டிக்கத்தான் கூட்டிச் செல்லப்படுகிறாா் என்று எண்ணினாா்கள். ஆனால் அவா் நேராக பகவானிடம் அழைத்துச் செல்லப்பட்டாா். பகவான் அவரை சிறிதுநேரம் கருணை ததும்பப் பாா்த்துக் கொண்டிருந்துவிட்டு 'சாி' என்பதுபோல் தலையசைத்தாா். பகவானிடம் சமா்பித்த அந்தக் காகிதத்தில் அவா், "பகவானே! என்னைக் காப்பாற்றுங்கள்" என்று எழுதியிருந்தாா்.

(தொடரும்...

## யாா் புலவன்?

ஒரு சமயம் சோழமன்னன் பொய்யாமொழிப் புலவரைச் சந்தித்தான். "புலவரே!" என்று புரவலன் அழைத்தான். அதுகேட்ட பொய்யமொழிப்புலவா் உடம்பில் மின்சாரம் பாய்ந்ததுபோல் திடுக்கிட்டு, உள்ளமும் உடலும் குலுங்கிப் பதறினாா்.

மன்னவன், "ஓ! ஏதோ நாம் தவறாக அழைத்து விட்டோமோ? புலவா் மனம் புண்படக்கூடாதே" என்று கருதினான்.

புலவரைப் பூபாலன் தொழுது, "என்னை மன்னிக்க வேண்டும். 'புலவா் பெருமானே' என்று அழைக்க வேண்டும். 'புலவா் ஏறே' என்று அழைத்திருக்க வேண்டும். நான் அடையின்றி வெறுமனே 'புலவரே என்று அழைத்துவிட்டேன், மன்னித்தருளும்" என்றான்.

பொய்யாமொழிப்புலவா் முன்னைக் காட்டிலும் பன்மடங்கு நடுக்கமுற்றனா், மன்னா் பெருமானே! மற்றும் ஒருமுறை இப்படி அழைக்க வேண்டாம். இப்படி அழைப்பது எனக்கு மிகுந்த வேதனை தருகின்றது" என்றாா்.

சோழ மன்னருக்குப் புலவருடைய சொற்பொருள் விளங்கவில்லை. அவருடைய கருத்தும் தெளிவாகவில்லை.

"புலவரே நீா் என்ன கூறுகின்றீா் என்பதைத் தெளிவாகச் சொல்லும்" என்றாா்.

"மன்னரே! மறுபடியும் மறுபடியும் என்னைப் புலவரே, புலவரே என்று அழைக்கின்றீரே! அறம் என்ற மகாபாரதத்தைப் பாடிய பெருந்தேவனாரையும் புலவா் என்று கூறி, அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலையும் கூறிய திருவள்ளுவரையும் புலவா் என்று கூறி, அகத்தியரையும் புலவா் என்று கூறி, அடியேனையும் புலவன் என்று கூறினால் இந்த உலகம் பொறுக்குமா?" என்று கூறிக் கண்கலங்கி நின்றாா். அப்போது அவா் கூறிய பாடல் இது.

"அறம்உரைத் தானும் புலவன் முப்பாலின்
திறம்உரைத் தானும் புல்வன்- குறுமுனி
தானும் புலவன்; தரணி பொறுக்குமோ
யானும் புலவன் எனில்"

-கோபுர தாிசனம்-



# சிறுவர் கதைகள்





## விக்கியை உதைத்த ஜோ

அந்தக் காட்டில் மரங்கள் அடர்ந்த ஒரு பகுதி இருந்தது. அந்தப் பகுதியில் ஒரு முயலும் குரங்கும் வசித்து வந்தன. அவர்கள் இருவரும் நெருங்கிய நண்பர்கள். எப்போதும் இருவரும் அந்தக் காட்டில் சுற்றித் திரிந்து விளையாடுவார்கள்.

முயலின் பெயர் டிங்கி. குரங்கின் பெயர் ஜோ. குரங்கு ஜோ தினமும் மரத்தில் ஏறி வகைவகையான நல்ல பழங்களைப் பறித்து முயல் டிங்கிக்குத் தரும். டிங்கியும் அந்தப் பழங்களைச் சந்தோஷமாகச் சாப்பிடும். இருவரும் தினமும் ஓடிப்பிடித்து விளையாடுவார்கள். டிங்கிக்காக ஜோ வேண்டுமென்றே மெதுவாக ஓடுவது போல நடிக்கும். தனது நண்பனின் மனசு வேதனை அடையக்கூடாது என்பதற்காக சில சமயங்களில் டிங்கியிடம் வேண்டுமென்றே தோற்றுப்போகும்.

டிங்கியும் ஜோவும் அந்தக் காட்டிலுள்ள நீர்வீழ்ச்சிக்குச் சென்று குளிப்பார்கள். அங்கேயே விளையாடிவிட்டு ஓய்வெடுத்துக்கொள்வார்கள். மாலை நேரமானதும் தங்கள் இருப்பிடத்திற்குத் திரும்பி வருவார்கள். இப்படியே சில நாட்கள் சென்றன.



அன்று இரவு டிங்கி தூங்கப்போனது. சிறிது நேரத்தில் அதற்குத் தூக்கம் வந்து விட்டது. அதற்கு ஒரு கனவு வந்தது. கனவில் டிங்கியும் ஜோவும் நீர்வீழ்ச்சியில் குளிக்கப் போனார்கள். டிங்கி குளித்துக் கொண்டிருக்கும்போது ஜோ பின்னாலிருந்து டிங்கியை ஓடிக் கொண்டிருந்த நீரில் தள்ளி விட்டது. டிங்கி கத்திக்கொண்டே நீரில் வீழ்ந்தது. டிங்கி திடுக்கிட்டு எழுந்தது. அப்போதுதான் அதற்கு ஜோ தன்னை நீர்வீழ்ச்சியில் தள்ளிவிட்டது கனவு என்று புரிந்தது. அது விடியற்காலை நேரம். விடியற்காலையில் காணும் கனவுகள் பலிக்கும் என்று

அதனுடைய அம்மா ஒருமுறை சொல்லியிருந்தது இப்போது டிங்கிக்கு ஞாபகம் வந்தது. இதன் காரணமாக டிங்கிக்கு மனதில் பயம் வந்தது.

காலை எழுந்ததிலிருந்து டிங்கிக்கு இந்த நினைப்பாகவே இருந்தது. சற்று நேரத்தில் ஒரு நாய் எதிரே வந்தது. அதன் பெயர் ஜில். ஜில்லிடம் டிங்கி தான் கண்ட கனவைப்பற்றிச் சொன்னது. டிங்கியும் ஜோவும் நண்பர்களாக இருப்பது ஜில்லுக்கு எப்போதுமே பிடிக்காது. இருவரையும் எப்படியாவது பிரிக்கவேண்டும் என்று நீண்ட நாட்களாக நினைத்துக் கொண்டிருந்தது. அதற்குச் சரியான சமயம் இப்போது கிடைத்தது. "ஆமா, டிங்கி, நீ இனி ஜாக்கிரதையாக இருக்கணும். இனி நீ ஜோகிட்டே சேராதே. அது உன்னை நீர்வீழ்ச்சியிலே நிச்சயம் தள்ளிடும்".

ஜில்லின் பேச்சைக்கேட்டதிலிருந்து டிங்கி கவலையுடன் உட்கார்ந்துகொண்டிருந்தது. அன்று வழக்கம்போல ஜோ வந்தது. "டிங்கி நாம விளையாடப் போகலாமா?" டிங்கி பதில்பேசாமல் நின்றுகொண்டிருந்தது. "என்ன டிங்கி, எந்தப் பதிலும் சொல்லாம நின்னுக்கிட்டிருக்கே". "நான் உன்கூட விளையாட வரலை". "ஏன் டிங்கி இதுமாதிரி பேசறே?" "உன்கூட இனி சேரக்கூடாதுன்னு முடிவு பண்ணியிருக்கேன்." இதைக்கேட்ட ஜோ அதிர்ச்சி அடைந்தது. "ஏன் டிங்கி என்னெல்லாமோ பேசறே. இன்னைக்கு என்ன ஆச்சு உனக்கு?" "உன்கூட விளையாடினா நீ என்னை நீர்வீழ்ச்சியிலே தள்ளி விட்டுடுவே. அதனால நான் இனி உன்கூட விளையாடவே மாட்டேன்".

"நீ என்ன சொல்றேன்னே எனக்குப் புரியலையே." டிங்கி தான் கண்ட கனவை ஜோவிடம் சொன்னது. இதைக்கேட்ட ஜோ விழுந்து விழுந்து சிரித்தது. "நீ என்னோட உயிர் நண்பன். நான் போய் உன்னை தண்ணியிலே தள்ளிவிடுவேனா? உனக்கு ஆபத்து ஏற்பட்டால் என் உயிரைக் கொடுத்தாவது ஆபத்திலேயிருந்து உன்னைக் காப்பாத்துவேன்." அதெல்லாம் எனக்குத் தெரியாது. நீ இனி என்னைப் பார்க்க வராதே. என்னை விளையாட்டுக்குக் கூப்பிடாதே."

ஜோவிற்கு இந்தப் பேச்சைக் கேட்டதும் அழுகையே வந்துவிட்டது. இனி டிங்கியிடம் பேசிப் பயனில்லை என்பதை உணர்ந்த ஜோ அங்கிருந்து வருத்தத்துடன் புறப்பட்டுச் சென்றது.

அடுத்த நாளிலிருந்து டிங்கி தனியே விளையாடச் சென்றது. ஜோ இல்லாமல் தனியே விளையாடுவது அதற்கு என்னமோ போல இருந்தது. அந்தப் பக்கமாக ஒரு நரி வந்தது. அதன் பெயர் விக்கி. "என்ன டிங்கி, தனியே விளையாடறே? ஜோ வரலையா?" "இல்லை, இனி அதுகூட நான் விளையாடறதா இல்லே. அது என்னை நீர்வீழ்ச்சியிலே தள்ளிவிடற மாதிரி கனவு கண்டேன். அதனால இனி ஜோ கூட சேரக்கூடாதுன்னு முடிவு பண்ணிட்டேன்." இந்தச் சமயத்தைத்தான் விக்கி எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்தது.

"நல்லவேளை. சரியான முடிவை எடுத்திருக்கே. அந்த ஜோ உன்னை தண்ணியிலே தள்ளிவிட்டுடும். நல்ல வேளையா நீ தப்பிச்சுக்கிட்டே." விக்கியின் பேச்சு டிங்கிக்கு சந்தோஷத்தைத் தந்தது. "விக்கி, வாயேன் நாம விளையாடலாம்." "ஓ, அதுக்கென்ன, நாம இப்ப விளையாடலாம்." விக்கியும் டிங்கியும் விளையாட ஆரம்பித்தன. விக்கி தன் மனத்தில் ஒரு திட்டத்தைத் தீட்ட ஆரம்பித்தது.

அடுத்த நாள் விக்கி தன் நண்பர்களை அழைத்தது. "நான் இப்ப உங்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியை சொல்லப் போறேன். அந்த டிங்கி முயல் இப்ப என்கூட பழக ஆரம்பிச்சிடுச்சு. நாம முயல்கறி சாப்பிட்டு ரொம்ப நாளாச்சு. முயலை நாம துரத்தி பிடிக்கிறது

ரொம்பக் கஷ்டம். அதனால நான் ஒரு திட்டம் போட்டிருக்கேன். நாம எல்லோரும் சேர்ந்து ஒரு பெரிய பள்ளம் தோண்டலாம். அதுமேல இலைகளைப்போட்டு மூடி மறைச்சிடலாம். நான் அந்த டிங்கியை ஏமாத்தி அதையும் அதோட நண்பர்களையும் நாளைக்கு காலையிலே இங்கே கூட்டிகிட்டு வர்றேன். நாம எல்லாரும் ஒண்ணா சேர்ந்து அதுங்களை பள்ளத்திலே தள்ளிடலாம். எப்படி என் ஐடியா?"

"பிரமாதம். உன் மூளை யாருக்கு வரும்?" விக்கியை நண்பர்கள் பாராட்டினர். விக்கி தன் நான்கு நண்பர்களுடன் சேர்ந்து அந்த இடத்தில் ஒரு பள்ளம் தோண்டி அதை கிளைகளைப்போட்டு மூடியது. அடுத்தநாள் விக்கி டிங்கியை தேடிச் சென்றது. விக்கியை டிங்கி வரவேற்றது.

"வா விக்கி, உன்னைத்தான் எதிர்பார்த்துக் காத்துக்கிட்டிருக்கேன். நாம விளையாடலாமா?"

"ஓ, என்கிட்டே ஒரு புதுப்பந்து இருக்கு. அந்தப் பந்தோட என்னோட நண்பர்கள் காத்துக்கிட்டிருக்காங்க. நீ உன் நண்பர்களை அழைச்சுகிட்டு வாயேன். ஒண்ணா சேர்ந்து ஜாலியா விளையாடலாம்." பந்து விளையாட்டு என்றதும் டிங்கி தன் நண்பர்களைக் கூப்பிட்டது. எல்லோரும் விளையாட வரச் சம்மதித்தார்கள். அனைவரும் புறப்பட்டார்கள். அந்தப் பள்ளம் வந்ததும் விக்கி தன் நண்பர்களைக் கூப்பிட்டது.

தங்களுக்கு நேர இருக்கும் ஆபத்தை அறியாத டிங்கியும் அதன் நண்பர்களும் பந்துவிளையாட்டை நினைத்து மகிழ்ச்சியாக குதித்துக் கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில்தான் எதிர்பாராத அந்த நிகழ்ச்சி நடந்தது. அந்தப் பகுதியில் இருந்த மரத்தின்மேலிருந்து ஜோவும் அதன் நண்பர்களும் கீழே குதித்து விக்கியையும் அதன் நண்பர்களையும் நன்றாக உதைக்க ஆரம்பித்தனர். இதை எதிர்பார்க்காத விக்கியும் அதன் நண்பர்களும் விட்டாலே போதுமென்று தலைதெறிக்க ஓடி மறைந்தனர். இதைப் பார்த்த டிங்கிக்கு ஆத்திரம் உண்டானது. அது ஜோவைப் பார்த்து கோபத்துடன் பேசியது.

"எதுக்காக என்னோட நண்பர்களைத் துரத்தினே. நான் உன்கூட விளையாடாம அதுங்ககூட விளையாடறது உனக்குப் பிடிக்கலையா?" என்னை நீ தப்பா புரிஞ்சிகிட்டே டிங்கி. நேத்து நான் இந்தப் பக்கமா வந்துகிட்டிருந்தேன். அப்ப இந்த விக்கி அதோட நண்பர்களோட உன் பெயரைச் சொல்லி பேசிக்கிட்டிருந்தது என் காதுல விழுந்துச்சு. அது ஒரு பள்ளத்தைத் தோண்டி உன்னையும் உன் நண்பர்களையும் அதுல தள்ளி அப்புறம் சாப்பிடணும்னு திட்டம் தீட்டிக்கிட்டிருந்துச்சு. உன்னை காப்பாத்துறதுக்காகத்தான் நான் என்னோட நண்பர்களை அழைச்சுகிட்டு வந்து இங்க காத்துக்கிட்டிருந்தேன். இதோ பாரு. விக்கி உன்னையும் உன் நண்பர்களையும் தள்ளுவதற்குத் தோண்டி வைச்சிருந்த பள்ளம்."

ஜோ அந்தக் கிளைகளை இழுத்துப்போட்டு விக்கி தோண்டி வைத்திருந்த பள்ளத்தைக் காட்டியது. டிங்கிக்கு இப்போது உண்மை புரிந்தது. ஜோவின் உண்மையான அன்பு டிங்கிக்கு புரிந்தது.

டிங்கி தன் உயிரைக் காப்பாற்றிய ஜோவிடம் மனப்பூர்வமாக மன்னிப்புக் கேட்டது. ஜோவும் டிங்கியை மன்னித்தது. இப்போது இருவரும் மீண்டும் நண்பர்களாகிவிட்டார்கள்.

# பிரார்த்தனை தினமும் அவசியமா?

**திரு ஐ.கோ. சந்திரசேகரம் அவர்கள்**

நாம் ஏன் தினமும் பிரார்த்தனை செய்ய வேண்டும்? நீண்ட காலம் குளிக்காமல் இருந்தால் புழு பூச்சி முதலியவைகள் வந்து நம் உடலை அழித்துவிடும். இதை நம் கண்ணால் பார்க்க முடிகிறது.

ஆனால் மனதில் ஏற்படும் மாற்றங்கள் கண்ணுக்குப் புலப்படாதவை. பிரார்த்தனை என்ற சோப்பிட்டு தியானம் என்ற நீரினால் மனதைத் தினமும் கழுவ வேண்டும். இல்லாவிட்டால் உடல் சீரழிவது போல, மனதில் காமம், குரோதம், மோகம், லோபம், மதம், மாத்சர்யம் ஆகிய நோய்கள் பெருகி நம் ஆன்மீக வாழ்க்கையைச் சிறிது சிறிதாக அழித்துவிடும்.

பிரார்த்தனையின் வலிமை

தினமும் பிரார்த்தனை செய்யும்போது நமக்கு ஒரு மிகப்பெரிய சக்தியுடன் தொடர்பு கிடைக்கிறது. அந்த சக்தியானது நமது மன உளைச்சல், பிரச்சினைகள் ஆகியவற்றை அகற்றி ஊக்கம், நம்பிக்கை, ஆற்றல் போன்றவற்றைக் கொடுக்கிறது.

ஆன்மீக வாழ்க்கையை முழுமையாக ஏற்று வாழ்ந்து வருபவர்கள் பிரார்த்தனையின்மூலம் மனதளவில் இளமையாகவும், வலிமையாகவும் விளங்குகிறார்கள்.

சுவாமி விவேகானந்தர் ஸ்ரீ ராமகிருஷ்ணரை ஓர் அமுத கலசமாக வர்ணிக்கிறார். அந்த அமுதம் எவற்றால் செய்யப்பட்டிருக்கிறது? அதில் வேத, வேதாந்தங்களின் சாரங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மேலும் ஸ்ரீமத் நாராயணனின் பத்து அவதாரங்களின் தத்துவங்களும் சேர்ந்துள்ளன. இவற்றுக்கு மேலாக பிரம்மா, விஷ்ணு, மகேசுவரர் ஆகியோரின் சக்திகளும் இணைந்துள்ளன.

அப்படிப்பட்ட அமுதத்தை நாம் தியானத்தின்மூலம் பருகினால் ஆன்மீக வாழ்வின் உன்னதத்தை அடைய முடியுமென்று சுவாமி விவேகானந்தர் உறுதியாகக் கூறுகிறார்.

ஆன்மீக வழியில் வாழ்வது எவ்வாறு என்ற முறையை ஸ்ரீ ராமகிருஷ்ணர் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார்.

"நான் என் மனதில் பதினாறில் ஒரு பங்கை மட்டும் வெளியில் வைத்து உலக வாழ்வில் ஈடுபடுகிறேன். மீதி பதினைந்து பாகங்கள் தேவியின் பாதக் கமலத்தில் வைத்துள்ளேன். நீங்கள் ஒரு பாகத்தை இறைவன் திருவடியில் வைத்து, மீதி பதினைந்து பாகங்களை உலக வாழ்வியல் ஈடுபடுத்தலாம்!"

மனதில் பதினாறிலொரு பங்கையாவது பகவானிடத்தில் செலுத்த வேண்டும். இறைவன்மீது அளவற்ற அன்பு வைத்தால் மனம் அவர் பாத கமலங்களில் சிறிது சிறிதாக லயிக்கும்.

அன்றாட வாழ்க்கையில் நடக்கும் சம்பவங்களைக் கூர்ந்து கவனிப்பதன்மூலம் அவற்றின் உட்பொருளை உணர்ந்து கொள்ளலாம்.

உதாரணமாக, பால் கெட்டுப்போகாமலிருக்க நன்கு காய்ச்சுகின்றோம். பிறகு உறையூட்டி தயிராக்குகிறோம் பாலினைவிட தயிரின் விலை இருமடங்கு அதிகம்.

அதே சமயம் பாலினைவிட தயிர் இரண்டுமடங்கு அதிக நாட்கள் கெடாமல் நீடிக்கிறது. தயிரைக் கடைந்தால் வெண்ணெய் கிடைக்கிறது. வெண்ணெய் தயிரைவிடப் பத்து மடங்கு

விலை அதிகமானாலும் தயிரை விடப் பத்து மடங்கு அதிக நாட்கள் நீடிக்கிறது.

வெண்ணெயைக் காய்ச்சினால் கிடைக்கும் நெய் வெண்ணெயை விடப் பல மடங்கு விலை அதிகம். ஆனால் நெய்யைப் பல மாதங்களுக்கு உபயோகப்படுத்தலாம்.

பக்தர்களாகிய நாம், பகவான் சோதிக்கும்போது அவர் நம்மைப் பாலாய்க் காய்ச்சிக் கொண்டிருக்கிறார், தயிராய்க் கடைந்துகொண்டிருக்கிறார், வெண்ணையாக்கிக் கசடை அகற்றிக் கொண்டிருக்கிறார் என்று எண்ணிக்கொள்ள வேண்டும்.

அப்போதுதான் பக்தனின் மதிப்பு பல மடங்காக அதிகரிக்கின்றது. அந்தப் பாதச்சுவடுகள் எங்கே?

அவன் சிறு வயது முதலே இறைவனிடம் நம்பிக்கையுள்ளவனாக இருந்தான். இறந்த பின்பு சொர்க்கம் சென்றான்.

அவன் சொர்க்கத்தில் பல வரைபடங்களைக் கண்டான். ஒவ்வொரு படத்தின் கீழும் சொர்க்கத்தை அடைந்திருந்த ஒவ்வொருவரின் பெயர் எழுதப்பட்டிருந்தது.

அவைகளுள் தன்னுடைய பெயர் இருக்கிறதா என்று ஆவலுடன் தேடினான். ஓர் ஓவியத்தின்கீழ் அவன் பெயர் இருந்தது. அது ஒரு கடற்கரையின் சித்திரம்.

கடற்கரை மணலில் இரண்டு ஜோடி பாதச்சுவடுகள் தென்பட்டன. ஒன்று தன்னுடையது. மற்றொன்று இறைவனுடையது என்று அவனுக்குப் புரிந்தது.

அதைத் தொடர்ந்து நோக்கினான். சில இடங்களில் ஒரு ஜோடி பாதச்சுவடுகள் மட்டும் காணப்பட்டன. பல இடங்களில் இரண்டு ஜோடி பாதச்சுவடுகள். அவனுக்குப் புரியவில்லை. கூர்ந்து கவனித்தான்.

அவனுடைய 18,19 வயதில் ஓவியத்தில் ஒரு ஜோடி பாதச்சுவடுகள் மட்டும் இருந்தன. அந்த வயதில் அவன் பரீட்சையில் தோல்வியடைந்தான். பலவிதமாகத் துன்பப்பட்டதை நினைவு கூர்ந்தான்.

19 வயதிற்குமேல் இரண்டுஜோடி பாதச்சுவடுகள். அடுத்து அவன் 32 வயதிலிருந்து 34 வயதுவரை நோய்வாய்ப்பட்டிருந்தான். அப்போதும் ஒரு ஜோடிப் பாதச்சுவடுகள்தான்.

உடனே அவன் "நான் கஷ்டப்படும்போது கடவுள் என்னைவிட்டு எங்கோ போய்விடுகிறார். நான் மகிழ்ச்சியாக இருக்கும்போது மட்டும் அவர் என்னுடன் வருகிறார்" என்று அவன் ஒரு முடிவிற்கு வந்தான்.

இறைவனிடம் அவன் கோபம் கொண்டான். நேராக இறைவனிடம் சென்று, "என் வாழ்நாள் முழுவதும் உங்கள் பக்தனாக இருந்திருக்கிறேன். ஆனால் துன்பம் வந்தபோதெல்லாம் என்னைக் கைவிட்டு விட்டீர்களே" என்று புலம்பினான்.

அதற்கு இறைவன், "மகனே, உனக்கு அந்தப் பாதச்சுவடுகளைச் சரியாகப் படிக்கத் தெரியவில்லை. நீ ஆனந்தமாய் இருக்கும்போது உன்னுடன் கைகோர்த்து கூடச் செல்வது என் வழக்கம். அதனால் இரண்டு ஜோடி பாதச் சுவடுகள் தென்படுகின்றன. நீ துன்பப்பட்ட போதெல்லாம் ஒருஜோடி பாதச்சுவடுகளை மட்டுமே காண்கிறாய். அவை உன் பாதச்சுவடுகள் என்றா நினைக்கிறாய்? இல்லை, உன் துன்ப காலங்களில் நீ காணும் பாதச்சுவடுகள் என்னுடையவை. ஏனெனில் உன் துன்பங்களின்போது உன்னை என் தோளில் அல்லவா நான் சுமந்து செல்கிறேன்!" என்று விளக்கினார்.

ஒருமுறை ஸ்ரீ ராமகிருஷ்ணர் கேசவர் வீட்டிற்குச் சென்றிருந்தார். "இன்று ஜகன்மாதா என்னை உங்கள் வீட்டில் ஜிலேபி சாப்பிடச் சொல்லியுள்ளாள்" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் கேசவரின் தாயாரிடம் கூறினார்.

கேசவரின் தாய்க்கு அளவற்ற மகிழ்ச்சி. ஜிலேபி அவர் வீட்டிலேயே இருந்தது. உடனே அதைக் கொண்டுவந்து சாப்பிடக் கொடுத்தார்.

அதன்பின்பு ஸ்ரீ ராமகிருஷ்ணர், "ஜகன்மாதா இன்று உங்கள் வீட்டில் ஐஸ்கிறீம் சாப்பிடச் சொல்லியிருக்கிறாள்" என்று கூறினார்.

கேசவரின் தாயார் திடுக்கிட்டார். ஏனெனில் வீட்டில் ஐஸ்கிறீம் இல்லை; அந்தப் பகுதியில் எங்கும் சுலபமாக ஐஸ்கிறீம் கிடைக்காது.

உடனே அவர் அம்பிகையிடம் மனமுருக வேண்டிக்கொண்டார். அந்தக் கணமே அதிசயமாகத் தெருவில் ஒருவன் ஐஸ்கிறீம் விற்றுக் கொண்டு சென்றான். சொல்லொணா ஆனந்தத்துடன் கேசவரின் தாய் ஓடிச் சென்று ஐஸ்கிறீம் வாங்கி ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு அளித்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணரும் சாப்பிட்டார்.

நம் வாழ்க்கையில் ஜிலேபி போன்ற சாதகமான சம்பவங்களும், ஐஸ்கிறீம் போன்ற பாதகமான சம்பவங்களும் மாறிமாறி ஏற்படுகின்றன. நாம் எந்தத் தருணத்திலும் பகவானை நம்பிக்கையுடன் பிடித்துக் கொண்டிருந்தால் சோதனைகள் சாதனைகளாக மாறுகின்றன.

சோதனைகளைக் கொடுப்பவனும் இறைவனே, அவைகளை நீக்குபவனும் அவனே.

ஆதலால் துன்பம் வரும்போது மட்டுமல்லாமல் எக்காலத்திலும் இறைவனின் சிந்தனையில் தொடர்ந்து ஈடுபட வேண்டும். பிரார்த்தனை, தியானம் இவற்றின்மூலம் நிச்சயமாக அந்த உன்னத நிலையை அடையலாம்.

---

அன்னையின் பிறந்தநாள் - 07.01.2012

# "அன்னையின் இதயமோ அட்சயபாத்திரம்"



அன்னையே! உந்தன் இதயமோ
அட்சய பாத்திரம் போன்றது
அகிலமோ உந்தனை அம்பாளென
ஆத்மார்த்தமாக வணங்குகிறது.
தன்னையே முழுவதுமாய் ஆகுதியாக்கி
தெல்லியூரைப் போற்ற வைத்து.
தரணிக்கு முதல்வியானாய் தங்கமே
தலையான நின்பணி என்றும் வெல்லுமே
முன்னையோ பின்னையோ ஒரு பெண்
முகாமை செய்வதற்கு வழி சமைத்தார்.
மேதகு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மொழிந்த
மிகு சைவத் துறைவிளங்கத் தனையீந்தார்.
உன்னையே நீ அறிந்தால் உன்பணி
ஒருபோதும் தோற்கா தென்பார்.
ஒவ்வாத வேலைகளை ஒருபோதும் ஏற்கார்
ஒவ்வொருகணத்தையும் அம்பாளுக்கே சொந்தமாக்கினார்!

-கே.எஸ். ராஜா-

# படங்கள் தரும் பதிவுகள்



கார்த்திகைமாத ஞானச்சுடர் மலர் வெளியீட்டின்போது, வெளியீட்டுரை, மதிப்பீட்டுரை ஆற்றும் பெரியோர்கள்.





கார்த்திகைமாத மலரின் சிறப்புப்பிரதியோடு
வாசக அன்பர்கள்



நாவலர் பக்கம்:

# திருவிளையாடல்

-ஆறுமுகநாவலர்- படலம் 60

## பரிநரி ஆக்கிய படலம்

பாண்டியன் தந்த வரிசைகளினோடும் தம் திருமாளிகை புகுந்த திருவாதவூரர், தம்மைக் காணவந்த உறவினர்களுக்கெல்லாம் உபசார வார்த்தைகள் கூறி மகிழ்ச்சி தெரிவித்து அவர்களை அனுப்பி வைத்தார். திருவாலவாயுடையார் நாம் கேட்டுக்கொண்டபடியே, தம் திரவியம் அனைத்தையும் எடுத்துக் கொண்டு மனதுக்கிசைந்த நல்ல குதிரைகளைச் செலுத்தி வந்து நமது கவலையை நீக்கினரே என வியந்து, சோமசுந்தரக்கடவுளின் திருவடித் தாமரைகளைத் தியானித்தபடி ஒரு தனியிடத்திலே வீற்றிருந்தருளினார். சூரியனும் அஸ்தமனமாயிற்று.

அர்த்தராத்திரியிலே சிவபெருமான் திருவிளையாடலினால், குதிரைகளாய் வந்த நரிகளெல்லாம், தங்கள் சுய வடிவங்கொண்டு ஓட்டமெடுத்தன. "பகலெல்லாம் குதிரைகளாகி மனிதரைச் சுமந்து சவுக்கடி பட்டு நாம் மிக்க வருத்தமுற்றோம். விடியுமுன்னர் இங்கிருந்து ஓடிவிடுவதே சரியானது. நத்தை, நண்டு, பிற விலங்குகளின் ஊன் இங்கில்லை. இங்கு புதிதாக எமக்குத் தரப்படும் கொள்ளு, பயறு, புற்கள் நமக்கு அடுக்காது அரச காவலாளிகளும் நம்மைக் கண்டால் அடித்துத் துரத்துவர்" எனப் பலவாறாகவும் தம்முள்ளே பேசிக் கொண்டபடி, கட்டுக்களை அறுத்துக்கொண்டு, பந்தியில் நின்றிருந்த ஏனைய குதிரைகளைத் தாவிக்கடித்து- ஊறு செய்தபடி, ஊளையிட்டுக் கொண்டு சுவர்களைத் தாண்டி ஓடின. முடமும் மூப்பும் நோயுமுடைய ஓட முடியாத நரிகள் காவலர்களைக் கடித்துக் காயப்படுத்தின. பல பக்கமும் சிதறி ஓடிய நரிக்கூட்டம் நகருக்குள் வீடுகளினுள்ளே புகுந்து, பசி மிகுதியினாற் அடுக்களைகளை ஆராய்ந்து- உணவைத் தின்று குட்டிகளுக்கும் கொடுத்து நகரம் எங்கும் திரிந்து, கோட்டை மதிற் கதவுகள் திறந்ததும் அருகே இருந்த காட்டுக்குள் ஓடின. பல்வேறு வகையான சப்தங்களால் நகரவாசிகள் விழித்தெழுந்தார்கள். விடிந்ததும் குதிரைப் பந்தியாளர்கள் நடந்தவை அனைத்தையும் பாண்டியனிடம் கூறினார்கள். இதைக்கேட்ட அரசன் கடுங்கோபமுற்றான். அருகிலிருந்த மந்திரிமார்களைப் பார்த்து, "நம் பொருள் முழுவதையுங் கொண்டுபோன வாதவூரன் எனும் இக்கள்வன் நரிகளைக் குதிரைகளாக்கி மாயஞ் செய்துவிட்டான். இவனுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம் கூறுங்கள்" என்று கேட்டான். அவர்களோ சொல்வது எதுவென அறியாது- தலை கவிழ்ந்து-பதில் எதுவும் கூறாதிருந்தனர்.

மாணிக்கவாசகர் இவை எதுவுமே அறியாதவராய், "பாண்டியன் விருப்பத்தின்படி நல்லினக் குதிரைகளைக் கொடுத்துவிட்ட திருப்தியுடன் அரசவைக்கு வந்தார். அரசனும் அவரை இகழ்ந்து கோபித்து, இரவு என்ன நடந்தது என்பதைக் கூறினான். தொடர்ந்து தண்டலாளர்களை நோக்கி, "இவனைக் கொண்டுபோய் தண்டித்து நம் பொருள் முழுவதையும் அறவிடுங்கள்" என்றான் கடும் வார்த்தைகளால். தண்டலாளர்கள் மாணிக்கவாசகரை அழைத்துப் போய் உச்சி வெய்யிலிலே சூரியனைப் பார்க்கும்படி நிறுத்தி, நெற்றியிலும்

கைகளிலும் கல்லை வைத்து வருத்தினார்கள். அவர்களது இந்தத் தண்டனையைப் பொறுக்க முடியாமல் மாணிக்கவாசகர், சோமசுந்தரக் கடவுளை அழைத்து அழுவாராயினார்.

சோமசுந்தரக் கடவுளானவர் மாணிக்க வாசகருடைய அழுகையைக் கேட்டு, அவரின் செய்கைகளை அரிமர்த்தன பாண்டியனுக்கு உணர்த்தவும், தாம் திருமுடியிலே மண் சுமக்கவும், "வந்தி"யென்கின்ற முதியாளைச் சிவலோகத்திற் சேர்க்கவும் திருவுளங்கொண்டு வைகை நதியைப் பார்த்து, "ஊழிக்காலச் சமுத்திரம்போலப் பெருகக் கடவாய்" என்று ஆஞ்ஞாபித்தருளினார். முன்னாளிலே காமாட்சி அம்மையாருடைய தவத்தைக் குலைக்க வந்த கம்பைநதி போல, வைகை நதி பெருகிப் பாய்ந்தது. நகர மக்களெல்லாம் பெரும் துயரம் அடைந்தனர். தங்கள் தங்கள் குழந்தைகளையும், பொருட்களையும், ஆபரணங்களையும் எடுத்துப் பத்திரப்படுத்துவதில் கண்ணாயிருந்தனர். அப்பொழுது, மாணிக்கவாசகருக்குத் தண்டனை கொடுத்த தண்டலாளர்களும் தத்தம் தத்தம் மனைவி மக்கள் பொருள்களைப் பேணுவதற்காக தம் வீட்டுக்கு ஓடிப் போயினர். மாணிக்கவாசகர் சோமசுந்தரக் கடவுளுடைய பாதங்களைத் துதித்தபடி அசைவற்றிருந்தனர்.

## அண்டினோரைக் காத்திடுவாய் ஆற்றங்கரை வேலா



அன்புவடிவானவனே
ஆற்றங்கரை வேலா
இதயத் திருத்திநிதம்
ஈடிலாப் பக்தியுடன்
உனை நாம்தொழுகின்றோம்
ஊரெலாம் செழித்திடவே
என்றும் உன்நல்லருளே
ஏற்றம் தருமெனவே
ஐயமிலாத் தொழுகையினால்
ஒத்தநன்நெறி வழியில்
ஓங்காரத் துட்பொருளை
உலகறிய வைத்தவனே
என்றும் உனை நம்பினோரை
நன்றே காத்திடப்பா.

-தி. மயூரகிரி-

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

(தொடர்ச்சி...

| | | | |
|---|---|---|---|
| த. யோகநாதன் | (C.T.B) | அச்சுவேலி | 10000. 00 |
| ஸ்ரீ சத்யசாயி கானசபை | | சுவிஸ் | 10000. 00 |
| செல்லப்பா கனகசுந்தரம் | | லண்டன் | 3000. 00 |
| வே. அருணாசலம் | | கொழும்பு | 4500. 00 |
| வே. குமாரசுவாமி | | காரைநகர் | 1500. 00 |
| இ. விஜயராசா | | வவுனியா | 500. 00 |
| மு. கந்தசாமி குடும்பம் | | மயிலிட்டி | 8000. 00 |
| S. லஷ்சுமிகாந்தன் | இடைக்காடு | அச்சுவேலி | 1000. 00 |
| R. சிவதாசன் | | கொடிகாமம் | 2000. 00 |
| இராசதுரை பிரபாகரன் | K.K.S. வீதி | கோண்டாவில் | 1000. 00 |
| கந்தையா கிரிதரன் | K.K.S. றோட் | கோண்டாவில் | 1000. 00 |
| P. சிவனேசன் | | லண்டன் | 1000. 00 |
| திரு சிவலோகலிங்கம் நிலாவெளி | | திருகோணமலை | 3000. 00 |
| அ. கோகுலநந்தன் (கண்ணன்) | | ஆவரங்கால் | 2000. 00 |
| சதானந்தம் செல்வம் | கற்கோவளம் | பருத்தித்துறை | 1000. 00 |
| நிறோஜா | | வல்வெட்டித்துறை | 4000. 00 |
| இளம்வழுதி கீதாஞ்சலி | வதிரி | கரவெட்டி | 2000. 00 |
| மு. பாலசிங்கம் | | மட்டுவில் வடக்கு | 2000. 00 |
| சி. சிவஞானம் | | பருத்தித்துறை | 5000. 00 |
| தியாகலிங்கம் திருக்குமார் | | மட்டக்களப்பு | 5000. 00 |
| R.S. ராஜன் | | உரும்பராய் | 5000. 00 |
| கார்த்திகேசு மாஸ்டர் (நினைவு) | | முருகண்டி | 11000. 00 |
| திருமதி சிவசுப்பிரமணியம் | | வெள்ளவத்தை | 2000. 00 |
| கந்தையாப்பிள்ளை மனோன்மணி | | அச்சுவேலி | 10000. 00 |
| நாகமுத்து கந்தப்பு | தோப்பு | அச்சுவேலி | 3000. 00 |
| ஜெகதீசன் கிருபா | | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| அ. ஆனந்தகுமார் | | லண்டன் | 5000. 00 |
| உமாபாலன் சந்திரிக்கா | | உடுப்பிட்டி | 10000. 00 |
| அருணாசலம் சாவித்திரியம்மா | | தும்பளை | 5000. 00 |
| மயில்வாகனம் துஷாந்தன் | | கனடா | 12000. 00 |
| பால்ராஜ் சாய்மாருதன் | | அச்சுவேலி | 16000. 00 |
| ஸ்ரீகரன் சிவகுருநாதன் | | இணுவில் | 2000. 00 |
| K. ஞானேஸ்வரன் | | அளவெட்டி | 2000. 00 |
| வேணுகோபால் மாஸ்டர் | | பருத்தித்துறை | 5000. 00 |
| நி. முகுந்தன் | கொழும்பு | கல்கிசை | 2000. 00 |
| R.V. கந்தசாமி | | யாழ்ப்பாணம் | 1000. 00 |

| | | |
|---|---|---|
| பராசக்தி சிவநாதன் | நயினாதீவு | 1500. 00 |
| K.V. துரைசாமி (நினைவு) | மயிலிட்டி | 1000. 00 |
| திருமதி சுதேசினி பிரபாகரன் (உ.அ.மி.க. ஆசிரியை) தேவன்குறிச்சி | வல்வெட்டித்துறை | 5000. 00 |

**2011 உற்சவகாலம் தொடக்கம்**

| | | | |
|---|---|---|---|
| சி. சசிகரன் | புத்தூர் | (லண்டன்) | 2000. 00 |
| கு. சிவகுமார் | மயிலணி, | சுண்ணாகம் | 500. 00 |
| சீ.சி. கந்தையா | (பலாலி) | ஆவரங்கால் | 5000. 00 |
| E. சிவயோகநாதன் | சொகிசாபுரம் | மொறட்டுவ | 2000. 00 |
| அ. சாவித்திரி | | தும்பளை | 5000. 00 |
| ஐயாத்துரை குகேந்திரராணி | ஐயனார் கோயிலடி | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| சு. சோமஸ்கந்தமூர்த்தி | | சித்தங்கேணி | 1000. 00 |
| N. கதிர்காமநாதன் | | கொழும்பு | 1மூடை அரிசி |
| R. சங்கரலிங்கம் (அபிரா ஹொட்டல் உரிமையாளர்) | | ஊரெழு | 1மூடை அரிசி |
| திரு கரன் கூல்பார் | | ஊரெழு | 1மூடை அரிசி |
| திரு சிவாகரன் வெல்டிங் வேக்ஸ் உரிமையாளர் | | ஊரெழு | 20கிலோ அரிசி |
| நாகேந்திரம் கண்ணம்மா | | மானிப்பாய் | 2000. 00 |
| S. திலீபன் | புத்தூர் மேற்கு | நவக்கிரி | 1000. 00 |
| ஐ. வேலாயுதர் | வேல்வாசம், | கோப்பாய் தெற்கு | 1000. 00 |
| பொ. பாஸ்கரன் | சோமசுந்தரம்வீதி | ஆனைக்கோட்டை | 1000. 00 |
| M. குலசேகரம் | | கோப்பாய் | 5000. 00 |
| T. சண்முகவரதன் | | அவுஸ்திரேலியா | 15000. 00 |
| V. விஜிதன் | | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| பேராசிரியர் வி. சிவசாமிமூலம் | இ. சண்முகராசா | லண்டன் | 20000. 00 |
| க. சுரேஷ்குடும்பம் | | கொழும்பு | 5000. 00 |
| Dr P. சிவபாலன் | | கொழும்பு | 5000. 00 |
| P.R. கனகலிங்கம் | கோலிங் வூட் பிளேஸ் | கொழும்பு-6 | 10000. 00 |
| S. சுந்தரகுமார் | ஈச்சமோட்டை | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| S. ராஜேந்திரா | | புலோலி தெற்கு | 8000. 00 |
| ராஜரட்ணம் நிருஜன் | | வெள்ளவத்தை | 5000. 00 |
| ராஜரட்ணம் கஜன் | | வெள்ளவத்தை | 5000. 00 |
| சு. பாலதேவி சுந்தரம் | | பருத்தித்துறை | 10000. 00 |
| R. பத்மநாதன் | | ஜேர்மனி | 5000. 00 |
| இராமலிங்கம் சகோதரிகள் | வண்ணார்பண்ணை | யாழ்ப்பாணம் | 3மூடை அரிசி, 3000. 00 |
| சி. சிவபாதசுந்தரம் | வண்ணார்பண்ணை | யாழ்ப்பாணம் | 2மூடை அரிசி |
| S. கருணானந்தன் | | | 1மூடை அரிசி, 2000. 00 |
| செ. சிவனேசன் | | அச்சுவேலி | 3000. 00 |
| நா. பரமானந்தமூர்த்தி | | கனடா | 30000. 00 |
| லவன் ஞானகுரு, தாட்ஷாயினி ஞானகுரு | சம்பந்தமூர்த்திமூலம் | கொழும்பு | 9000. 00 |

(தொடரும்...

# திருவாவடுதுறை ஆதீனம் நடாத்திய யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலர் விழா

திருவாவடுதுறை ஆதீனத்தின் இருபத்து மூன்றாவது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகளின் திருவுளப்பாங்கின்படி 16.12.2011 வெள்ளி அன்று ஆதீனத்தின் திருமடத்தில் நடைபெற்ற ஆறுமுக நாவலரின் விழாவிற்கான அழைப்பிதழுடன், **"தவத்திரு ஆறுமுகநாவலர் வரலாற்றுச் சுருக்கமும், இலங்கைத் திருநாட்டில் ஆதீனத்தின் சமயப்பணிகளும்"** என்கின்ற விபரக் கட்டுரையும் காணப்படுகிறது. இலங்கையில் சைவத்தையும், தமிழையும் போற்றி வளர்த்த, வளர்த்துவரும் சைவப் பெரியார்கள் பலரதும் சைவ நிறுவனங்கள் பலரதும் பற்றிய விபரமான குறிப்பு அந்த அழைப்பிதழ் கட்டுரையில் காணப்படுகிறது. அந்தப் பெரியார்களையும், சைவ நிறுவனங்களையும் கௌரவிக்கும் வகையில் அக்கட்டுரை எவ்வித மாறுதலுமின்றி முழுமையாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## தவத்திரு ஆறுமுகநாவலர் வரலாற்றுச் சுருக்கமும் இலங்கைத் திருநாட்டில் ஆதீனத்தின் சமயப்பணிகளும்.

தவத்திரு ஆறுமுகநாவலர் அவர்கள் 1822ஆம் ஆண்டு டிசம்பர் 18ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நல்லூர் என்ற இடத்தில் பிறந்தார். தந்தையார் பெயர் கந்தசாமிப்பிள்ளை, தயார் பெயர் சிவகாமி. நல்லூர் சுப்பிரமணிய பிள்ளையிடம் கல்வியும், வித்துவான் வேலாயுத முதலியாரிடம் தமிழ் இலக்கிய இலக்கணங்களையும் கற்றார். சைவக் கொள்கைகளை விளக்கி "சைவ வினாவிடை" என்ற பெயரில் இரு நூல்களையும் "பால பாடம்" என்ற பெயரால் நான்கு நூல்களையும் "இலக்கண வினாவிடை"யையும் எழுதியுள்ளார். பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் ஆகியவற்றை உரைநடை நூல்களாக எழுதினார். சூடாமணி நிகண்டு, திருச்சிற்றம்பலக்கோவை சிவஞானபோதம், தொல்காப்பியச் சூத்திர விருத்தி, தொல்காப்பியச் சொல்லதிகாரம், சேனாவரையம் முதலான பல நூல்களுக்கு உரையும் எழுதியுள்ளார். முற்றுப்புள்ளி, அரைப்புள்ளி, வினாக்குறி, வியப்புக்குறி ஆகியவற்றைத் தமிழில் முதன்முதலில் பயன்படுத்தியவர் இவர் என்றே கூறலாம். திருவாவடுதுறை ஆதீனத்தால் நாவலர் பட்டம் சூட்டப்பட்டவர். 1879ஆம் ஆண்டு டிசம்பர் 5ஆம் திகதி சிவபதம் அடைந்தார்.

### துறைசை ஆதீனமும் நாவலரும்

இலங்கையில் உள்ள வித்யாசாலைகளில் பயிலும் அன்பர்களுக்குப் பாடப்புத்தகங்கள் இன்றியமையாதது என உணர்ந்து, எழுத்துக்களை அச்சாக்கும் அச்சு இயந்திரம் வாங்க முடிவு செய்து சென்னை வந்த நாவலரவர்கள் திருவாவடுதுறை வந்து ஆதீனத்து 15ஆவது குரு மகா சன்னிதானம் அருள்திரு அம்பலவாண தேசிக மூர்த்திகள் மற்றும் சின்னப்பட்டம் அருள்திரு மேலகரம் சுப்பிரமணிய தேசிக மூர்த்திகள் ஆகியோரை வணங்கி மகிழவும், குருமகா சன்னிதானம் அவர்களின் திருவுளக் கருத்திற்கு ஏற்ப ஆதீன மடத்தில் சிலநாள்

தங்கி ஓலைச் சுவடிகள் ஆய்வும், சமய இலக்கியக் கலந்துரையாடலும் பல சமயங்களில் சொற்பொழிவுகளும் ஆற்றினார். சைவாகமங்களில் கூறப்படும் பதி, பசு பாசத் தன்மைகளைச் சுருங்கச் சொல்லி விளக்க வைத்தும், இலக்கண விதிமுறைகள் மாறாதும், தருக்க நிலை கொண்டும் விளக்கிச் சொல்வதில் வல்லமை கொண்டும் திகழ்ந்தார். ஆறுமுக நாவலரின் அறிவு நுட்பத்திறனை நினைந்து மனம் நெகிழ்ந்து அருள்திரு அம்பலவாண தேசிக சுவாமிகள் அவர்கள் 1849இல் (சௌமிய வருடம்) நாவலர் என்னும் பட்டத்தை அவருக்குச் சூட்டி மகிழ்ந்தார்கள். அச்சு இயந்திரம் வாங்க வந்த ஆறுமுகம்பிள்ளை ஆறுமுக நாவலராக யாழ்ப்பாணம் திரும்பினார். அதுமுதல் "நாவலர்" என்றால் ஆறுமுக நாவலரையே குறிக்கும் என்னும் வாக்கு உலகெங்கும் பரவியது. குருமகா சன்னிதானம் அவர்கள் பிரபவ ஆண்டு (ஆங்கில ஆண்டு 1867) ஆனி மாதத்து திருமஞ்சன விழாநாளில் தில்லைக் கூத்தப்பெருமானுக்கு மகரக் கண்டிகை சாத்துவித்துத் தரிசித்து நின்றபோது நாவலர் அவர்கள் சிவனடியார்கள் பலருடன் மாகேசுவர பூசை இயற்றி வழிபட்டார். திருவாவடுதுறை ஆதீனத்திருமுறை ஓதுவார்களைத் தமது நாட்டிற்கு அழைத்துச் சென்று அங்குள்ள அன்பர்களுக்குத் திருமுறைப் பயிற்சியும் அளிக்க நாவலர் அவர்கள் ஏற்பாடு செய்தார்.


**துறைசையாதீனமும் ஈழத்தமிழறிஞர்களும்**

ஆறுமுக நாவலருக்குப் பிறகு சமய நூல்கள் பல படைத்தளித்த யாழ்ப்பாணம் சபாபதியாருக்கு நாவலர் பட்டத்தை ஆதீனத்துப் பதினாறாவது குருமகா சன்னிதானம் அருள்திரு சுப்பிரமணிய தேசிக மூர்த்திகள் அவர்கள் வழங்கிச் சிறப்பித்துள்ளார்கள். மேலும் அந்நாட்டைச் சார்ந்த அம்பலவாணர் என்பாருக்கும் நாவலர் பட்டமானது நமது ஆதீனத்திலிருந்து வழங்கிக் கௌரவிக்கப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. பதிப்புச் செம்மல் ஈழத் தமிழறிஞர் சி. வை. தாமோதரனாரின் பதிப்புப் பணிக்கென தொல்காப்பியம், சூளாமணி, இலக்கண விளக்கம், கலித்தொகை முதலான பல ஏட்டுச் சுவடிகளை ஆதீனத்து 16ஆவது குருமகா சன்னிதானம் அவர்கள் வழங்கி உதவி புரிந்து ஆதீனத்திற்கெனச் சில பிரதிகளும் பெற்றுக் கொண்டார்கள். சி.வை. தாமோதரனாரின் நூற்றாண்டு விழாவினை 09.10.2008 அன்று நடாத்தி தமோதரனாரின் நூல்களை ஆய்வு செய்து நூல்கள் வெளியிட்ட சென்னை மாநிலக் கல்லூரி இணைப் பேராசிரியர் திரு ப. தாமரைக்கண்ணன் அவர்களுக்கு "அருந்தமிழ் ஆய்வுரைச் செம்மல்" விருதும், ரூபா 3000 பொற்கிழியும் ஆதீனத்திலிருந்து வழங்கிக் கௌரவிக்கப்பெற்றது. இலங்கையில் சிவாகமச் சீலராகச் சிறந்து விளங்கிய அச்சுவேலி சிவஸ்ரீ குமாரசுவாமி குருக்களுக்குச் சிவாகம ஞானபானு என்னும் பட்டத்தை ஆதீனம் வழங்கிக் கௌரவித்துள்ளது.

**இலங்கைத் திருநாட்டில் 23ஆவது குருமகா சன்னிதானம் அவர்கள் திருத்தலயாத்திரை:**

அழைப்பிற்கிணங்க சைவம் தழைத்தோங்கும் இலங்கைத் திருநாட்டிற்கு 2003ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் எழுந்தருளி, திருக்கேதீச்சரம் திருக்கோயில் மண்டலாபிடேக விழாவில் கலந்துகொண்டு வழிபாடாற்றி ஆசியருளினார்கள். அத்தலயாத்திரையில் கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் திருக்கோயில், ஈழத்துச் சிதம்பரம், நல்லை கந்தசாமி முருகன் திருக்கோயில், வண்ணைநகர் வைத்தீஸ்வரன் திருக்கோயில் என பல முக்கிய திருக்கோயில்கள் தரிசனம் செய்து சமய சமூக நல அமைப்புக்களைப் பார்வையிட்டு அவ்வன்பர்களுக்கு ஆசி வழங்கியருளினார்கள். அங்குள்ள நல்லை ஆதீனத்திற்கு எழுந்தருளி அவ்வாதீன மடாதிபதியிடம் அந்நாட்டு சமய நிலைகுறித்து அளவளாவி மகிழ்ந்தார்கள்.

இரண்டாவது முறையாக 2003 டிசம்பர் மாதம் இலங்கை சென்று பொன்னம்பல வாணேஸ்வரர் திருக்கோயில் தரிசனம் செய்து காரைநகர் அருள்தரு சிவகாமியம்மை உடனுறை அருள்மிகு சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் நடந்த 2ஆவது உலக இந்துமாநாட்டில்




**ஒரு தகவல்:**

**சென்னையில் ஒவ்வொரு ஆண்டும் தைமாதத்தில் புத்தகக் கண்காட்சி நடைபெற்று வருகிறது. இந்தப் புத்தகக் கண்காட்சியில் தமிழகத்தின் பல நூற்றுக்கணக்கான வெளியீட்டாளர்கள் வருடந்தோறும் பங்கு கொள்கின்றனர். கண்காட்சிப் பாதையின் இருமருங்கும் வைக்கப்பட்டிருந்த பானர்களில் ஒன்றினையே நீங்கள் காண்கிறீர்கள். உள்ளே- ஒரு காட்சி அறையில் நாவலர் பெருமானால் ஆரம்பிக்கப்பட்ட வித்தியானு பாலன யந்திரசாலையினரின் வெளியீடுகள் யாவும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. மண்டபம் நிறைந்த சைவ மக்கள் கூட்டம் நாவலர் பெருமானின் வெளியீடுகளை போட்டி போட்டு வாங்கிச் சென்றமையையும் காண முடிந்தது.**

கலந்துகொண்டு சிறப்பித்து ஆசியருளினார்கள். அப்போதே ஈழத்துச் சிதம்பரம் சைவ சமய அறப்பணி நிலையத்தைத் திறந்து வைத்து அருளினார்கள். அரசே ஏற்று நல்லையில் சிறப்புற நடத்தும் ஆறுமுகநாவலர் குருபூசை விழாவிலும் எழுந்தருளி அருள் வாழ்த்துரை வழங்கியருளினார்கள். அப்போது நல்லை ஆதீனமும் உடனிருந்தார்கள்.

பின்னர், 29.09.2010இல் ஈழத் திருநாடு சென்று பொன்னம்பலவாணேஸ்வரர் திருக்கோயில் மற்றும் முக்கிய திருக்கோயில்களைத் தரிசனம் செய்து, அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தின் ஐம்பதாவது ஆண்டுப் பொன் விழாவில் எழுந்தருளி வாழ்த்துரை வழங்கியும், ஆதீனம் சார்பில் நடைபெறும் சைவத் திருமுறைப் பயிற்சி மைய மாணாக்கர்களுக்கு வாழ்த்துரை வழங்கியும், கொழும்பு விவேகானந்த சபைக்கு எழுந்தருளி வாழ்த்துரையும் வழங்கியருளினார்கள்.

**ஈழத்திருநாட்டின் சமயச் சான்றோர்க்கு விருது**

2002 சிவஞான சுவாமிகள் சித்திரை ஆயிலியம் திருநட்சத்திர விழாவில் நமசிவாயனாருக்கு மோதிரம், பொற்கிழி ரூ. 3000 பாராட்டிதழும், 2003 தலயாத்திரையின்போது இந்து சமய விவகாரத்துறை அமைச்சர் திரு தியாகராஜா மகேசுவரனாருக்கு "அறப்பணிச் செல்வர்" என்னும் விருதும், தாவடியூர் கே.எஸ். ஆர். திருஞானசம்பந்தனாருக்கு 2004 பங்குனித் திருவோணம் குருபூசையில் பொற்கிழி ரூபா 3000, பொன்ஆழி, பாராட்டிதழும், அப்பெருமகனாருக்கே குருமுதல்வர் குருபூசையில் (2006) "தெய்வத் தமிழிசைச் செல்வர்" விருதும் ரூ. 3000 பொற்கிழியும், மேலும் 2008 பங்குனித் திருவோண குருபூசையில் துறைசையாதீன திருமுறைத் தோன்றல், ரூ. 3000 பொற்கிழியும், 2005 குருமுதல்வர் குருபூசையில் தங்கம்மா அப்பாக்குட்டிக்கு "சிவத்திருத் தொண்டர்" விருதும், 2006 குருமுதல்வர் குருபூசையில் கே.கே. சுப்பிரமணியனாருக்குச் சிவத்திருத்தொண்டர், காந்தளகம் திரு சச்சிதானந்தம் அவர்களுக்குச் "சிவநெறித் திருத்தொண்டர்" விருதுகளும், 2007 குருமுதல்வர் குருபூசையில் யாழ்ப்பாணம் த. சண்முகலிங்கனாருக்குச் சிவநெறிப்புரவலர், சு. கனகரத்தினனாருக்கு "தெய்வத் தமிழிசைச் செல்வர்", திரு க. சாரங்கனாருக்கு ரூ. 3000 பொற்கிழி, "தெய்வத் தமிழிசைச் செல்வர்" விருதுகளும், 2007 திருவிடை மருதூர் தைப்பூசப் பெருவிழாவில் க. சிவபாலனாருக்கு "அடியார்க்கு அமுதளிக்கும் அண்ணல்" விருதும், 2007 மார்கழித் திருவாதிரையில் கு. நடராசா நவரத்தினனாருக்குச் "சிவத்திருத் தொண்டர்" விருதும், 2007 மயிலாடுதுறைத் திருக்கோயில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையில் ச. விநாயகமூர்த்தியாருக்குச் "சிவத்தமிழ்ச் செல்வர்" விருதும், 2008 பங்குனித் திருவோணம் குருபூசையில் செ. நவநீதக்குமாருக்கு துறைசை ஆதீனச் சமயப் பரப்புநர் பணி நியமன ஆணையும் 2004இல் அனுசாந்தனாருக்குத் துறைசையாதீனச் சமயப் பரப்புநர் எனும் பணி நியமன ஆணையும் பின்னர் ஆதீனப் புலவர் நியமன ஆணையும் வழங்கியருளப்பெற்றன. 2008இல் ஆறுமுகநாவலர் விழாவில் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபைக்குச் "சித்தாந்த சைவ சுடர்நிலையம்" விருதும், ரூ. 3000 பொற்கிழியும் வழங்கியருளப்பெற்றன. 2009இல் நாவலர் விழாவில் இலங்கை விவேகானந்த சபைக்குச் "சைவச்சுடர் நிலையம்" விருதும் ரூ. 3000 பொற்கிழியும் வழங்கியருளியதோடு, அதே ஆண்டில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாளில் கொழும்பு திருமிகு கா.பொ. இரத்தினம் அவர்களுக்குப் பொற்கிழி ரூ. 3000மும் "திருக்குறள் விரித்துரைப்பார்" விருதும் வழங்கப்பெற்றன.

**உபயமளித்து**

1981-1982 நடைபெற்ற இலங்கை உலக இந்து மாநாட்டில் ஆதீனம் சார்பில் மூத்த தம்பிரானான சீர்மன்னு திருஞானசம்பந்தத் தம்பிரான் சுவாமிகள் மற்றும் ஆதீன வித்துவான் புலவர் கீரன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்ததோடு மாநாட்டிற்கு அழைக்கவந்த அந்நாட்டு இந்துசமய விவகாரத்துறை அமைச்சரிடம் 22ஆவது குருமகா சன்னிதானம் அருள்திரு அம்பலவாண தேசிக சுவாமிகள் அவர்கள் ரூ. 10000 மாநாட்டிற்கென வழங்கியுள்ளார்கள். 2003ஆம் ஆண்டு வவுனிக்குளம் சிவபுரம் திருக்கோயிலுக்கென ஆதீன உபயமாகப் பாணலிங்கம் (மரகதம்) வழங்கப்பெற்றது. ஈழத் திருநாட்டில் நடைபெறும் குடமுழுக்குகள், திருவிழாக்கள், சமயநிகழ்ச்சிகள் ஆகியவற்றிற்கு அஞ்சல் வழி அருள் வாழ்த்துரை அனுப்பி வைக்கப்பெறுகிறது. சைவ சமயநெறிமுறைகளில் அந்நாட்டு

அன்பர்களுக்கு ஏற்படும் ஐயங்களுக்கு விளக்கமளித்து நெறிப்படுத்தப் பெறுகிறது. தலயாத்திரையாகச் சிதம்பரம் உள்ளிட்ட திருக்கோயில்களைத் தரிசிக்க வரும் அந்நாட்டு அன்பர்களுக்கு ஆதீனக்கிளை மடங்களில் தங்குவதற்கான ஏற்பாடுகளும் உணவும் வழங்கப்பெறுகின்றன. அவ்வன்பர்கள் மடாலயம் வந்து ஆதீன குருமூர்த்திகளைத் தரிசித்து ஆசி பெறுகிற பொழுது ஆதீன வெளியீட்டு நூல்களும், அருட்கொடையும் வழங்கியருளப்பெறுகிறது. மேலும் திருக்கோயில் வழிகாட்டுதலுக்காகச் சில வேளைகளில் ஆதீனப் பணியாளர் ஒருவரை யாத்திரையின்போது அனுப்பி வைத்து உதவி செய்யப்பெறுகிறது. இலங்கையிலுள்ள பல்கலைக் கழகங்கள் மற்றும் சமய அமைப்புகளுக்கு ஆதீன வெளியீடுகள் அவ்வவ்பொழுது வழங்கப்பெறுகின்றன. தற்போது ஆதீனத்திற்கும் ஈழத் திருநாட்டிற்கும் உள்ள சைவசமயம் குறித்த உறவை வலுப்படுத்தும் வகையில் சென்னை, காந்தளகம் திரு சச்சிதானந்தம் அவர்களும் சென்னை திரு இரத்தினசபாபதி அவர்களும் இன்றுவரை பாலமாக இருந்து வருகின்றார்கள்.

சீர்வளர்சீர் குருமகா சன்னிதானம் அவர்களின் அருளாணையின் வண்ணம் 2010ஆம் ஆண்டு ஈழத்திருநாட்டில் திருவாவடுதுறை ஆதீனம் சைவத் திருமுறைப் பயிற்சி மையம் தொடங்கப்பெற்று சிறப்புற நடந்து வருகிறது. 2011ஆம் ஆண்டு ஆதீனம் சார்பில் சைவசித்தாந்தப் பயிற்சி மையமும் தொடங்கப்பெற்று செவ்வனே நடைபெறுகிறது.

**தவத்திரு ஆறுமுக நாவலர் எழுதி வெளியிட்ட நூல்கள்**

1. முதலாம் பாலபாடம்
2. இரண்டாம் பாலபாடம்
3. மூன்றாம் பாலபாடம்
4. நான்காம் பாலபாடம்
5. பெரியபுராண வசனம்
6. சிவாலய தரிசன விதி
7. சைவ தூஷண பரிகாரம்- சுப்பிரபோதம்
8. முதலாம் சைவ வினாவிடை
9. இரண்டாம் சைவ வினாவிடை
10. இலக்கணச் சுருக்கம்
11. சிதம்பர மான்மியம்
12. கந்தபுராண வசனம்
13. அநுட்டான விதி - முதற்புத்தகம்
14. அநுட்டான விதி- இரண்டாம் புத்தகம்
15. யாழ்ப்பாணச் சமயநிலை
16. இலங்கைப்பூமி சாஸ்திரம்
17. திருவிளையாடற்புராண வசனம்
18. இலக்கண வினாவிடை - முதற்புத்தகம்
19. இலக்கண வினாவிடை- இரண்டாம் புத்தகம்
20. நல்லூர் கந்தசுவாமி கோவில்- முதற்புத்தகம்
21. நல்லூர் கந்தசுவாமி கோவில்- இரண்டாம் புத்தகம்
22. பெரியபுராண சூசனம்
23. போலியருட்பா மறுப்பு
24. மித்தியாவாத நிரசனம்
25. புலோலி பசுபதீச்சரப் பெருமான் திருவூஞ்சல்
26. கதிர்காம சுவாமிகள் கீர்த்தனை
27. தனிப்பாமாலைகள்.

**நாவலர் உரையெழுதி வெளியிட்ட நூல்கள்**

1. திருமுருகாற்றுப்படை
2. கோயிற் புராணம்
3. சைவசமயநெறி
4. ஆத்திசூடி
5. கொன்றை வேந்தன்
6. வாக்குண்டாம்
7. நன்னெறி
8. நல்வழி

**நாவலர் பரிசோதித்துப் பதிப்பித்த நூல்கள் நாற்பதுக்கும் மேலானவை.**

**கடந்த ஆண்டுகளில் விருது பெற்ற அமைப்பு**

| | | |
|---|---|---|
| இலங்கை, யாழ்ப்பாணம், சைவபரிபாலன சபை | (தோற்றம் 1888) | - 2008 |
| இலங்கை, கொழும்பு, விவேகானந்த சபை | (தோற்றம் 1902) | - 2009 |
| இலங்கை, ஈழத்துச் சிதம்பரம், மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை | (தோற்றம் 1926) | - 2010. |

கருள்விரவு தலைக்கழிக்கும் கண்மணியும் வெண்ணீறும்
பொருள்விரவும் ஐந்தெழுத்தும் பொருளாகக் கொண்(டு) உவப்போன்
தெருள்விரவு சுத்த சைவ சித்தாந்தப் பெருஞ்செல்வன்
அருள்விரவு பரவுபுகழ் ஆறுமுக நாவலனே.

-மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை-

# வருடாந்த திருவாசக விழா- 2011

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடாத்தும் வருடாந்த திருவாசகவிழா 2012 தை 06ஆந் திகதி வெள்ளிக் கிழமை நடைபெறவுள்ளது.

செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறும் விஷேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து, ஆலயத்திலிருந்து நால்வர் திருவுருவப் படமும், திருவாசக ஏடுகளும் திருவாசக பாராயணத்துடன் ஊர் வலமாக ஆச்சிரமத்திற்கு எடுத்து வரப்பட்டு, நல்லை ஆதீன முதல்வரின் ஆசியுரையுடன் ஆரம்பமாகும்.

## சிறப்பு நிகழ்வுகள்

மறவனூர் T.M. வாசகர் குழுவினரின் மங்கள இசை
பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களின்
சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

# இயற்கையுடன் ஒன்றிணைந்த இந்துசமய நடைமுறைகள்

**திரு ஆறு. திருமுருகன்** அவர்கள்

**[வவுனியாவில் இடம்பெற்ற இந்துமாநாட்டின்போது ஆற்றிய உரைவடிவம்]**

இயற்கையை வணங்காதவர்கள் இந்த உலகத்தில் இல்லை. அவர் இந்துவாகவோ கிறிஸ்தவராகவோ இஸ்லாமியராகவோ பௌத்தராகவோ இருக்கலாம். யாவரும் இயற்கையை வணங்கும் வழக்கத்தைக் கொண்டிருக்கின்றனர். இந்துக்கள் இயற்கையில் காணும் அனைத்தையும் கடவுள் எனப் போற்றினர். மண், விண், காற்று, நீர், நெருப்பு என இயற்கை சக்திகள் யாவற்றையும் கடவுளாகப் போற்றினர். கடவுள் இல்லாத இடம் எது? எனக் கேட்டவர்கள் இந்துக்கள். எங்கெங்கு காணினும் சக்தியடா என்றான் பாரதிதாசன்.

கிறிஸ்தவர்கள் டிசம்பர் மாதம் 25ஆம் திகதியாயின் ஒரு மரத்தை நட்டு வழிபாடாற்றுவார்கள். இஸ்லாமியர்கள் பிறையைப் பார்த்து வழிபாடாற்றுவர். இந்த உலகில் உள்ள எல்லா மதங்களும் இயற்கை சார்ந்த வழிபாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. நண்பர் சுகிர்.சிவம் அவர்கள் தனது கட்டுரை ஒன்றில் கூறிய கதை எனது ஞாபகத்திற்கு வருகின்றது. பெரிய கட்டடங்கள் எல்லாவற்றிலும் புறாக்கள் குடிகொண்டிருக்கும். பெரிய சைவக் கோவில் கோபுரம் ஒன்றில் வசித்த புறா முட்டையிட்டுக் குஞ்சு பொரித்திருந்தது. சைவக் கோவிலில் இடம்பெறும் வணக்க முறைமைகள் எல்லாம் இந்தப் புறாக்களுக்கு அத்துப்படி. இப்போது அந்தச் சைவக்கோவில் நிர்வாகிகள் கும்பாபிஷேகம் செய்ய வேண்டும் என்று ஆயத்தம் செய்வதற்காக பெயின்ற் பூசத் தொடங்கினார்கள். அந்தப் புறா குஞ்சுகளுடன் அங்கிருந்து புறப்பட்டது. எங்கே சென்றது என்றால் உயரமான ஒரு சேர்ச்சிற்குள் போய் தங்கியிருந்தது.

சேர்ச்சில் தங்கி இருந்து அங்கு எப்படி வழிபாடு செய்கிறார்கள். எப்படி பைபிள் வாசிக்கிறார்கள் என்பதை எல்லாம் அந்தப் புறாக்கள் பார்த்துத் தெரிந்து கொண்டன. கொஞ்ச நாட்கள் கழியப் பாதிரியார் அந்தக் கோவிலுக்கும் பெயின்ற் பூசுவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டார். இப்போது இந்தப் புறாக்கள் அங்கிருந்து புறப்பட்டு உயரமான மசூதி ஒன்றில் போய் தங்கின. அங்கு போய் எவ்வாறு வழிபாடு இடம்பெறுகின்றன என்பதைப் புறாக்கள் பார்த்தன. சில காலங்களின் பின் அங்கும் பெயின்ற் அடிப்பதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டனர். மீண்டும் புறாக்கள் சைவக் கோவிலுக்குத் திரும்பி வந்தன.

இப்போ இந்தக் குஞ்சுப் புறாக்கள் தாய்ப் புறாக்களைப் பார்த்து, "அம்மா அம்மா, சைவக் கோவில், கிறிஸ்தவக் கோவில், இஸ்லாமியக் கோவில் என எல்லா மதக் கோவில்களிலும் இடம்பெறும் வழிபாடுகளைப் பார்த்தோம். ஆனால் சைவக் கோவிலில் கும்பிட்டவர்கள் கிறிஸ்தவக் கோவிலுக்கோ இஸ்லாமியக் கோவிலுக்கோ வரவில்லை. இதைப்போலவே சமயம் மாறி வணக்கத் தலங்களுக்கு மனிதர்கள் செல்கிறார்கள் இல்லையே? நாங்கள்தான் எல்லாக் கோவிலுக்கும் சென்றுள்ளோம். இது ஏன்" எனக் கேட்டன. அதற்கு அந்தத் தாய்ப்புறா, "அதுதானே நாங்கள் மேலே பறக்கிறோம். மனிதர்கள்

எல்லோரும் கீழே உலவுகின்றனர்" என்று விடைகூறியதாம். அன்பு நிறைய உடையவர்கள் மேலோர் என்பது பாரதியார் வாக்கு.

இந்த உலகத்திலே இயற்கையை மீறி ஒன்றும் நடைபெறுவதில்லை. எங்களுடைய சமயம் இதனைப் புரிந்துகொண்டதனால்தான் வழிபாட்டில் இயற்கைக்கு முதன்மை வழங்கியது. இயற்கையை யாராலும் மீற முடியாது. சுனாமி வருகிறது என்றபோது அதனைப் பற்றிய முன்னெச்சரிக்கைகளை வழங்க முடியுமேதவிர அதனைத் தடுத்து நிறுத்த முடியாது. சூரிய வெளிச்சத்தை மறைப்பதற்குக் கருவியில்லை. மழையை வெல்லுவதற்குக் கருவியில்லை. பூமி அதிர்ச்சியைத் தடுப்பதற்குக் கருவியில்லை. எனவே படைத்தவனால்தான் இவற்றை ஆள முடியும். இயற்கை எம்மை ஆளுகிறது என்பதனால்தான் நிலத்தை, நீரை, காற்றை, ஆகாயத்தை, நெருப்பைக் கண்டு வழிபாடாற்றினார்கள். இவற்றைப் பஞ்ச பூதங்கள் என்றனர். காற்றாடியின் உள்ளேயிருந்து காற்று வருகின்றதா? என்றால் இல்லை. மின்சாரத்தால் எல்லாம் இயங்குகின்றன என்றால். இயற்கையில் இருந்துதான் மின்சாரம் உற்பத்தியாகின்றது. எனவே இயற்கையின் முக்கியத்துவத்தை உணர்ந்த இந்துக்கள் தமது வாழ்வியல் வழிபாட்டிலே பஞ்ச பூதங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள்.

பஞ்ச பூதங்களை அடிப்படையாகக் கொண்டு கலைகளைப் படைத்தார்கள், தத்துவங்களை வகுத்தார்கள், தர்மத்தைச் சொன்னார்கள். எல்லா முடிவுகளுக்கும் கண்ட உண்மைப் பொருளாகப் பஞ்ச பூதங்களைக் கண்டார்கள். நீதி பிழைக்கின்ற போதெல்லாம் பஞ்சபூதங்கள் தண்டிக்கும் என்று நம்பினார்கள். எனவேதான் "வான்முகில் வழாது பெய்க என்று பாடி.. மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்" என்று பாடினர்.

திருவள்ளுவர் கடவுள் வாழ்த்துப் பாடிய பின் வான்சிறப்பு என இயற்கையைத்தான் பாடினார். இந்த உலகிற்கு அடிப்படை மழை. எனவே மழையை முதன்மைப்படுத்திப் பாடினார்.

மாணிக்கவாசகர் இந்த நாடு நன்றாக இருப்பதற்காக வழிபாடாற்றுகிறார்.

பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி
என்றெல்லாம்பாடி,
தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்று பாடினார்.

ஒரு நாடு நன்றாக இருப்பதற்குப் பஞ்ச பூதங்களுடைய துணை அவசியமானது. இந்துக்கள் காலை எழுந்தவுடன் நிலத்தைத் தொட்டுக் கும்பிட்டனர். படிப்பறிவு குறைந்தவர்கள் இன்றும் கும்பிடுகின்றார்கள். நம்மில் பலர் கும்பிடாத காரணத்தினால்தான் இடம்பெயர்ந்து அல்லல் பட்டிருக்கிறார்கள்.

நீரைத் தொட்டுக் கும்பிட்டார்கள். காற்றைக் கும்பிடுவதற்காக சாம்பிராணி ஏற்றினார்கள். தீபமேற்றி வழிபட்டார்கள். அனுட்டானம் பார்க்கின்றபோது வானத்தைப் பார்த்துக் கும்பிட்டார்கள்.

நிலம்தான் எங்கள் எல்லோரையும் தாங்குகின்றது. எங்கள் எல்லோருக்கும் உணவு தருவதும் நிலம்தான். விவசாயி சேற்றுக்குள் கை வைத்தால்தான் நாம் சோற்றுக்குள் கைவைப்போம். இதற்கு நன்றி செலுத்தும் வகையில் பொங்கிப் படைக்கும் வாழ்வியல்

முறையும் எம்மிடையே உண்டு. நிலத்தைக் கௌரவப்படுத்தும் வயலில் விளைச்சல் தருகின்ற நிலத்தில் செருப்புப்போட்டு நடக்கும் பழக்கம் இந்துக்களிடையே இல்லை.

தண்ணீர் உயர்ந்த செல்வம். கோவிலிலே ஒரு மிடறு தீர்த்தம் கொடுப்பார்கள். அதற்கு எல்லோரும் மதிப்பளித்து இரண்டு கைகளாலும் வாங்குவர். அசுத்தத்தைப் போக்குவது தண்ணீர். பாவங்களைப் போக்குவது தண்ணீர். அந்தத் தண்ணீர் எங்களுக்குக் கடவுள். கடலுக்குள் தொழில் செய்யப் போகும் ஒரு மீனவன் கடல்மாதாவைத் தொட்டு வணங்கிவிட்டுத்தான் கடலுக்குள் இறங்குகின்றான்.

காற்றை நம்பித் தொழில் செய்பவன் காற்றை வணங்குகின்றான். இயற்கை சீற்றம் கொண்டால் என்ன ஆகும் என்று உங்கள் எல்லோருக்கும் தெரியும்.

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் நாசா விண்வெளி ஆராய்ச்சி செய்தவர். இந்தியாவில் அவர் கண்டு பிடித்த முதலாவது விண்கலத்திற்கு அக்னி எனப் பெயர் சூட்டினார். இரண்டாவது விண்கலத்திற்கு நந்தி என்று பெயர் சூட்டினார். ஏன் அக்னி என்று -நெருப்பு என்று பெயர் வைக்கின்றீர்கள் எனக் கேட்டபோது "நான் எட்டாம் வகுப்பில் படித்தபோது ஐயர் உபாத்தியாயர் என்று ஒருவர் அக்னி புராணம் என்ற ஒரு புத்தகத்தை எனக்குக் கொடுத்தார். அந்தப் புத்தகத்தைப் படித்த காரணத்தால்தான் ஏவுகணையைக் கண்டுபிடிக்கின்ற ஆற்றல் எனக்குக் கிடைத்தது" என்றார்.

நெருப்புக்கே புராணம் எழுதிய சமயம் எங்கள் இந்து சமயம். சிலப்பதிகாரத்திலே கண்ணகிக்கு முன்னால் நீதி தேவதையாக வந்தது எது என்றால் நெருப்பு. எந்த ஆபத்திலும் தர்மம் பிழைக்கின்றபோது இயற்கை தெய்வமாக வந்து எம்மைக் காக்கும்.

நம்முன்னோர்கள் மண்சார்ந்த தெய்வம். விண் சார்ந்த தெய்வம். மண்ணிற்கும் விண்ணிற்கும் இடைப்பட்ட தெய்வம் என வகுத்தனர். சூரியனைக் கடவுள் என்றனர். இராத்திரியைக் கூடக் கடவுள் என்றனர். நித்திரையைக் கடவுளாகக் கண்டு நித்திராதேவி எனப் போற்றினர்.

காலத்தைக்கூடக் கடவுள் என நம் முன்னோர் போற்றினர். "ரைம்" ஒரு கடவுள். இயமனுக்குக் காலன் எனப் பெயர் வைத்தனர். எனவே இயற்கையோடு கூடிய வாழ்வியல் கோலங்களோடுதான் எங்கள் வழிபாட்டு முறை இணைந்துள்ளது.

சங்கைக் கடவுளாகப் பூசித்தார்கள். சங்கு இடைவிடாது ஓசை எழுப்பிக் கொண்டிருக்கிறது. சங்கைக் காதில் வைத்துப் பார்த்தால் இதனை உணர்ந்து கொள்ள முடியும். "ஓசை ஒலி எலாம் ஆனாய் நீயே" என்றார் அப்பர்.

வாழ்க்கையின் இறுதியில் இறப்பின் பின் உடலை எரிக்கின்றோம். எரிக்கும் போது என்ன நடைபெறுகின்றது? உடலில் இருக்கின்ற தண்ணீர் கீழே போய் ஊற்றோடு சேர்கிறது. உடலில் இருந்த வெப்பம் நெருப்போடு சேரும். உடலில் இருந்து காற்று காற்றோடு சேரும். உடலில் இருந்து மண்ணின் கூறுகள் மண்ணோடு சேரும். பஞ்ச பூதங்களுடைய செயற்பாடு இறப்புக்கு அப்பாலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எரித்த அஸ்தியைக் கடலில் கரைக்கிறார்கள். பாவங்களை எல்லாம் கரைப்பது கடல் யாழ்ப்பாண வைத்தியசாலையின் கழிவுகளை எல்லாம் தாங்கிக் கொள்வது கடல். அது பண்ணைக் கடல். ஒரு நாள் குளிக்காவிட்டால் இந்த உடல் நாறும். எனவே சுத்தம் செய்வது நீர்.

இயற்கையை பல்வேறு வகைகளிலும் போற்றி ஏற்றியவர்கள் இந்துக்கள். இயற்கையை வைத்து இலக்கியங்கள் படைத்தார்கள். உண்மைகளைப் படைத்தார்கள். தத்துவங்கள் படைத்தார்கள். இந்த வகையில் இயற்கைக்கு முதன்மையை வழங்கிய உன்னத சமயமாக இந்து சமயம் விளங்குகின்றது.

# எது பண்பாடு? எது ஆன்மீகம்?

செல்வி செ. ஐடா அவர்கள்

ஆன்மீகமும், பண்பாடும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள். எந்த மண்ணில் ஆன்மீகம் உரமாக விழுகின்றதோ, அந்த மண்ணில்தான் பண்பாடு மரமாக எழும்.

"ஆயிரம் கடவுள்களை நம்புவதைவிட உன்னை நீ நம்புவதே முக்கியம். உன்னை நம்பாமல் ஆயிரம் கடவுள்களை நம்பினால் உன்னை விட நாத்திகன் வேறு எவனுமில்லை" என்றவர் "சுவாமி விவேகானந்தர்".

உலகில் எந்த துறவியிடமிருந்தும் நாம் இப்படிப்பட்ட வார்த்தைகளைக் கேட்டிருக்கவே முடியாது. ஏன் தன்னை ஒருவன் நம்பவேண்டும்? சுவாமிஜி சொல்கின்றார் உன்னுள் இருக்கும் ஆன்மாவை நம்பு. அந்த ஆன்மாவில் தான் இறைவன் இருக்கின்றான். உன்னுள் உள்ள ஆன்மாவை நீ நம்பினால் அதனுள் உறையும் ஆண்டவனை நீ நம்புகின்றாய் என்று பொருள். உன்னை நம்பாது போனால் ஆண்டவனையே நம்பாமல் போகின்றாய்.

சமுதாயம் ஒழுக்கம் சார்ந்து வாழவேண்டும். சுவாமிஜியின் அருளுரை அமுதமும் அதுதான். இம்மண்ணில் விதைத்துள்ள பண்பாட்டுப் பயிர் தரும் கனியும் சுவையும் அதுதான்.

மனித வாழ்க்கையின் பக்கங்கள் இரண்டு. ஒன்று உண்மையாயிருத்தல், மற்றொன்று அன்பாயிருத்தல். இந்த இரண்டுமே ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டிய விரதங்கள். உண்மையாக உள்ளவரிடம் அன்பு உள்ளுக்குள்ளே சுடர்விடும். எனவே உண்மையாயிருப்பதும், அன்பாயிருப்பதுமே முக்கியம்.

ரிஷிகள் வழங்கிய வாசகங்கள் இவை. "சத்யம் வத, தர்மம் சர" உண்மைபேசு; தர்மத்தின்வழி நட; உண்மை பேசி, அறம் சார்ந்து நடப்பதுதான் ஒவ்வொரு மனிதனும் செய்யவேண்டியது. நல்ல எண்ணங்கள் உருவாகவேண்டும். "எண்ணிய முடிதல் வேண்டும்" என்ற பாரதி உடனே அடுத்து சொல்கின்றார். "நல்லவே எண்ணவேண்டும் திண்ணிய நெஞ்சம் வேண்டும், தெளிந்த நல்லறிவு வேண்டும்" இதைவிட வேறு யார் நல்லுரை கூற முடியும்?

தெளிந்த நல்லறிவு முதலில் தேவை. அறிவு வேறு. ஒழுக்கம் வேறு என்று பிரித்துப் பார்க்கலாகாது. சிலர் "அவன் நல்ல அறிவாளி. ஆனால் ஒழுக்கம் கெட்டவனாக இருக்கிறானே" என்பார்கள். நல்ல அறிவுள்ளவன் ஒழுக்கமற்றவனாக இருக்கவே முடியாது. அதனால்தான் நல்லறிவே நல்லொழுக்கம்" என்றார் சாக்ரடீஸ்.

அறிவு என்பது எது? நல்லதின் நலமும், தீயதின் தீமையும் உள்ளுக்குள்ளே உணர்த்துவது எதுவோ, அதுவே அறிவு. இது நம் மண்ணின் சம்பிரதாயம். அப்படியென்றால் அறிவைப் பெற்றவன் நல்லதின் நலன் அறிவான். எனவே நல்லதை நாடிச் செல்வான். தீயதின் தீமை அறிவான். அதை விட்டு விலகி நிற்பான். நல்லதை நாடுவது என்பது தீமையிலிருந்து விலகுவது. அது ஒரு மனிதனுக்குள்ளே உருவெடுப்பதற்கு அடிப்படைக் கருவியாக இருப்பது அறிவு என்றால் அந்த அறிவைப் பெற்றிருக்கும் எவனும் ஒழுக்கம் தவறி வாழவே முடியாது.

சுவாமி விவேகானந்தரின் கருத்துக்களை நீங்கள் தேடித்தேடி ஆழக்கற்றால் உங்களுக்கு ஒரு ரகசியம் புரியும். இந்தியாவின் ஆன்மா மதத்திலே உள்ளது என்றார் சுவாமிஜி. மதம் என்பது எது?

சுவாமிஜி கண்ட மதம் அவர் பேசும் சமயம் அன்பு சார்ந்தது. எல்லா உயிர்களிலும் ஆண்டவனைப் பார்க்கக் கூடியதுதான் ஆன்மீகம். உயிர்கள் அனைத்தையும் ஆரத்தழுவி, அரவணைத்துக்கொள்வதுதான் ஆன்மீகம். விவேகானந்தரின் பாஷை பாரதிக்குப் புரிந்தது. அதனால் பாரதி பேசுகின்றார்.

"மயிலும், குயில்வகை மட்டுமன்றி பார்க்கின்றபொருளெல்லாம் தெய்வம் கண்டேன்"- உயிரோடு இருப்பவை மட்டும் தெய்வம் என்று பாரதி கூறவில்லை. கல்லும்- தெய்வம், மண்ணும்- தெய்வம், மரமும் எனக்குத் தெய்வம் ஏன் தெரியுமா? எல்லாவற்றிலும் இறைவன் இருக்கின்றான். இந்தப் புரிதலுக்கு பெயர்தான் ஆன்மீகம். இப்புரிதல் என் உள்ளத்துக்குள்ளே வந்து சேர்ந்து விட்டால் எனக்குள்ளே விருப்பு, வெறுப்பு, பகை, பேதம், பிளவு, பிணக்கு எதுவும் கிடையாது.

வாழ்க்கை என்பது எதற்காக? தன் பெண்டு, தன் பிள்ளை, சோறு, வீடு, ஊர், சம்பாத்தியம், மற்றும் தான் உண்டு என்று சுயநலத்தில் வாழ்வதல்ல வாழ்க்கை.

ஒழுக்கம் என்பது எது? சுயநலமற்று இருப்பதுதான் ஒழுக்கம் என்று சுவாமிஜி சொல்கின்றார். எவன் ஒருவன் சுயநலத்தோடு நிற்கின்றானோ அவனுக்குள்ளே ஒழுக்கம் வராது. பாவப் பாழ் மண்டபத்தின் முதல் படிக்கட்டே சுயநலம்தான்.

ஒழுக்கமாக இருத்தல் என்பது சுயநலமற்று இருத்தல்தான். சுயநலமற்று இருக்க செய்யவேண்டியது என்ன? பிறர் துயரங்களைத் துடைப்பது ஒரு மனிதனின் கண்களிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீரும் வராமல் காப்பதுதான்.

உலகில் எதுவுமே நிலையற்றது. என் உடம்பு, என் வாழ்வு, நான் தேடிக்கொண்ட உறவுகள் எதுவுமே நிலையில்லை என்று கூறும் பட்டினத்தார் கூறுகின்றார் "ஒன்றென்றிரு"

"ஒன்றென்றிரு" எது? தெய்வம் உண்டென்றிரு. தெய்வம் ஒன்றுதான். எத்தனை மதங்களாக இருந்தாலும், எத்தனை வடிவங்களில் இறைவனை மக்கள் வணங்கினாலும் உள்ளுக்குள் இருக்கக்கூடிய தெய்வம் ஒன்றுதான். அந்த இறைவனை இல்லையென்று ஒருபோதும் கருதாதே. இறைவன்தான் இந்த உலகை இயக்குகின்றார் என்பதைநம்பு.

"ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு உயர் செல்வமெல்லாம் அன்றென்றிரு"- கோடி கோடியாக நீ சேர்த்து வைத்தாலும் அச்செல்வம் உன்னோடு சேர்ந்து வராது என்பதைப் புரிந்துகொள். "பசித்தோர் முகம் பார்"- பசித்தவனுக்கு முன்னே கடவுளைப் பற்றிப் பேசாதே என்று சொன்ன ஒரே ஞானி சுவாமிஜியைத் தவிர வேறு யாரும் கிடையாது. பசித்தவனின் முகம் பார்த்து கரம் நீட்டி உதவுகின்றவனாக நீ வா என்றார்.

அருணகிரிநாதரின் அழகான பாடல் "........ கடவுளைக் கைகூப்பி வணங்கிக் கண்ணீர் மல்க நிற்பதாலேயே கடவுளின் கருணை உனக்கு வந்து சேராது. நீ என்ன செய்யவேண்டும். ஏழைக்கு நோயுற்றவனுக்கு, வறுமைப் பள்ளத்தில் வாடிக்கிடப்பவனுக்குத் தேடிச்சென்று 'மையிற் கதிர் வடிவேலனை வாழ்த்தி வறிஞர்க்கு என்றும் நெய்யிற் பிளவளவேனும் பகிர்மின்கள்" கொடு என்று கூறவில்லை பகிர்ந்துகொள் என்றார்.

ஈட்டிய பொருளை நான் மட்டுமே துய்க்கின்றேன் என்றால் விலங்கிற்கும் எனக்கும் வித்தியாசமே கிடையாது. ஈட்டியதைத் துய்ப்பதோடு நில்லாமல் சமூகத்திற்குப் பகிர்ந்து கொடுக்கின்றேன். இந்தப் பொருளாதார தத்துவத்தைத் தான் அருணகிரிநாதர் கூறுகின்றார்.

எந்த மதத்திலாவது கடவுளைப் பிச்சை எடுப்பவனாக நீங்கள் பார்த்ததுண்டா? இந்து சமயத்தில் மட்டுமே சிவனை பிச்சாண்டியாகப் பார்க்கின்றோம். அவன் எங்கே இருக்கின்றான். சுட்டெரித்துச் சாம்பலாக்கும் இடத்தில்தான் சிவன் நிற்பான். உன் இதயத்தில் இருக்கும் ஆணவம், கன்மம், மாயை என்கின்ற அனைத்தையும் நீ சுட்டெரித்தால் உனக்குள்ளே சிவன் வந்து திருநடனம் புரிவான்.

சிவன் ஏன் பிச்சாண்டியாக வருகின்றான் என்று சிந்தித்தால் ஒரு உண்மை தெரியும். மனிதன் எப்போதுமே வேண்டியதை வைத்துக்கொண்டு வேண்டாததை அடுத்தவனுக்கு பிச்சை கொடுப்பான். இதை இறைவன் அறிந்திருக்கின்றான். அவனே பிச்சாண்டியாக வந்து ஒவ்வொருவர் வீட்டுவாசலிலும் நிற்கின்றார். ஆணவம், கன்மம், மாயை மூன்றும் உனக்கு வேண்டாதவை. அவற்றை என் பிச்சைப் பாத்திரத்தில் போட்டுவிட்டு உனக்கு வேண்டிய அன்பையும், கருணையையும் கொண்டு நீ வாழ் என்று கூறுவதுதான் பிச்சாண்டிக் கோலத்தின் தத்துவம்.

மனித சாதியின் மகத்துவம் என்ன? வெயிலுக்கு ஒதுங்க உதவாத உடம்பு, இறைவனுடைய படைப்பில் மனிதப்படைப்புத்தான் மகத்துவம் மிக்கது என்கின்றோம். ஆனால் ஒரு மரத்திற்கு இருக்கும் பெருமைகூட மனிதனுக்குக் கிடையாது. கோடை வெயில் தாங்கமுடியாமல் தேடி ஓடிவரும் மனிதர்கள் மரத்தை நாடி வருகிறார்கள் இளைப்பாற.

ஆனால் மனிதன்? அருணகிரியார் கேட்கிறார், “வெயிலுக்கு.... உன் நிழலில் நீயே ஒதுங்கமுடியாதே? இதுதான் நீ என்பதைப் புரிந்து கொள்”

எல்லாம் மனிதனுக்காக இருக்க, மனிதன் மட்டும்தான் சுயநலத்திலிருந்து விடுபட்டு சக மனிதர்களின் நலனை நோக்கி நடப்பது எதுவோ அதுதான் “பண்பாடு”

அந்தப் பண்பாட்டைக் கற்றுத் தருவது எதுவோ அதுதான் “ஆன்மீகம்”.



# சைவ நற்சிந்தனை

திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

சிந்திப்பவன் மனிதன். சிந்தனை தோன்றும் இடம் மனம். சிந்திப்பதன்மூலம், மனிதன், நன்மை, தீமை இவையெனப் பிரித்துணருகின்றான். இவ்வாறு சிந்தித்து, நன்மையானவை என உணர்ந்தவற்றை வாழ்க்கையிற் கடைப்பிடிக்கிறான். தீமையானவை எனத் தெரிந்தவற்றை நீக்கி விடுகிறான். இதுவே மனிதத்தன்மை. எனவே, மனம் உள்ளவன் மனிதன் எனப்படுகின்றான். இந்த அருமையான மனத்தை அழுக்கேறாத வண்ணம் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். மனத்தைத் தூய்மையாக வைத்திருத்தலே மிகச் சிறந்த அறம் என்கிறார் வள்ளுவப் பெருமான்.

"மனத்துக் கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற" என்பது தமிழ்மறை.

மனத்தைத் தூய்மையாக வைத்திருப்பது எப்படி? இது மிகக் கடினம் என நாம் கருதிக் கொள்கிறோமே தவிர, உண்மையில் மிக இலகுவானது. நமது உடலில் உள்ள அழுக்குகளை நீர், சவர்க்காரம் கொண்டு கழுவி, அகற்றி உடலைச் சுத்தப்படுத்துவதற்குக் கூடச் சிறிது பணச்செலவு ஏற்படும். அந்தச் செலவுகூட மனத்தைத் தூய்மைப்படுத்துவதற்குத் தேவைப்படாது. நல்ல சிந்தனை, உண்மை பேசுதல், நல்ல கருமங்களை ஆற்றுதல், நல்லவர்களோடு சேர்தல் என்பன மனம் தூய்மையாக இருப்பதால் ஏற்படுபவை.

"அறஞ் செய விரும்பு" என்பது ஔவையார் வாக்கு. அறம் செய்வதற்கும் மனம் தான் முக்கியம். மனம் விரும்பினாலேயே' அறம் செய்ய முடியும். மனம் களங்கமற்றுத் தூய்மையாக இருந்தாலே அங்கு தோன்றுகின்ற எண்ணங்கள், விருப்புக்கள் என்பன நல்லனவாக அமையும்.

எமது மனத்தில் படிந்துவிடக்கூடிய அழுக்குகளை வள்ளுவர் வகைப்படுத்தித் தந்துள்ளார். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்பவையே அந்நான்கும். இந்த நான்கிற்கும், ஒரு கடுகளவேனும் எம் மனத்தில் இடம் பெறுவதற்கு இடமளிக்காது, ஒழுகிவருதல் மேலான அறம் ஆகும். "மனமது செவ்வையானால் மந்திரம் தேவையில்லை" என்றும், "மனம் போல வாழ்வு" என்றும் எம்மத்தியில் நிலவிவரும் முதுமொழிகள் பொருள் நிறைந்தவை. மனிதன் எவ்வாறு நினைக்கின்றானோ அவ்வாறே, அதன் மயம் ஆகின்றான். எனவேதான் நாம் நல்லவற்றையே எப்பொழுதும் நினைக்கவேண்டும்; அப்பொழுதுதான் நல்லவர்களாக வாழலாம் என்று பெரியோர்கள் கூறுகின்றனர். உண்மையில், ஒழுக்கம் என்பது ஒருவனது நினைப்புக்களின் கூட்டு மொத்தமே.

எம் மனத்தில் படிகின்ற அசுத்தங்களில் அழுக்காறு என்பது பொறாமை ஆகும். மனத்தில் பொறாமை ஏற்படாது இருத்தல் சிறந்த அறம். பொறாமையின் தீயவலிமை மிகக்கொடியது. மனித நேயத்தையே அழித்து இறுதியில் பொறாமை கொண்டவனையும் அழித்துவிடும் சக்தி வாய்ந்தது. பொறாமை இடம்பெறும் உள்ளத்தில் அன்பினை இடம்பெறச் செய்தால் நாமும் செம்மையாக வாழ்ந்து, ஏனையோரையும் மகிழ்ச்சியாக வாழ வைக்கலாம்.

மற்றொரு அசுத்தம் அவா என்னும் ஆசையாகும். "ஆசை மிக மிக ஆய்வரும் துன்பங்கள்; ஆசை விட விட ஆனந்தமாமே" என்பது திருமூலர் வாக்கு. ஆசையின் காரணமாகவே பிறர் பொருளைக் கவரும் எண்ணம் தோன்றுகிறது. நிலையான இன்பம் பெறவேண்டுமாகில் ஆசையை அறவே ஒழிக்க வேண்டும். அறத்தால் வருவதே உண்மையான இன்பம் என்பதை உணர்ந்துகொள்ளல் வேண்டும்.

வெகுளி என்பது கோபம், சினம் ஆகும். "சினம் என்னும் சேர்ந்தாரைக்கொல்லி", என்று அதன் கொடுமையான இயல்பு குறிப்பிடப்பட்டுள்ளது. எனவேதான் "ஆறுவது சினம்" என்கிறார் ஔவைப்பிராட்டியார். தணிக்கப்படவேண்டியது கோபம் எனும் தீயையே. கோபம் பாவமாக முடியும் என்பர். எல்லாப் பாவங்களுக்கும் கோபமே அடிப்படைக் காரணம். பாவத்தை விளக்குவதானால் கோபத்தை விலக்க வேண்டும். பிறர் சீண்டினாலும் கோபத்தை வரவழையாத ஆற்றலைத் தரவேண்டும் என்று இறைவனை வேண்டுதல் செய்தல் மேலான பிரார்த்தனை ஆகும். கோபம் செல்லாத இடத்தில் அது தானாக அடங்கிவிடும். தன் கோபம் செலுத்தக்கூடிய இடத்தில் கோபம் வராமல் தடுப்பவனே கோபத்தை அடக்கியவன் என்ற அறத்தைச் செய்தவனாகின்றான். கோபம், தீ; அன்பு மலர் போன்றது. எனவே, கோபம் தோன்றுமிடத்தில் அன்பு மலர மாட்டாது; முகத்தில் புன்னகை தோன்றமாட்டாது. சாந்தியையும்; சமாதானத்தையும் தூரத்தள்ளி விடும். சினம் தன்னை மட்டுமல்ல, தன்னைச் சார்ந்தவர்களையும் அல்லற்படுத்த வல்லது. இப்படிப்பட்ட கொடுமையான கோபத்தை நாம் ஏன் ஆராதிக்க வேண்டும் சிந்தித்துப் பாருங்கள். எவருக்குமே நன்மையைத் தராத கோபத்தை முற்றிலாக நீக்கி விடுதல் மேலான அறம் என்பது சைவநெறி கூறும் உண்மை.

இறைவன் நமக்கு மொழியைத் தந்தது; பேசும் ஆற்றலைத் தந்தது எல்லோருடனும் இன்சொல் பேசி மகிழ்வதற்காகவே. இன்சொல் பேசுவதனால் அறம் பெருகும், அல்லவை தேயும். நல்ல இனிய கனிகள் இருக்கும்போது காய்களை விரும்பி உண்போர் இருப்பார்களா? இருக்கமாட்டார்கள். இனிய சொற்கள் இருக்கக் கூடியதாக இன்னாத சொற்களைப் பேசித் துன்பத்தை அழைப்பது பேதமையாகும். பொறாமை, கோபம், ஆசை, இன்னாச்சொல் என்பன மனித குலத்திற்கு உரித்தானவை அல்ல என்பதை உணர்ந்து, அவற்றை விலக்கி, அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்ற ஐந்து சால்புகளையும் ஆராதித்து உய்வுபெறுவோமாக.

## ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய விஷேட தினங்கள்

**தை**

| | | |
|---|---|---|
| 01.01.2012 | மார்கழி 16 ஞாயிறு | மங்கள புத்தாண்டு ஆரம்பம் |
| 05.01.2012 | மார்கழி 20 வியாழன் | கார்த்திகை விரதம், காலை 10மணி விசேட உற்சவம் |
| 08.01.2012 | மார்கழி 23 ஞாயிறு | திருவாதிரை விரதம், காலை விசேட உற்சவம் |
| 15.01.2012 | தை 01 ஞாயிறு | தைப்பொங்கல் தினம் |

**மாசி**

| | | |
|---|---|---|
| 01.02.2012 | தை 18 புதன் | கார்த்திகை விரததினம், பகல் விசேட உற்சவம் |
| 07.02.2012 | தை 24 செவ்வாய் | தைப்பூசதினம், பகல் விசேட உற்சவம் |
| 20.02.2012 | மாசி 08 திங்கள் | மகாசிவராத்திரி தினம், இரவு நான்குசாம்பூசையும், விசேட உற்சவமும் நடைபெறும் |
| 29.02.2012 | மாசி 16 செவ்வாய் | கார்த்திகைவிரத தினம், பகல் விசேட உற்சவம். |

# அவிநாசி லிங்கேஸ்வரர் சுந்தரர் பெருமான் முதலையுண்ட பாலகனை வரவழைத்த ஆலயம்

**திரு T. ஸ்ரீரெங்கநாதன் அவர்கள்**

கொங்கு நாடு. தமிழகத்தின் மேற்குப் பகுதியில் உள்ள புகழ்பெற்ற நாடு. மிகுந்த பழமை உடையது. இன்றைய கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்களும், சேலம் தருமபுரி மாவட்டங்களின் ஒரு பகுதியும், கரூர், பழனி வட்டங்களையும் குளித்தலை வட்டத்தின் ஒரு பகுதியையும் உள்ளடக்கிய பெரும் பகுதி.

கொங்குநாடு முறையே சேரர்கள், சோழர்கள், பாண்டியர் ஆகியோர் ஆட்சியிலும் பின்னர் கொங்கு சோழர், கொங்குப் பாண்டியர், ஹொய்சளர், மைசூர் மன்னர்கள் ஆகியோர் ஆளுமையிலும் தொடர்ந்து இருந்து வந்தது. கொங்குநாடு 24 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இருந்தது. அதன் ஒரு பகுதி ஆறைநாடு. இந்த ஆறைநாட்டின் ஓர் உட்பிரிவு வடபரிச நாடு. இந்த வடபரிசநாட்டில் அடங்கியதே அவிநாசித் தலமாகும்.

அவிநாசி. மிகப் பழமையான தலம். மிகுந்த வரலாற்றுப் பெருமை உடையது. கொங்குநாட்டில் தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் ஏழு. அவை அவிநாசி, திருமுருகன்பூண்டி பவானி, கூடல், கொடுமுடி, திருச்செங்கோடு, கரூர், திருவெஞ்சமாக்கூடல் ஆகியவையாம் இதில் முதன்மை சான்றது அவிநாசி ஆகும்.

இவ்வூரின் பழம்பெயர் திருப்புக்கொளியூர் ஆகும். இறைவன் ஆடிய அக்கினி தாண்டவம் கண்டு அஞ்சிய தேவர்கள் புகுந்து ஒளிந்துகொள்ளவும், பின்னர் அவர்களுக்கு அருளவும் செய்த இடம். புக்கு ஒளி ஊர் புக்கொளியூர் ஆயிற்று. இப்போதுள்ள பெயர். அவிநாசி ஆகும். விநாசி என்றால் பெருங்கேடு என்று பொருள்படும். அவிநாசி என்றால் பெருங் கேட்டை நீக்க வல்லது என்று பொருள்படும். தேவார காலத்தில் இவ்வூரின் பெயர் திருப்புக் கொளியூர் என்றும், திருக்கோயிலின் பெயர் அவிநாசி என்றும் வழங்கின. காலப்போக்கில் கோவிலை ஒட்டிவளர்ந்த நகரம் அவிநாசி என்று பெயர் பெற்றது. திருப்புக்கொளியூர் இன்று கோவிலின் தெற்கே சிறிது தொலைவில் ஓர் சிற்றூராக உள்ளது.

இவ்வூர் சென்னை கொச்சின் தேசிய நெடும் சாலையில் அமைந்துள்ளது. பவானியில் இருந்து அவிநாசி, வெள்ளலூர், பேரூர் பாலக்காடு வழியாக ஒரு நெடுஞ்சாலை மேற்குக் கடற்கரைத் துறைமுகங்களுக்குச் சென்றது என்று வரலாறு பேசுகிறது. அதுபோலவே இந்நாளிலும் இவ்வூர் பெருவழியில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

நள்ளாற்றின் கரையில் நலம்பெற இலங்கும் திருக்கோயில் கிழக்கு நோக்கிய சன்னிதி. கோயில் முன்புறம் ஒரே கல்லாலான தீபஸ்தம்பம் உள்ளது. 70 அடி உயரம் உடையது. இதன் அடியில் கிழக்கில் விநாயகரும், மேற்கில் சுந்தரமூர்த்தி சுவாமிகளும், வடபுறத்திலும் தென்புறத்திலும் முதலை வாயில் இருந்து பிள்ளை வெளிப்படும் சிற்பங்களும் உள்ளன. இந்த தீபஸ்தம்பம் கொங்குநாட்டிற்கே சிறப்பாக உரியது. கொங்கு நாட்டில் உள்ள அனைத்துக் கோயில்கள் முன்புறம் இந்த தீபஸ்தம்பம் இருப்பது ஒரு சிறப்பு.

தீபஸ்தம்பத்திற்கு தெற்கே தெப்பக் குளமும் அதன் எதிரில் பாதிரி மரத்து அம்மன் கோவிலும் அதற்குச் சற்றுத் தெற்கே முதலை வாய்ப் பிள்ளையை அழைத்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் கோயிலும், முதலை வாயில் இருந்து சிறுவனை அழைத்த ஏரியும் இன்றும் அப்படியே உள்ளன.

தீபஸ்தம்பத்திற்கு முன்புறம் உள்ள

முன்மண்டபம் 30கற்றூண்கள் கொண்டது. மைசூர் மன்னர் உடையார் ஆட்சியில் கி.பி 1756இல் கட்டப்பட்டது. இதற்குள் கோபுரத்தை ஒட்டி செல்வவிநாயகர் கோயிலும், வடபுறம் ஆலய அலுவலகமும் நாக கன்னிகைத் தீர்த்தமும் அமைந்துள்ளன.

சேர நாட்டு மன்னராகிய சேரமான் பெருமாள் நாயனார் திருவாரூர் வந்து சுந்தரரிடம் நட்புப் பூண்டார். அதனால் சுந்தரர் சேரமான் தோழர் என வழங்கப்பெற்றார். சேரமானும் சுந்தரரும் பல தலங்களைத் தரிசித்துக்கொண்டு மலைநாட்டுக்குச் செல்லலானார்கள். அப்போது காவிரி வெள்ளம் வழிவிடத் திருவையாறு அடைந்து, ஐயர் அப்பரைத் தரிசித்துக்கொண்டு மலைநாட்டுத் திருவஞ்சைக் களம் சென்றனர். சுந்தரர் தம் நண்பர் சேரமானால் பல சிறப்புக்கள் பெற்று தங்கி இருந்தார். பின்னர் தியாகேசர் சன்னிதியை அடைந்து, வணங்கி அருள்விடை பெற்றுப் புறப்பட்டார். சோழநாட்டு பதிகள் பலவும் வணங்கிக் கொண்டு மேல் கொங்கு நாடாகிய வடபரிசாரத்திலுள்ள திருமுருகேசம் (திருமுருகன்பூண்டி) என்னும் முல்லை வனத்தில் பசியுடன் வந்து அமர்ந்தார். சுந்தரர் பசியை அறிந்த அவிநாசியப்பர் ஒரு வேதியர்போல் வேடம்பூண்டு பாக்கு மட்டையில் சம்பாசாதம் முதலியவற்றை வைத்து எடுத்துக்கொண்டு வந்து அளித்து சுந்தரரை உண்ணச் செய்தார். அன்னம் உண்ட சுந்தரர் அன்போடு அன்னம் அளித்த பெரியோரை வணங்கி, நோக்கி ஐயா அவிநாசிக்கு வழி எது? என்றார். அவர் மேற்குத் திசையாகச் செல்லுங்கள் என்று கூறி மறைந்தார். உடனே சுந்தரர் நம்மிடம் வந்தவர் சிவபெருமானே என மகிழ்ந்து அவிநாசி புறப்பட்டார்.

இத்தருணத்தில் திருக்கொள்ளியூரவிநாசியில் அந்தணர்கள் வாழும் அக்கிரகாரத்தில் கங்காதரன் என்னும் ஓர் அந்தணர் பிள்ளைப்பேறு இல்லாமல் வருந்தி அவிநாசிக் கொழுந்தின் வலப்பால் எழுந்தருளிய ஸ்ரீ கருணாலயச் செல்வியை வழிபட்டு ஆறுவருடகாலம் தவமிருந்தார். அம்மையின் திருவருளால் கங்காதர ஐயரின் மனைவி வயிற்றில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு பெற்றோர் அவிநாசிலிங்கம் எனப் பெயரிட்டு அன்னப் பிராசனம், சௌளம் முதலியன செய்தார்கள். நான்கு வயது கடந்து ஐந்தாவது வயது ஆரம்பித்தது. ஒருநாள் காலையில் எதிர்வீட்டு அந்தணச் சிறுவன் ஒருவன் வந்து அவிநாசிலிங்கத்தை விளையாட அழைக்க இருவரும் விளையாடிக்கொண்டு தாமரைக் குளத்திற்குக் குளிக்கச் சென்று நீரில் விளையாடிக்கொண்டிருந்தனர். அச்சமயம் அக்குளத்தில் வசித்துக்கொண்டிருந்த ஒரு முதலை விரைந்து வந்து அவிநாசிலிங்கம் என்ற அந்தணச் சிறுவனைப் பிடித்து விழுங்கிச் சென்றது. உடன் விளையாடிய அந்தணச் சிறுவன் பயந்து கரையேறி வீட்டிற்கு ஓடிவந்து பிள்ளையைக் காணாது தவிக்கும் பெற்றோருக்கு குளத்தில் நிகழ்ந்ததை தெரிவித்தான். பிள்ளையை இழந்த பெற்றோரின் துன்பத்திற்கு அளவே இல்லை. மூன்று ஆண்டுகள் கழிந்தன. கங்காதர ஐயரின் மகனுடன் தாமரைக் குளத்தில் குளிக்கச் சென்ற பையனுக்கு ஏழு வயது ஆயிற்று. அவனது பெற்றோர்கள் அவனுக்கு பூணூல் அணியும் விழா கொண்டாடுகின்றார்கள். அதனைக் கண்ட இறந்த சிறுவனின் தாயார் மிக வருந்திப் புலம்பிக் கொண்டிருந்தார்.

அச்சமயம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்புக்கொளியூரை அடைந்து, அந்தணர்கள் வாழும் வீதி வழியாகச் செல்லும்போது ஒன்றுக் கொன்று எதிராய் அமைந்த இரண்டு வீடுகளில் ஒரு வீட்டில் மங்கல ஒலியையும் மற்றொன்றில் அழுகை ஒலியும் கேட்டார். அங்குள்ள வேதியர்களை நோக்கி, ஒரே வீதியில் இந்த இரண்டு ஒலியும் நிகழ்வதற்கு என்ன காரணம் என வினாவினார். அப்போது அவர்கள் சுந்தரரை வணங்கி மூன்று ஆண்டுகளுக்கு முன்னே இந்த இரண்டுவீட்டுப் புதல்வர்கள் இங்குள்ள தாமரைக் குளத்தில் குளிக்கும்போது ஒருவனை முதலை பிடித்து விழுங்கியது. மற்றவனுக்கு இப்போ இந்த வீட்டில் உபநயனம் நடைபெறும்

ஒலி இது. எதிர் வீட்டில் இறந்த புதல்வனின் தாயாரமும் ஒலி அது என்று கூறினார்.

அத்தன்மையினைக் கேட்டுத் திருவுளம் இரங்கி நின்றார் சுந்தரர். மகனை இழந்து வருந்திக்கொண்டிக்கும் தாயும் தந்தையும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் வந்த செய்தி கேட்டு ஓடி வந்து அவரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார்கள். சுந்தரர் அவர்களை நோக்கி, இன்ப மகனை இழந்தவர்கள் நீங்களா? என வினாவினார். அவர்கள் மீண்டும் அவரை வணங்கி ஆம் அது முன்னே நேர்ந்து கழிந்தது. அது நிற்க அடியேங்கள் நீண்டகாலமாகத் தங்கள் புகழைக் கேட்டுத் தங்களைத் தரிசிக்க விரும்பி இருந்தோம். இறைவன் திருவருளால் தேவரீர் இங்கு எழுந்தருளும்பேறு பெற்றோம் என்று கூறினார்கள். அவர்களின் அன்பில் திளைத்த சுந்தரர் மகனை இழந்த துன்பத்தையும் மறந்து நாம் வந்ததற்கு இவர்கள் மனம் மகிழ்கிறார்கள், ஆதலால் இவர்களின் புதல்வனை அம் முதலை வாயினின்று அழைத்துக் கொடுத்த பின்னரே அவிநாசியப்பர் திருவடிகளைச் சென்று பணிவேன் என்று கூறி முதலைவாய்ப் பிள்ளையை விழுங்கிய குளம் எங்கே உள்ளது? என்று கேட்டு அறிந்து குளக்கரையை அடைந்தார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாமரைக் குளக்கரையில் நின்று கொண்டு மனதை சிவபெருமானிடம் நிறுத்தி தம் திருக்கரத்தில் தாளம் ஏந்தி முதலை முன்னே விழுங்கிய சிறுவனை மீளக்கொண்டு வரும்பொருட்டுத் தம் திருவாயால் "எற்றான் மறக்கேன்" என்று தொடங்கும் தேவாரத் திருப்பதிகத்தைப் பாட ஆரம்பித்தார். அதில்,

"உரைப்பார் உரையுகந்து உள்கவல்லார் தங்கள் உச்சியாய்
அரைக்கா டரவாஆதியும் அந்தமும் ஆயினாய்
புரைக்காட்டு சோலைப் புக்கொளி யூரவிநாசியே
கரைக் காண் முதலையைப் பிள்ளையை தரச்சொல்லு காலனையே"

என வரும் நான்காவது திருப்பாட்டு முடியுமுன்னே வறண்டு கிடந்த தாமரைக் குளத்திலே மழைபெய்து நீர் மிகவும் நிரம்பி தாமரை மலர முதலையானது கரையை நெருங்கிவர உருத்திரன் தாதுவை உண்டு பண்ண, பிரம்மன் உருவத்தை உண்டாக்க, யமன் உயிரைக் கொடுக்க, திருமால் உடலை வளரும்படி செய்ய முதலை புதல்வனைக் கரையில் மூன்று ஆண்டுகளின் வளர்ச்சியும் உடையதாக உமிழ்ந்து உடனே மறைந்தது. அதனைக் கண்ட தேவர்கள் மலர்மாரி பொழிந்தார்கள். மக்கள் அதுகண்டு அதிசயித்தனர்.

அப்போது அன்புகொண்டு மனம் உருகிய தாய் ஓடிச் சென்று அப்புதல்வனை வாரியெடுத்துக்கொண்டு வந்து கணவனுடன் சுந்தரர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். சுந்தரர் அப்புதல்வனையும் அழைத்துக் கொண்டு ஆலயம் சென்று அவிநாசியப்பரையும், கருணாலயச் செல்வியையும் வணங்கித் திருப்பதிகம் பாடி முடித்து வெளியே வந்து, முதலையுண்டு வெளிவந்த புதல்வனுக்கு மங்கல முரசு ஒலிக்க உபநயனம் நடத்தி வைத்து, மலைநாட்டிற்குப் புறப்பட்டு, துடியலூர் திருப்போரூர் முதலிய புண்ணிய திருத்தலங்களைத் தரிசித்துக்கொண்டு கொடுங்களூரை அடைந்தார்.

அவிநாசியில் முதலை விழுங்கிய பாலனை முன்போல உயிர்பெற்றுவர மீட்டுக் கொடுத்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் வருகின்றார் என்ற செய்திகேட்டு சேரமான் பெருமாள் சுந்தரரை அழைத்து வணங்கி அன்போடு அரண்மனைக்கு அழைத்துச் சென்றார். அரண்மனையில் தங்கியிருந்தபோது ஒருநாள் திருவஞ்சைக்களம் சென்று இறைவனைத் துதித்துப்பாட அப்போது கயிலைப்பெருமான் ஐராவதம் என்ற வெள்ளையானையையும் தேவர்களையும் அனுப்ப அவர்கள் திருவஞ்சைக்களம் வந்து இறைவனின் விருப்பத்தை தெரிவித்து வெள்ளை யானைமீது ஏற்றி கயிலைக்கு அழைத்துச் சென்றனர் சுந்தரமூர்த்தி சுவாமிகளை.

# தைமாத வாராந்த நிகழ்வுகள்

06.01.2012 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

வருடாந்த திருவாசக விழா 2011

13.01.2012 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "பக்தி வலையிற் படுவோன்"

வழங்குபவர் :- யாழ் சின்மய நிறுவனத்தின் பிரம்மசாரி

ஜாக்கிராத் சைதன்ய சுவாமி அவர்கள்

20.01.2012 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை]

27.01.2012 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "ஆர் கொண்டுபோவார்"

வழங்குபவர் :- செஞ்சொற் செம்மல் இரா. கேதீசன் அவர்கள்

29.01.2012 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

# ஞானச்சுடர் தைமாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு ஆறு. திருமுருகன் அவர்கள்

[தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம்]

மதிப்பீட்டுரை :- திரு ஆ. சிவநாதன் அவர்கள்

[அதிபர்]

தை 169ஆவது மலர்

பதிவு இல. QD/14/NEWS/2011

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

